

அழகரந்தாதி

பதிப்பாசிரியர்

மணி. மாறன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

T. 22783

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 542

அழகரந்தாதி

பதிப்பாசிரியர்

மணி. மாறன், எம்.ஏ.,(த), எம்.ஏ.,(வ).,
பி.எல்.ஐ.எஸ்.,

தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2012] [விலை: ரூ. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	அழகரந்தாதி
பதிப்பாசிரியர்	:	மணி. மாறன், தமிழ்ப்பண்டிதர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	542
ISBN	:	978-81921829-7-1
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2012
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	120
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ.100-00

வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிக் களஞ்சியமாய்த் திகழும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள தமிழ்த் துறையின்கண் 7700க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன. இச்சுவடிகள் நூல்களாகப் பதிப்பிக்கப்பெற்று நூலக வெளியீடுகளாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்பெற்று வருகின்றது. மிகச் சிறந்த இலக்கண, இலக்கிய, மருத்துவ, சோதிட நூல்கள் வெளியிடப்பெற்று, அவை மக்களுக்கு நன்மை தந்து வருகின்றன.

அவ்வகையில் இந்நூலகத்தில் அமைந்த அழகரந்தாதி எனும் சுவடி, திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் அழகரைப்பற்றி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய அட்ட பிரபந்தங்களுள் ஒன்றாகும். இச்சுவடி நூல் நூலகத் தமிழ்ப்பண்டிதர் மணி. மாறன் அவர்களால் சிறப்பான முறையில் பதிப்பிக்கப் பெற்று, நூலகத்தின் வெளியீடாக மலர்கின்றது. பாடல், அதன் சொற்பொருள், விளக்கம் என எளியமுறையில் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இத்தகு நூல்கள் வெளிவர நிதியுதவி நல்கும் நடுவணரசிற்கு நன்றிகள். இப்பதிப்புப் பணிகள் திறம்பட நடைபெற துணை நிற்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் பொது (பொ) மற்றும் நூலக நிருவாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் திரு. ஆர். முத்துக்குமரசாமி அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும், நூலகக் கணினிப் பிரிவினருக்கும் மற்றும் இந்நூல் வெளிவர துணைநின்ற ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

கா. பாஸ்கரன், இ. ஆ. ப.,

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்

இயக்குநர்.

தஞ்சாவூர்,

22-09-2012

பதிப்பாசிரியர் உரை

தமிழில் எழுந்த சிற்றிலக்கியங்கள் 96 வகைகளுள், பிரபந்தம் என்பதும் ஒன்றாகும். அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப்பண்டிதன் என்ற பழமொழி தமிழிலே வழங்கப்படுவதுண்டு. அத்தகு சிறப்பு வாய்ந்த நூல் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் படைத்தளித்த அஷ்டப் பிரபந்தம் நூலாகும். அவர் இயற்றிய பிரபந்தங்கள் எட்டனுள் அழகரந்தாதியும் ஒன்றாகும். இந்த அழகரந்தாதி நம் நூலகத்தின் தமிழ்த்துறையில், ஓலைச்சுவடி நூலாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வெளியீட்டு மேலாளராகப் பணிசெய்து ஓய்வு பெற்ற திரு. அ.பஞ்சநாதன் அவர்களும், நிருவாக அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சாமி. சிவஞானம் அவர்களும் கேட்டுக் கொண்டதற் கிணங்க, அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. கோசலராமன், இ. ஆ. ப., அவர்கள் அழகரந்தாதி நூலினை பதிப்பித்து வழங்கும்படி எனக்கு ஆணை வழங்கியிருந்தார்கள் அவர்களுக்கு என் நன்றிகள்.

இந்நூல் சிறப்பாக வெளிவரத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தந்து, இப்பணிகளுக்கு பெரும் ஊக்கமளித்து வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர் திருமிகு. **கா.பாஸ்கரன்**, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் பொது (பொ) திரு. ஆர்.முத்துக்குமரசாமி அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

மணி. மாறன்,
தமிழ்ப் பண்டிதர்.

முன்னுரை

இயற்கை அன்னையின் கொடைகளாக அமைந்த மலைவளம், சோலை வளம், நீர் வளம், நிலவளம் ஆகிய அனைத்து வளங்களும் ஒருங்கே பெற்றுத் திகழ்வது அழகர்மலை, சங்க நூலான பரிபாடலில் இத்திருமலையை திருமாலின் திருமேனி யாகவே கருதி அம்மலை நோக்கி மக்கள் தொழுகின்றனர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

"அரிதிற்பெறு துறக்க மாலிருங் குன்றம்" (15:17)

"சோலையொடு தொடர்மொழி மாலிருங்குன்றம்" (15:23)

என பரிபாடலின் பதினைந்தாம் பாடல், அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து நிலத்தைத் தாங்கும் சக்கரவாள முதலாகத் தொல்லிசைப்புலவர்கள் ஆராய்ந்துரைத்த மலைகள் பற்பல உள்ளன. அப்பலவற்றுள்ளும் பசி வெம்மை பற்றி நிறைந்த பயன் பலவும் தரும் மலைகள் சிலவேயாகும். அவற்றுள்ளும் தெய்வங்கள் விரும்பும் மலைகள் ஒருசிலவே உள்ளன. அவற்றுக்கும் மாயோனையும் பல தேவனையும் தாங்கும் திருமாலிருங்குன்றம் சிறந்ததாகும் என்று அம்மலையின் சிறப்பு கூறுவதோடு அல்லாமல், அம்மலையில் உறையும் இறைவனின் திருவருளைப் பெற முயலுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இதே போல சிலப்பதிகாரத்திலும் இங்குள்ள இறைவர் பற்றியும், தீர்த்தங்கள் பற்றியும் சிறப்பித்துக் கூறுகின்றது. பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியவர்களின் பாசுரங்களில் இம்மலை திருமாலுக்குரியது, இக்கோயில் திருமாலுக்குரியது என்னும் கருத்து பேசப்படுகிறது.

ஆயிரம் தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனன் ஆளும் மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே.

என்று பெரியாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய சிறப்புக்குரியது அழகர்மலை. பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் இக்கோயிலைப் பாடிய அருந்தலம் அழகர்மலை, அழகர் மலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இடைக்காடர் என்பவரால் மருத்துவ மன்றம் ஏற்படுத்தப்பட்டு சித்தவைத்திய சாத்திரங்கள் வளர்க்கப்பட்டதாகச் செய்திகள் காணக்கிடைக்கின்றன.

கிளரொலி இளமை கெடுவதன் முன்னம்
வளரொலி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை
தளர்வில ராகில் சார்வது சதிரே.

என நம்மாழ்வார் திருவாய்மொழி மொழிந்த பெருமைக்குரியது திருமாலிருஞ்சோலைத் தலம்.

ஆழ்வார்களுக்குப் பின்னர் இத்தலம் குறித்துச் சிற்றிலக்கியங்கள் பல எழுந்தன. அவற்றுள் ஒன்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய அழகர் அந்தாதி ஒன்றாகும். இந்த அழகர் அந்தாதி சுவடி நம் நூலகத்தில் உள்ளது. அதில் உள்ள பாடல்கள்தான் இப்பதிப்பில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற நூல்கள், வேம்பத்தூர் கவிகுஞ்சரம் ஐயரின் "அழகர் கலம்பகம்", பலபட்டடைச் சொக்கநாதப் புலவரின் "அழகர் பிள்ளை விடுதூது", வேம்பத்தூர் சாமி கவிகாளருத்திரரின் "அழகர் பிள்ளைத் தமிழ்", பெருங்கரை கவிகுஞ்சர பாரதியின் "அழகர் குறவஞ்சி", ஐம்புலித்தூர் கிருஷ்ண ஐயங்காரின் "சோலைமலைக் குறவஞ்சி", நெற்குப்பை பைரவ ஐயரின் "திருமாலிருஞ்சோலை பிள்ளைத் தமிழ்", மதுரகவி சீனிவாச ஐயங்காரின் "அலங்காரர் மாலை" போன்ற நூல்களாகும்.

அழகர் கோயில் மதுரைக்கு வடகிழக்கே 20கி.மீ. தொலைவில் உள்ளது. ஆழ்வார்களால் பாடல்பெற்ற வையைத் திருப்பதிகளில் ஒன்று அழகர்கோயில் ஆகும். இக்கோயில் மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் அமைந்துள்ளது. கோயிலில்

பணிசெய்யும் பணியாளர்களின் குடியிருப்புகளைத் தவிர மக்கள் வசிக்கும் ஊர்ப்பகுதி எதுவும் இக்கோயிலை ஒட்டி இல்லை.

பாண்டிய நாட்டில் அரசு தோன்றியது முதல் அழகர் கோயிலும் அதனையடுத்து இருந்த அழகாபுரியும் புகழ்பெற்று விளங்கின. பல பாண்டிய மன்னர்கள் இக்கோயிலுக்குப் பலவகைத் திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். இங்குள்ள கோட்டையினுள் பல பாண்டிய மன்னர்கள் பெரும் படையுடன் தங்கியிருந்தனர் எனும் செய்தியினை அறியமுடிகின்றது.

பாண்டி மண்டலத்திருந்த உள்நாடுகளுள் ஒன்று இரணிய முட்ட நாடு என்பதாகும். அந்நாடு மதுரை மாநகருக்கு வடகிழக்கே உள்ள ஆனைமலை, அழகர்கோயில் (திருமாலிருஞ்சோலை) முதலான ஊர்களைக் கொண்ட ஒரு பெரும் நிலப்பரப்பு என்பதும் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. அழகர்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டும், கீழரணிய முட்டத்துத் திருமாலிருஞ்சோலை எனக் குறிப்பிடுகின்றது.

இங்கு தென்கிழக்கிலிருந்து வடகிழக்குத் திசைநோக்கிச் செல்லும் ஒரு மலையும், கிழக்கேயிருந்து வரும் ஒரு மலையும், சந்திக்கின்ற இடத்தில் தென்திசையில் மலைச்சரிவில் கிழக்கு நோக்கியதாக அழகர்கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்கு மேற்கிலும், வடக்கிலும் மலைப்பகுதிகள் உள்ளன. இக்கோயில் இரண்டு கோட்டைகளால் சூழப்பட்டுள்ளது. நடுவில் அமைந்துள்ள உட்கோட்டை இரணியன் கோட்டை என்றும், வெளிக்கோட்டை அழகாபுரிக்கோட்டை என்றும் அழைக்கப்படுகின்றன.

இரணியன் கோட்டை நளமகராஜன் கோட்டை என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டு கோட்டைகளும் ஏறத்தாழ நூறு ஏக்கர் பரப்பளவினைக் கொண்டு திகழ்கின்றது. வட பக்கத்தில் உள்ள உட்கோட்டை நான்கு மடங்கு பெரிதாக உள்ளது. மதுரையிலிருந்து வடக்கு நோக்கி வரும் சாலையும், மேலூரிலிருந்து மேற்கு நோக்கி வரும் சாலையும் வெளிக் கோட்டையின் தெற்கு வாயிலில் சந்திக்கின்றன.

இத்தலத்தினைப் பெரியாழ்வார் மதில்சூழ் சோலைமலை என்று பாடுவதால், அவர் காலத்திலேயே இக்கோயிலைச் சுற்றி ஒரு மதில் இருந்திருப்பது தெரியவருகிறது. தொல்லியல் அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி கி. பி. 14ஆம் நூற்றாண்டில் வாணாதிராயர்களால் அழகர்கோயில் வெளிக்கோட்டை கட்டப்பட்டிருக்கலாம் என்கிறார்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் தமிழகத்தின் சில பகுதிகளை ஆண்ட வாணாதிராயர்கள இக்கோயிலின் மீது கொண்டிருந்த பற்றினால் இக்கோயில் இறைவனுக்குப் பாசுரங்களில் வழங்கும் பெயரினையே தங்களுக்கும் சூடிக் கொண்டனர்.

திருமாலிருஞ்சோலைநின்றான்,மாவலிவாணாதிராயன், உறங்காவில்லிதாசனான சமரகோலாகலன் (கி.பி. 1428-1477)

சுந்தரத்தோளுடையான் மகாபலி வாணாதிராயன் (கி.பி.1468-1488)

இறந்த காலம் எடுத்த சுந்தரத் தோளுடையான் மகாபலி வாணாதிராயன் (கி. பி. 1515-1533) ஆகிய பெயர்கள் கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது.

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் மாவலி வாணாதிராயன் கல்வெட்டு அழகர் திருவுள்ளம் என்ற தொடருடன் முடிகிறது. அழகர்கோயிலில் உள்ள கல்வெட்டு மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன் ஆணையின்படி சோமயாஜி என்பவர் இக்கோயில் உபானம் முதல் ஸ்தூபி வரை திருப்பணி செய்ததைக் குறிப்பிடுகிறது.

இரண்டு கோட்டைப் பகுதிகள் உள்ளன என்பதை முன்னர் கண்டோம். வெளிக்கோட்டைப் பகுதியில் மரங்களே நிறைந்துள்ளன. இக்கோயில் கல்வெட்டு மூலம் பிள்ளைப் பல்லவராயன் என்பவன் இப்பகுதியில் சாமந்த நாராயண சதுர்வேதி மங்கலம் என்ற அக்ரஹாரத்தை அமைத்துக் கொடுத்தான் என்பது தெரியவருகின்றது. அக்ரஹாரத்தில்

குடியிருந்தவர்களின் வழியில் வந்தவர்கள் இப்போது விழாக் காலங்களில் மட்டுமே கோயில் நிருவாகத்தால் கட்டப்பட்ட வீடுகளில் வந்து தங்கிவிட்டுச் செல்கின்றனர். வெளிக்கோட்டையின் வடபகுதியில் கோயில் அலுவலர்கள் தங்கும் விடுதியும் உள்ளது.

இப்பகுதியில் சிதைவுற்ற ஒரு மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தின் ஒரு தூணில் திருமலை நாயக்கரின் சிலை உள்ளது. எனவே இம்மண்டபம் அவரால் கட்டப்பட்டிருக்கலாம். சாலையின் கீழ்ப்புறத்தில் தேர்மண்டபம் உள்ளது. இக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டால் அமைந்த நாராயணன் என்பது இக்கோயில் தேரின் பெயர் என்றும், தேரோடும் வீதிகளில் ஒன்றின் பெயர் தியாகஞ் சிறியான் திருவீதி என்பதும் தெரியவருகின்றது.

தேர் மண்டபத்தினைத் தாண்டிச் சென்றால் உட்கோட்டையின் தெற்கு வாசலான இரணியன் வாசலை அடையலாம். இவ்வாசலைத் தாண்டி உள்ளே நுழைந்தால் இடப்புறம் இருப்பது யானை வாகன மண்டபம் ஆகும். இதையும் தாண்டி வடக்கே சென்றால் இக்கோயிலின் இராஜகோபுர வாசலை அடையலாம். இக்கோபுர வாசலில் கிருஷ்ணதேவ மகாராஜாவின் (கி.பி.1513) கல்வெட்டு உள்ளது. எனவே இக்கோபுரம் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. இதற்கு முன்னர் பக்கச் சுவர்களோடு கூடிய இரட்டைக் கதவுகள் உள்ளன. இவையே பதினெட்டாம் படிக் கருப்பசாமியாக வழிபடப்பெறுகின்றது. இதன் எதிரில் உள்ள பதினாறுகால் மண்டபம், சமய மண்டபம் அல்லது ஆண்டாள் மண்டபம் எனப்படுகிறது. இதனை அடுத்து வடபுறத்தில் உள்ளது கொண்டப்ப நாயக்கர் மண்டபம் ஆகும். இதனையடுத்து வடக்கே முப்பதடி தூரத்தில் மலை செங்குத்தாக நிற்கிறது. மேற்கே இராஜகோபுர மதிலின் வட எல்லையில் அம்மதிற்சுவர் உடைக்கப்பட்டு ஒரு வாசல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாசலே மக்கள் கோயிலுக்குள் செல்லப் பயன்படுத்தும் வாசல் ஆகும். இதற்கு வண்டி வாசல் என்று பெயர்.

இராஜகோபுர மதிலுக்குள் காணப்படும் பரந்தவெளி யதிராஜன் திருமுற்றம் எனப்படும். இம்முற்றத்தின் நடுவில் அமைந்துள்ள மிகப் பெரிய மண்டபம் திருக்கலியாண மண்டபம் ஆகும். இம்மண்டபத்தை விஜயநகர மன்னர் காலச்சிற்பங்கள் அணி செய்கின்றன. இரணிய வதம் செய்யும் நரசிம்மரின் இரண்டு தோற்றங்கள், குழல் ஊதும் வேணுகோபாலன், திரி விக்ரமன், பூமி வராகர், ரதி, மன்மதன் ஆகிய சிற்பங்கள் இம்மண்டபத்தில் உள்ளன. அவற்றுள் சில உடைக்கப்பட்டுள்ளன. 1757ஆம் ஆண்டில் ஹைதர் அலி அழகர்கோயில் கலியாண மஹாலில் உள்ள விக்கிரகங்களை உடைத்துக் கோயிலில் இருந்த ஏராளமான பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டான் என்று ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு கூறுகின்றது.

யதிராஜன் திருமுற்றத்தில் தென்கிழக்கு மூலையில் உள்ளது கோடைத்திருநாள் மண்டபம் ஆகும். இதன் மேற்கில் உடையவர், திருக்கச்சி நம்பி ஆகியோரின் சன்னதிகள் உள்ளன. யதிராஜன் திருமுற்றத்துக்கு வடக்கே மேற்காரை வட்டவடிவில் அமைந்த ராம களஞ்சியம், லட்சுமண களஞ்சியம் எனப்படும் இரண்டு பெரிய கட்டிடங்கள் உள்ளன.

திருக்கலியாண மண்டபத்தை அடுத்து மேற்கே தொண்டைமான் கோபுரவாசல் உள்ளது. இவ்வாசலில் இரண்டு துவாரபாலகர் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. மதிலுடன் கூடிய இக்கோபுரம் தொண்டைமான் கோபுரம் எனப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டால் செழுவத்தூர் காலிங்கராயர் மகன் தொண்டைமானார் என்பவர் இதனைக் கட்டியவர் எனத் தெரியவருகின்றது. இக்கோபுர வாசல் வழியே கோயிலுக்குள் நுழைந்தால் , வலதுபுறத்தில் உயரமாக அமைந்துள்ள ஒரு மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் சுவரில் உள்ள கல்வெட்டால், இதனை சுந்தர பாண்டியன் கட்டினான் என்றும், இதற்கு பொன்மேய்ந்த பெருமாள் மண்டபம் என்பது பெயர் என்றும் தெரியவருகின்றது. இம்மண்டபத்தின் வடபுறத்தில் கிருஷ்ணர் சன்னிதி உள்ளது. உயரமான மண்டபத்தில் இருப்பதால் இது மேட்டுக்கிருஷ்ணன் கோயில் என்றழைக்கப்படுகிறது.

தொண்டைமான் கோபுர வாயிலிலிருந்து நேராகச் சென்றால் கொடிக்கம்பத்தினை அடுத்து ஆரியன் மண்டபம் உள்ளது. இம்மண்டபமும் மிக உயரமானதே ஆகும். சிற்பத்திறன் மிகுந்த இரண்டு யாளிகள் இம்மண்டபத்துத் தூண்களில் உள்ளன. உயரமாக இருப்பதால் இது படியேற்ற மண்டபம் என்றும் அழைக்கப் படுகின்றது. தோமராசய்யன் மகன் ராகவராஜா என்பவன் இம்மண்டபத்தைக் கட்டியதாக இங்குள்ள கல்வெட்டுச் செய்தியால் அறியமுடிகிறது.

படியேற்ற மண்டபத்தைத் தாண்டிச்சென்றால் இக் கோயிலின் மகாமண்டபமான முனையதரையன் திருமண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்திற்கு அலங்காரன் திருமண்டபம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. மிழலைக் கூற்றத்து நடுவிற்கூறு புள்ளூர்க்குற முனையதரையனான பொன்பற்றியுடையான் மொன்னைப்பிரான் விரத முடித்த பெருமாள் என்பவன் இம்மண்டபத்தினைக் கட்டிய செய்தியினை இங்குள்ள கல்வெட்டால் அறியமுடிகிறது.

அலங்காரன் திருமண்டபத்தை அடுத்துள்ள சிறிய அர்த்த மண்டபத்தைத் தாண்டிச் சென்றால் வட்டவடிவமான கருவறையை அடையலாம். நங்கள் குன்றம் என்றழைக்கப்படும் இக் கருவறையின் உள்ளே ஒரு சிறிய வட்டவடிவிலான திருச்சுற்றும் உண்டு. கருவறையில் சீதேவி, பூதேவி ஆகிய இரண்டு தேவியருடன், நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் அழகர் என்றும் சுந்தரராஜன் என்றும் அழைக்கப்பெறும் இறைவன் காட்சி தருகிறார். வலது மேற்கையில் சக்கரம், இடது மேற்கையில் சங்கு, வலது கிழ்க்கையில் கதை, இடது கீழ்க்கையில் சாரிங்கவில், இடையில் நாந்தகவாள் ஆகியவை கொண்டு திகழ்கிறார்.

முனையதரையன் திருமண்டபத்தில் இருந்து கருவறையைச் சுற்றி வரும் முதல் திருச்சுற்றிலிருந்து இக்கோயிலின் வட்ட வடிவக் கருவறை மேல் உள்ள வட்டவடிவ விமானத்தைக் காணலாம். இவ்விமானத்துக்கு சோமசந்த விமானம் என்று பெயர். கிழக்கு நோக்கி படியேற்ற மண்டபத்துக்குள் வந்தால், அங்கிருந்து

இரண்டாம் திருச்சுற்றுக்குள் செல்லலாம். இவ்விரண்டாம் திருச்சுற்றுக்குத் தென்திசையில் உள்ளது கலியாண சுந்தரவள்ளித் தாயார் சன்னிதி. இத்தாயார் சன்னிதியின் பின்புறம் உள்ளது, திருவாழி ஆழ்வார் எனப்படும் சுதர்சனர் சன்னிதி, இரண்டாம் திருச்சுற்றில் தென்பகுதியில் வடதிசையில் உள்ள தூண்களில் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்தவர்களின் சிலைகள் உள்ளன.

இரண்டாம் திருச்சுற்றில் வடக்கு நோக்கி திரும்பும் இடத்தில் பள்ளியறை உள்ளது. பள்ளியறைக்கு வடக்கே கருவறைக்கு நேர் பின்னாக உயர்ந்த் ஒரு மண்டபத்தில் கிழக்கு நோக்கி யோக நரசிம்மர் அமர்ந்த நிலையில் உள்ளார். இவருக்கு உக்கிர நரசிம்மர், ஜ்வாலா நரசிம்மர் என்ற பெயர்களும் உண்டு. இரண்டாம் திருச்சுற்றில் கிழக்கு நோக்கித் திரும்பும் இடத்தில் ஆண்டாள் சன்னிதியும், அதற்கு முன்னால் யாகசாலையும், வாகன மண்டபங்களும், கலியாண மண்டபத்திலிருந்து கோயிலைச் சுற்றிவரும் நான்கு வீதிகளும் ஆடி வீதி என்றும் யதிராஜன் திருவீதி என்றும் வழங்கப்பெறும். தென்திசையில் உள்ள ஆடி வீதியில் கோயில் இராஜகோபுர மதிலில் ஒரு வாயில் உள்ளது. இவ்வாயிலின் வழியே தெற்கு நோக்கி இறங்கினால் இக்கோயில் வசந்த மண்டபம் அமைந்துள்ளது. வசந்த மண்டபத்தின் நடுவே நீராழி மண்டபம் உள்ளது. இவ்வசந்த மண்டபத்தின் மேற்கூரை முழுவதும் நாயக்கர் கால இராமாயண கதையினைக் கூறும் ஓவியங்கள் காணப் படுகின்றன.

வசந்த மண்டபத்திற்குக் கிழக்கே சற்றுத் தொலைவில் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே நின்று போன ஒரு கோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இதில் காணப்படும் ஒரு கல்வெட்டு விஜயநகர மன்னர்களின் ஆரவீடு வம்சத்து மன்னர்களைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1546ஆம் ஆண்டு ஆகும். இக்கோபுரத்திற்கு ராயகோபுரம் என்று பெயர்.

வெளிக்கோட்டைக்கு மேற்புறத்தில் உள்ள இக்கோயிலுக் குரிய ஒரு குளம் ஆராமத்துக் குளம் என்றழைக்கப்படுகின்றது. மலையின் மீதிருந்து வரும் சிலம்பாறு, இக்கோயில் மேற்கு மதிலை ஒட்டி இக்கோயிலுக்கு அருகில் ஓடுகின்றது. கோயிலுக்குத் தெற்கேயுள்ள ஆராமத்துக் குளத்தில் பாய்ந்து, அதன்பின்

சிற்றோடை போல மதுரையை நோக்கிச் செல்லும் சாலையை ஒட்டிச்செல்கிறது. பதினெட்டாம்படிச் சன்னிதிக்கு எதிரில் இருந்த குளம் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்டு விட்டது. கோயில் வடக்குக் கோட்டைச் சுவரை அடுத்து மலைமீது செல்லும் சிறுபாதையினை அடுத்துள்ள குளம் நாராயண ராயர் தெப்பக்குளம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

கோயிலுக்குத் தெற்கே பொய்கை கரைப்பட்டி எனும் ஊரில் உள்ள தெப்பக்குளமும் இக்கோயிலுக்கு உரியதாகும். கோயிலின் வடபுறத்தில் மலைமீது செல்லும் சிறுபாதையில் இரண்டு கல் தொலைவு சென்றால் மலைமீது மாதவி மண்டபம் என்ற பெயரில் ஒரு மண்டபம் உள்ளது. ஐப்பசி மாதம் தலையருவித் திருவிழாவில் இக்கோயில் இறைவன் அம்மண்டபத்திற்குச் சென்று மலை மீதிருந்து வரும் சிலம்பாற்றில் நீராடுவார்.

அந்தாதி இலக்கியம்

அந்தாதி இலக்கியம் என்பது, 96 வகைப் பிரபந்தங்கள் என்று தமிழ் மொழியில் தொகைப்படுத்திக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ஆகும். அந்தாதி என்னும் சொல் அந்தம் – ஆதி என்று பிரியும். அந்தம் முடிவு என்றும், ஆதி தொடக்கம் என்றும் பொருள்படும். அதனால் ஒன்றின் முடிவு மற்றொன்றின் தொடக்கமாக அமைவது என்பது இப்பெயர்ப் பொருளாகும்.

அந்தாதி, அந்தாதித் தொடை என்றும் செய்யுள் அந்தாதி என்றும் பாகுபடும். ஒரு செய்யுளின் இரண்டடிக்கு இடையே அமைந்துள்ள அந்தாதி அமைப்பு அந்தாதித் தொடை என்றும், ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமைவது செய்யுளந்தாதி என்றும் சொல்லப்படும். செய்யுளந்தாதியில் ஒரு செய்யுளில் முடிவிலுள்ள எழுத்தோ அசையோ, சீரோ, சொல்லோ, அடியோ அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமையும். இவற்றுள் எது அமைகிறதோ அதன் பெயரால் அந்த அந்தாதி பெயர்பெறும். சான்றாக, ஒரு பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் தொடக்கத்தில் அமைகின்றபோது அந்தச் சொல்லமைப்பு, சொல்லந்தாதி எனப்படும்.

எழுதுபொருள், எழுதப்படுபொருள், எழுது கருவிகள் போன்றன பழங்காலத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. அதனால் ஏடெழுதி இலக்கியங்களைப் படிப்பதைவிட மனனம் செய்து படிப்பதைப் பெரிதும் விரும்பினர். விரிவாக எழுதப்படும் செய்திகள், திட்பமும் நுட்பமும் பொருந்தச் செய்யுளாக அமைக்கப் பட்டன. இவ்வாறு அமைக்கப்படும் செய்யுளை முழுதுமாக மனத்திற் கொள்வதற்கு அதன் உறுப்புகளாகிய எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகளும், அவற்றின் வகைகளும் பிறவும் உதவின. இத்தகைய செய்யுட்கள் பலவற்றைத் தொடர்ந்து நினைவிற் கொள்வதற்கு அந்தாதிமுறை பேருதவியாக அமைந்தது.

அந்தாதி யாப்பமைப்பில் நூல்கள் பிற்காலத்தில் தான் தோன்றின என்றாலும், சங்க இலக்கியங்களில் அந்தாதி அமைப்பிற்கான கருக்கள் அமைந்து காணப்படுகின்றன. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறு நூற்றின் தொண்டிப் பத்தும், அந்தாதி யாப்பு முறையில் அமைந்துள்ளன. மேலும், தொகைநூற் செய்யுள்கள் சிலவற்றின் இடையே, அந்தாதி அமைப்பினைக் காணமுடிகிறது. அவ்வாறே சிலப்பதிகாரத்தின் கானல்வரிப் பாடல்கள் சிலவற்றின் இடையே, அந்தாதி யாப்பு அமைந்து காணப்படுகின்றது.

பல சிற்றிலக்கிய வகைகளைத் தோற்றுவித்தவர்கள் பக்திக் கவிஞர்கள். அதற்குப் பக்திப் பொருண்மை காரணம். அவ்வகையில் அந்தாதி இலக்கியத்தை முதலில் தோற்றுவித்தவர் காரைக்கால் அம்மையார் ஆவர். அவர் இயற்றியுள்ள அற்புதத் திருவந்தாதி இதுகாறும் தமிழிற் கிடைத்துள்ள அந்தாதி இலக்கியங் களுள் முதலாவதாக அமைந்து விளங்குகிறது. ஆழ்வார்களின் பக்திப் பனுவல்களிலும், நாயன்மார்களின் பதிகங்களிலும் அந்தாதி அமைப்புப் பயின்று வந்துள்ளது.

பதினோராம் திருமுறையிலுள்ள பல நூல்கள் அந்தாதி இலக்கிய வகையில் அமைந்துள்ளமையால் அத்திருமுறை "அந்தாதி மாலை" என்றும் சொல்லப்படுகிறது. திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம்,

கோயில் திருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, யாத்திரைப் பத்து ஆகியன அந்தாதி முறையில் அமைந்துள்ளன. நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் முதலாழ்வார்களின் அருளிச் செயல்கள், திருவாய்மொழி முதலிய பல பிரபந்தங்கள் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. திருமந்திரத்தில் பல பகுதிகளை அந்தாதி அமைப்பில் திருமூலர் படைத்துள்ளார். திருஞான சம்பந்தர், 'பிரமபுரத்துறை' என்று தொடங்கும் பதிகத்தை இயமக அந்தாதி என்னும் வகையில் பாடியுள்ளார்.

அந்தாதித் தொடையின் நடைநலமும் ஓசை நயமும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. எளிதில் உள்ளத்தில் தங்குவனவாகவும் அமைந்தன. எனவே, அந்தாதித்தொடை அமைந்த நூல்களைப் புலவர்கள் படைக்கத்தொடங்கினர். கி. பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் இவ்வகை இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிப் பரவலாயின. அந்தாதி நூல்கள் தொடக்கத்தில் எளிமையும் இனிமையும் மிக்கனவாய்ப் படைக்கப் பட்டன. அவற்றில் நடை நலமும் தொடை நலமும் சிறந்திருந்தன.

இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள், ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, கலியந்தாதி என்று அந்தாதியை நான்காகப் பகுத்துக்கொண்டு இலக்கணம் தந்துள்ளன. மேலும், இயமக அந்தாதி, திரிபு அந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, சிலேடையந்தாதி, போன்றனவும் அந்தாதி இலக்கியங்களின் வகைகளாக அமைந்துள்ளன.

ஒலியின் அடிப்படையில் பெயர்பெற்றது ஒலியந்தாதி. இதனை ஒலியலந்தாதி எனவும் கூறுவர். இதன் ஒவ்வொரு அடியிலும் பதினாறு கலை வைப்புகள் அமையவேண்டும். நான்கு அடிகளிலும் (16+4=64) அறுபத்து நான்கு கலை வைப்புகள் அமைய அந்தாதி யாப்பில் பாடப்படும். வெண்பா, கலித்துறை, அகவல் போன்றன இவ்வகை அந்தாதிகளில் யாப்பாக அமைகின்றன. இது முப்பது பாடல்களைக் கொண்டு அமைகிறது.

பதிற்றந்தாதி என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது என்று பொருள்படும். வெண்பா அல்லது கலித்துறை இதன் யாப்பாக அமைகிறது.

நூறு பாடல்களைக் கொண்ட அந்தாதி நூற்றந்தாதி எனப்படும். நூறு வெண்பாக்கள் அல்லது நூறு கலித்துறைப் பாக்கள் இவ்வகை அந்தாதிகளில் இடம்பெறும். வெண்பா நூறு கொண்டது வெண்பா அந்தாதி என்றும், கலித்துறைப் பாக்கள் நூறு கொண்டது கலித்துறை அந்தாதி என்றும் பெயர் பெறும். ஒவ்வொரு பத்துப்பாடலும் தனித்தனிச் சந்தங்களில் அமைக்கவும் படும். இவ்வாறு அமையும் அந்தாதி பதிற்றுப்பத்து அந்தாதி எனப்பெயர் பெறும். குட்டித் திருவாசகம் என்னும் திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி இவ்வாறமைந்ததாகும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம் இவ்வாறு அமைந்துள்ள போதிலும் இப்பெயர் பெறாது திருச்சதகம் என்றே பெயர் பெற்றுள்ளது. நமக்குக் கிடைக்கின்ற அந்தாதிகளுள், இவ்வகை அந்தாதிகள் மிகுதியான எண்ணிக் கையில் உள்ளன. இவ்விரண்டிலும் முதலில் தோன்றிய வெண்பா அந்தாதிகள் எண்ணிக்கையில் மிகுந்தும், கலித்துறை அந்தாதிகள் அதனை அடுத்தும் காணப்படுகின்றன.

ஒலியந்தாதி போன்று கலியந்தாதியிலும் கலைவைப்பு இடம்பெறுகிறது. ஒலியந்தாதியில் அறுபத்து நான்கு கலை வைப்பு அமைய, கலியந்தாதியில் அக்கலை வைப்பு முப்பத்திரண்டாகக் குறைகிறது.

இயமக அந்தாதி என்பது சொல்லணியால் பெயர்பெற்றது. பாட்டின் நான்கு அடிகளிலும் முதற் சீரில் வந்த எழுத்துகளே திரும்ப வரும். ஆனால் அவற்றைப் பிரித்துப் பொருள் காணும் போது நான்கு முதற்சீர்களும் நான்கு வேறு பொருள்களைத் தரும். இத்தகைய மடக்கை வடமொழியாளர் இயமகம் என்றுரைப்பர். இவ்வகைப் பாடல்களில் அமைந்த அந்தாதி இயமக அந்தாதி எனப்பட்டது. இந்த இயமகம், ஐந்தெழுத்திற்கு மேற்பட அமைவது சிறப்பானதாகவும், அதற்குக் குறைவது சிறப்பற்றதாகவும் கருதப்படுகிறது.

திரிபந்தாதி என்பது சொல்லணி வகையில் பெயர்பெற்ற தாகும். ஒரு செய்யுளின் நான்கடிகளிலுமுள்ள முதல் எழுத்துக்கள் மட்டும் மாறுபட்டுத் திரிந்து அமையும். ஏனைய எழுத்துகள் பலவும்

ஒத்துவரப் பொருள் வேறுபட்டு அமையும். இத்திரிபு அந்தாதியும் ஐந்தெழுத்திற்குக் குறைவாக வரின் சிறப்பற்றதாகக் கருதப்படும். இவ்வகை அந்தாதிகளைப் படைப்பது எளிதன்று. இதற்குச் சொற்பயிற்சி, பொருள் கொள்ளும் முறை போன்றவற்றில் "மிக்க புலமையும் பழக்கமும் தேவைப்படுகின்றன.

இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாத எழுத்துகளை அமைத்து அந்தாதி முறையில் பாடப்படுவது நிரோட்டக யமக அந்தாதியாகும். ப, ம இரண்டும் இதழொலிகள். எனவே இவ்வகை அந்தாதியில் இவ்விரு எழுத்துக்களும் இடம்பெறாத சொற்கள் பயின்றுவரும். இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் அகல்வதால் இதனை இதழகல் அந்தாதி என்றும் கூறுவர். இதற்கு வரையறை நூறு பாடல்கள்.

சிலேடை வெண்பா (திருக்குற்றாலச் சிலேடை வெண்பா), சிலேடைமாலை (திருவரங்க சிலேடைமாலை), சிலேடை உலா (சிலேடை உலா, தத்துவராயர்), சிலேடைப்பதிகம் போன்ற சிற்றிலக்கிய வகைகள் பலவும் சிலேடை முறையில் அமைக்கப்பட்டுள்ளமை போன்று, சிலேடை வகையில் அமைந்த செய்யுட்களாலாகிய அந்தாதி சிலேடை அந்தாதி எனப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் தருமாறு அமைந்த பாடல்களைக் கொண்ட அமைப்பில் இயற்றப்படுவது இது. இவ்வகை அந்தாதிகள் எண்ணிக்கையில் குறைந்தே காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அந்தாதி வகைகளேயன்றி, வேறு சில அந்தாதி வகைகளையும் காணலாம். இவை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை. இவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றின் பெயர்கள் வருமாறு:- உயிரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து இயமக அந்தாதி, பஞ்சாட்சர அந்தாதி, ஆறெழுத்து அந்தாதி, கொம்பிலா வெண்பா அந்தாதி, ஒலியல் அந்தாதி, முதலொலியல் அந்தாதி, நடுவொலியல் அந்தாதி, சந்தக்கலித் துறை அந்தாதி, கலிவிருந்த அந்தாதி, இயமகக் கலித்துறை அந்தாதி, ஒருதொடைச் செய்யுள்

நிரோட்டக அந்தாதி, நிரோட்டகத் தலைச்செய்யுள் அந்தாதி, தலையணிச் சீரிதழகல் அந்தாதி, இருசொல் இயமக அந்தாதி, நூற்றெட்டு வெண்பா அந்தாதி, சதகத்து அந்தாதி, பல்சந்த அந்தாதி, திரிபு வெண்பா அந்தாதி போன்றவையாகும்.

அந்தாதித் துறையில் நூல்கள் பெருகப்பெருக அருஞ் சொற்களும், கடினச் சொற் புணர்ச்சிகளும் பாடல்களில் இடம்பெறலாயின. அந்தாதி நூல் இரட்டுறமொழிதல், மூன்றுற மொழில், நான்குற மொழிதல், ஐந்துற மொழிதல், ஆறுற மொழிதல் எனப் பலவகையில் சென்றது. அதற்குப் பலவகையாகச் சொற்களைப் பிரித்துப் பொருள்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் இது சுவைப்போர்க்குப் பல இன்னல்களைத் தந்தது திரிபு, மடக்கு போன்றன இப்பாடல்களில் மிகுதியாக அமைந்து இவற்றைப் படைக்கின்ற புலவரைச் சோதனை செய்யும் புலமைக் கருவிகளாய் அமைந்துவிட்டன. இதனால் இயல்பாக நுகரும் கவியின்பம் தடைபட்டது. உணர்வு குன்றியது. ஆற்றொழுக்கு நடையின்றிக் கரடு முரடான சந்திகள் வந்து, படிப்பாரை மேலும் படிக்கத் தூண்டாது தடுக்கும் தடைகளாக இவ்வகையமைப்பு அமையலாயிற்று.

அந்தாதி இலக்கியம் தொடக்கக் காலத்தில் வெண்பாவை யாப்பாகக் கொண்டமைந்தது. முதல் அந்தாதியான காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. அடுத்து, அந்தாதி அமைப்பில் பாடல்களை அமைத்த முதல் ஆழ்வார்கள் மூவரும் வெண்பாவையே பயன்படுத்தியுள்ளனர். பின்னர் அந்தாதி இலக்கியங்கள் பெருகியபோது, பாவினங்களாகிய விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்றனவும் அந்தாதிப் படைப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்தாதி இலக்கியங்களேயல்லாமல், இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, நவமணிமாலை, அட்டமங்கலம், ஒருபா ஒருபஃது முதலான வேறு பல சிற்றிலக்கிய வகைகளும் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. அவற்றினை அந்தாதி என்ற பெயரால் குறிப்பிடுவதில்லை.

இறைவன் பெயர், திருத்தலப்பெயர், அடியார் பெயர், பாவகை, செய்யுள் எண், இயல்பு போன்றவற்றின் அடிப்படையில் அழகரந்தாதி, அருணை அந்தாதி, திருத்தொண்டர் திருவந்தாதி, வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, சிவபூசை அந்தாதி என்பனவாக அந்தாதி இலக்கியங்கள் பெயர் பெறுகின்றன. அந்தாதி இலக்கியவகை பிற்காலத்தில் தோன்றி வளர்ந்ததாயினும், இன்று கிடைத்துள்ள 850க்கும் மேற்பட்ட அந்தாதிப் பெயர்களால் இவ்விலக்கிய வகை மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினை உணரமுடிகிறது.

பிள்ளைப்பெருமான் ஐயங்கார்

பிள்ளைப்பெருமான் ஐயங்கார் வைணவ சமயம் ஈன்று புறந்தந்த ஒப்பற்ற கவிகளுள் ஒருவர். மறந்தும் புறந்தொழாத மாண்புடையவர். இவர் அரங்கனையன்றிப் பிற தெய்வம் தொழாதவர். இவர் தம் நூல்களில் திருமாலைப் பரம்பொருள் என்றும், மற்றத் தெய்வங்கள் கரும வசப்பட்ட சீவர்கள் என்றும் வலியுறுத்துகிறார்.

அட்டப்பிரபந்தமென வழங்கப்படும் திருவரங்கந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, அழகர் அந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்க நாயக ரூசல் ஆகியன இவரால் இயற்றப்பட்டன. மற்றும் திருநறையூர் நம்பி மேகவிடு தூது, எதிராசரந்தாதி, பரப் பிரம்ம விவேகம் ஆகிய நூல்களையும், சில தனிப்பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

சோழ நாட்டில் திருமங்கை என்னும் ஊரில் பிறந்த ‘திவ்விய கவி’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த இந்தத் தீவிர வைணவர், திருவரங்கத்துறையும் அழகிய மணவாளப் பெருமாள் மீது தீராக் காதல் கொண்டவர். குல ஒழுக்கத்தில் பிராமணர் என்றும், சமய ஒழுக்கத்தில் வைணவர் என்றும் கூறப்படுவர். இவருக்கு அழகிய மணவாள தாசர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவர் தமிழ் வடமொழி இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர்.

இவரை இராமாநுச நூற்றந்தாதி ஆசிரியரும், இராமாநுசரின் சீடருமாகிய திருவரங்கத்தமுதனாரின் பேரன் என்றும், பட்டர் என்று வைணவ உலகில் ஏற்றம் பெற்றுள்ள கூரத்தாழ்வானின் திருமகனாகிய பராசர பட்டரின் சீடர் என்றும் கூறும் செய்தி உண்டு. அதனால், இவர் கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தார் எனலாம். இவர் திருமலை நாயக்கரின் அரண்மனையில் இராயசம் (எழுத்தர்) எனப்பட்ட முக்கிய அலுவலராகப் பணியாற்றியிருந்தார் என்ற செய்தியாலும் பராசரபட்டர் காலம் முதல் மணவாள பூர்வாசாரியார்களால் இயற்றப்பட்ட நூல்களில் இவரைப்பற்றி ஒரு சிறு குறிப்பும் இல்லாததாலும் இவர் கி. பி. 17ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவர் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இந்தியாவில் தோன்றிய மற்றச் சமயங்களின் தீவிர செயற்பாடுகளினால் சைவமும் வைணவமும் நலியத் தொடங்கிய போழ்து ஆழ்வார்கள் தோன்றித் தம் பிரபந்தங்கள் வழியாக வைணவத்தின் தொன்மைச் சிறப்பினை எடுத்துக் காட்டி உயிரூட்டினர். அப்பணியையே, சிரீநாத முனி, ஆளவந்தார் என்னும் யாமுனர், இராமாநுச முனி ஆகிய வைணவ ஆசாரியர்கள் தொடர்ந்து விரிவுபடுத்தினர். அவ்வுண்மையை எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடம் இன்றி வெளிப்படுத்தித் திருமாலின் முதன்மையையும் எடுத்து இயம்பியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார்.

இவர் சிற்றிலக்கியப் புலவர்களால் தனிச் சிறப்புடையவராகப் புகழப்படுகிறார். இவர் அரங்கனைத் தவிரப் பிற வைணவத் தலங்களில் உள்ள மூர்த்திகளைக் கூட வணங்காமலும் பாடாமலும் இருந்தாரெனவும், திருவேங்கடமுடையான் இவர் கனவில் தோன்றி திருவேங்கடம் பொருளாகச் சில பிரபந்தங்கள் பாடுக என்று கட்டளையிட்டபோது இவர் அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன் என மறுந்தாரெனவும் வழக்குண்டு. வைணவத் திருப்பதிகள் அனைத்திலும் எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகள் அனைவரும் திருமாலே என்னும் உண்மையை அவர்க்கு

உணர்த்த, கண்ட மாலை என்னும் கொடு நோய் இவருக்கு ஏற்படத் திருவேங்கடவன் விதித்திட, அதனால் துன்புற்றப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் உண்மை உணர்ந்து, திருவேங்கடத் தந்தாதியையும், திருவேங்கட மாலையையும் பாடினாரெனவும் கூறுவர். அதனால் மகிழ்வுற்ற திருவேங்கடவன் பிள்ளைப் பெருமாள் ஐயங்காருக்குத் திருவரங்கக் கோயிலிலேயே சேவை சாதித்தாரெனவும் செய்தி உண்டு. இந்நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் வகையில் திருவரங்கக் கோயிலில் இரண்டாம் சுற்றான இராச மகேந்திரன் சுற்றில் திருவேங்கடமுடையானின் பெரும் படம் ஒன்று இன்றும் உள்ளதைக் காணலாம். பின்னர் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியையும் இவர் பாடினார்.

திருவரங்கத்திற்கு அருகில் உள்ளது திருவானைக்கா என்ற சம்புகேசுவரம். ஆனை துரத்தினாலும் ஆனைக்கா நுழையாத வைதிக வைணவரான பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சைவர்களின் வாதங்களுக்குப் பதிலளிப்பாகவே பாடிய பாடல்களின் தொகுப்பு 'பரப் பிரம்ம விவேகம்' என்பர். இவருக்கும் தீவிர சைவராகிய எல்லப்ப நாவலருக்கும் இடையில் புலமைப் போட்டியும், தத்தம் கடவுளரே முழு முதல்வர் என்று நிலைநாட்ட விரும்பும் தலைமைப் போட்டியும் நடைபெற்றதாக இலக்கிய வரலாற்றாசிரியர் கூறுவர்.

ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தத்திற்குப் பின் வேதாந்த தேசிகரின் 'தேசிகப் பிரபந்தமும்' பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் 'அட்டப்பிரபந்தமும்' சிறப்பாகக் குறிப்பிடப் படலாயின. இவர் நூல்கள் நாயக்கர் கால வரலாறு அறியத் துணை செய்வதுடன் அக்கால அளவில் திருவரங்கம் வைணவ கேந்திரம் என ஒப்பற்றிருந்த சமயச் சிறப்பினையும் தெரிவிக்கின்றன. இவர் தனிப்பாடல்களில் பல திருவரங்கத்தில் மார்கழித் திங்களில் இராப்பத்து உற்சவ காலங்களில் நம்பெருமாள் கருப்பகிரகத்தினுள் (வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவின்போது) எழுந்தருளும் போது பாடப்படுவதை இன்றும் காணலாம்.

அழகரந்தாதி

மதுரையில் சித்திரைப் பெருவிழாவின்போது திருமாலிருஞ் சோலையிலிருந்து கள்ளழகர் ஆண்டுதோறும் பரவை என்னும் ஊருக்கு அருகில் இருக்கும் தேனூர் வரை வருவது வழக்கமாம். மிக்க அளவில் திரளாக மக்கள் கூடுவதைக் கண்ட திருமலை நாயக்கர் கள்ளழகரை வைகை வரை எழுந்தருளச் செய்து, எதிர்சேவை நல்கும் ஒரு சிறப்பான ஏற்பாட்டினைச் செய்தார் என்றும், அதற்குத் தூண்டுகோலாகத் திவ்விய கவி விளங்கினார் என்றும் தெரிகிறது. கள்ளழகரிடம் ஏற்பட்ட பக்தி உணர்வால் எழுந்ததே அழகர் அந்தாதி.

அழகரைப் பற்றி அந்தாதித் தொடையால் பாடப்பெற்ற ஒரு பிரபந்தம் அழகர் அந்தாதி ஆகும். திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்று எட்டுள்ளும், பாண்டிய திருப்பதி பதினெட்டுள் ஒன்றும், வநகிரி என அழைக்கப்படுவதும். கோயில், திருமலை, பெருமாள் கோயில், அழகர் திருமலை என்று சிறப்பாக எடுத்துக்கூறப்படுகிற நான்கு திருத்தலங்களுள் ஒன்றும்,

"இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் மாயனுக் கென்பர் நல்லோர்"

என்று பெரியோரால் கொண்டாடப்பெற்ற பெருமை உடையதுமான திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளி இருக்கிற எம்பெருமானது திருநாமம், நிரம்பிய அழகு உடையவர், அலங்காரர், சுந்தரபாகு என்னும் திருப்பெயர்கள் வழங்கும்.

இப்பிரபந்தம் தோத்திரம் போன்றது, இந்நூலில் உள்ள கலித்துறைகள் யாவும் பெரும்பாலும் திரிபு என்னும் சொல்லணியையும், சிறுபான்மை யமகம் என்னும் சொல்லணி யையும் உடையவை. திரிபாவது-ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பல எழுத்துக்கள் ஒன்று நின்று பொருள் வேறுபடுவது, யமகமாவது–பல அடிகளிலேனும், ஓரடியில் பல இடங்களிலேனும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இதனை தமிழில் மடக்கு என்பர்.

சிறப்புப் பாயிரம்

திருகவி மங்கை மணவாள வள்ளல்சென் தேன்றுளித்து
முருகவிழ் தென்திரு மாலிருஞ் சோலை மலைமுகுந்தற்
கிருகவின் றாள்களிற் சூடுமந் தாதியி னீரைம்பதில்
ஒருகவி கற்கினு ஞானமும் வீரு முதவிடுமே.

இச்சிறப்புப் பாயிரம் அறிஞர் ஒருவரால் இயற்றப்பட்டது. திருகுஅவி-மன மாறுபாட்டை நீக்கும், மங்கை-திருமங்கை என்னும் நாட்டிற் பிறந்த, மணவாள வள்ளல்-அழகிய மணவாளதாசராகிய உபகாரியின், முருகு அவிழ்-மணம் கமழும், திருமாலிருஞ்சோலை மலை-பாண்டி நாட்டிலுள்ள அழகர் திருப்பதி, முகுந்தற்கு-திருமாலுக்கு, கவின்-அழகு, வீடு-மோட்சம்.

பொருள்: சிறந்த கவியாகிய திருமங்கை நாட்டில் திருவவரித்த அழகிய மணவாளதாசர் என்னும் வண்மைக் குணமுடையவர். செந்நிறமான தேன் சிந்தி மணம் வீசப்பெற்ற அழகிய திருமாலிருஞ்சோலை மலையில் திருக்கோலம் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற திருமாலுக்கு அழகிய இரு திருவடிகளிலே சாத்திய இந்த அழகர் அந்தாதி என்னும் பிரபந்தமாகிய பாமாலையில் உள்ள நூறு செய்யுள்களுள் ஒரு செய்யுளைக் கற்றாலும் நல்ல ஞானத்தையும், பரமபதத்தையும் தவறாமல் கொடுக்கும்.

காப்பு

அங்கத் தமிழ்மறை யாயிரம் பாடி யளித்துலகோர்
தங்கட்கு வீடரு ளும்புரு டோத்தமன் றண்வகுளத்
தொங்கற் பராங்குசன் றாளிணை மாலிருஞ் சோலைமலைச்
சங்கத் தழகரந் தாதிந டாத்தத் தலைகொள்வனே.

அங்கம்-அங்கங்களை உடைய (திருமங்கை மன்னர் திருவாய் மலர்ந்தருளிய பெரிய திருமொழி, திருகுறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு) தமிழ் மறை-தமிழ் வேதமாகிய, ஆயிரம்-ஆயிரம் திருப்பாசுரங்களை, வீடு-மோட்சம், வகுளத் தொங்கல்-மகிழம்பூ மாலையைச் சூடிய, பராங்குசன்-நம்மாழ்வாரின், தாள் இணை- இரு திருவடிகளையும், சங்கத்து அழகர்- தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகிய கள்ளழகப் பெருமான் சம்பந்தமாகப் பாடத் தொடங்கும், அந்தாதி-அந்தாதி என்னும் நூலை, நடாத்த-இனிது பாடி முடிக்க.

பொருள்: அங்கங்களையுடைய தமிழ் வேதமாகிய ஆயிரம் பாசுரங்களைப் பாடி கொடுத்து, உலகத்தாருக்கு முக்தியைத் தந்தருள்கிற புருடோத்தமரும், குளிர்ச்சியான மகிழம்பூ மாலையைத் தரித்த பராங்குசன் என்னும் திருநாமம் உடைய வருமான நம்மாழ்வாருடைய இத்திருவடிகளை, திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளி இருப்பவரும், தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவருமாகிய அழகரைப் பற்றி யான் பாடும் அந்தாதிப் பிரபந்தத்தை இடையூறு இன்றி நடத்துவதற்காகத் தலை மேற்கொண்டு வணங்குவேன்.

அழகரந்தாதி

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனைத் தெய்வப் புள்ளூர்
கூராழி மாயனை மாலலங் காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையெஞ் ஞான்று
முரைநெஞ்சமே. (1)

நெஞ்சமே - நீர் ஆழி வண்ணனை - பாலாழி நாதனை-நின்மலனை-சீர்ஆழி அம் கைத்திருமகள் கேள்வனை- தெய்வப்புல்லூர் கூர்ஆழி மாயனை-கொற்ற வெய்யோன் ஓர் ஆழித் தேர் மறைத்தானே-மால் அலங்காரனை எஞ்ஞான்றும் உரை ஆழி வண்ணன்- கடல்போலும் கரிய திருமேனியை உடையவன், பாணழி- திருப்பாற்கடல், நின்மலன்-குற்றமில்லாதவன், சீர் ஆழி- அழகிய மோதிரம், கேள்வன்-கணவன், தெய்வப் புள்ஊர்- கருடனை நடத்துகின்ற, கூர் ஆழி-கூர்மையான சக்ராயுதம், கொற்ற வெய்யோன்-வெற்றியுடைய சூரியன், ஓர் ஆழித்தேர்-ஒற்றைச் சக்கரத்தை உடைய தேர், மறைத்தான்-பாரதப்போரில் மறைத்தவன், அலங்காரன்- அழகர் பெருமான், எஞ்ஞான்றும்-எந்நாளும், உரை- துதிசெய்.

மனமே, நீர் நிறைந்த கடலினையொத்த கரிய திருநிறமுடையவனும், திருப்பாற்கடலில் துயில்கின்ற தலைவனும், குற்றமற்றவனும், மிகச்சிறப்பு வாய்ந்த மோதிரங்களைத் தன் விரல்களிலே அணிந்த அழகிய கைகளை உடைய இலக்குமியின் கணவனும், தெய்வத் தன்மைப் பொருந்திய பறவையாகிய கருடனை வாகன மாகக் கொண்டவனும், சுதர்சனம் என்கிற கூரிய சக்கரா யுதத்தினைத் தன் வலது கையில் ஏந்தியவனும், ஒற்றைச் சக்கரத்தை உடைய சூரியனது தேரினை மறைத்திட்ட பெருமைக்குரியவனும், அற்புத சக்தி கொண்டவனுமாகிய அழகனை எப்பொழுதும் வணங்குவோம்.

உரைமாற்ற முண்டென் பொறியைந்து முன்னிடத்
தன்றியுண்ணும்
இரைமாற்ற வேண்டு மிதுவேயென் விண்ணப்ப மென்னப்பனே
உரைமாற் றளவற்ற பொன்னுடுத் தாய்வில் லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச் செற் றாயழ காகரு மாணிக்கமே. (2)

என் அப்பனே, உரை மாற்று அளவு அற்ற பொன் உடுத்தாய், வில் எடுத்து இலங்கைவரை மாற்றலரைச் செற்றாய், அழகா கருமாணிக்கமே, உரை மாற்றம் உண்டு. என் பொறி ஐந்தும் உன்னிடத்து அன்றி உண்ணும் இரை மாற்ற வேண்டும், இதுவே என் விண்ணப்பம்.

உரைமாற்று-உரை கல்லில் உரைத்து அறியும் மாற்று, பொன்-பொன்னாடை, வரை மாற்றலர்-மலை போன்ற பகைவர், செற்றாய்-அழித்தவனே, உரை மாற்றம்-யான் சொல்ல விரும்பும் சொல், பொறி ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும், பஞ்சேந்திரியங்கள், இரை-உணவை.

உரை கல்லில் உரைத்து நோக்கி உணரத்தக்க மாற்றின் அளவு கடந்த பொன் மயமான ஆடையை அணிந்து கொண்டுள்ளவனே, வில்லினைக் கையில் ஏந்தி மலையினையொத்த வலிமை பொருந்திய இராவணன் முதலிய அசுரர்களை அழித்தவனே, அழகா, மாணிக்கம் போல் ஒளியினையும், நிறத்தையும் உடையவனே, உன்னிடம் நான் தர வேண்டியது ஒன்று உள்ளது. என்னவென்றால் என் ஐம்பொறிகளும் உன்னை நினைப்பதன்றி வேறெதிலும் செல்லாதிருக்கும்படி அருள் செய்யவேண்டும், இதுவே என் பணிவான விண்ணப்பம் ஆகும்.

மாணிக் கனகம் புரைமேனி மாலுக்கு வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித் தானுக்குப் பச்சைத்துழாய்

ஆணிக் கனக முடியலங் காரனுக் கண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த ரானவர் பித்தரன்றே. (3)

"மாணிக்க நகம் புரை மேனி மாலுக்கு-வார் சடையோன் பாணிக் கனகப்பலி ஒழித்தானுக்கு-அண்டம் எல்லாம் பேணிக்கு-அனகனுக்கு-பச்சைத் துழாய் ஆணிக்கனக முடி அலங்காரனுக்குப் பித்தரானவர், பித்தர் அன்றே."

நகம்புரை-மலையை ஒத்த, சடையோன்-சிவன், பாணிக் கனகம் பலி-கையிலுள்ள பெரிய பிரம கபாலத்தைக் கொண்டு யாசிக்கும் பிச்சையை, அண்டம்-உலகங்கள், பேணிக்கு-பாதுகாப்பவனுக்கு, அனகன்-குற்றமற்றவன், ஆணிக் கனகம்-உயர்ந்த பொன், பித்தர் அன்றே- பைத்தியக்காரர் அல்லர்.

மாணிக்க மலையினைப் போன்ற திருமேனியை உடைய திருமாலும், வார் போன்ற நீண்ட சடையினைக் கொண்ட சிவபெருமான் தன் கையிலே கொண்ட பெரிய பிரம கபாலத்தைக்கொண்டு இரக்கிற பிச்சையை நீக்கியருளியவனும், அண்ட சராசரங்கள் அனைத்தையும் பாதுகாக்கின்றவனும், குற்றம் இல்லாதவனுமாகிய பசுமையான திருத்துழாய் மாலையினை அணிந்த, ஆணிப்பொன்னால் ஆகிய முடியை உடைய அழகர்மேல் பக்திப்பித்துக் கொண்டவர். பிற பொருள்களின் மேல் காதல் பித்துக்கொண்டவர்களைப் போல இகழத் தக்கவர் அல்லர்.

பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவியெனுங்கடை யேனைக் கடைக்கணியாய்
முத்தரும் பாருந் தொழுமழ காவண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாயடி யாரைப் புரப்பவனே. (4)

முத்தரும் பாருந் தொழும் அழகா, வண்டு மூசும் துழாய்ப் புது அரும்பு ஆர் முடியாய், அடியாரைப்

புரப்பவனே, பித்து அரும்பா நின்ற நெஞ்சனை-வஞ்சனை-பேருலகோர் கைத்து, அரும்பாவி எனும் கடையேனைக் கடைக்கனியாய்.

முத்தரும்-மோட்ச உலகத்தவரும், பாரும்-மண்ணுலகத்தவரும், மூசும்-மொய்க்கும், ஆர்-பொருந்திய, முடியாய்-திருமுடியை உடைய பெருமானே, புரப்பவனே-பாதுகாப்பவனே, பித்து அரும்பா நின்ற-பைத்தியம் உண்டாகின்ற, வஞ்சனை-வஞ்சகமுடைய என்னை, கைத்து-வெறுத்து, அரும்பாவி-கொடிய பாவம் செய்தவன், கடையேனை-இழிந்தேனை, கடைக்கணி-கடைக்கண் பார்த்து அருள்.

முக்தி பெற்றவர்களும், இவ்வுலகத்தவர்களும் வணங்குகின்ற அழகனே. வண்டுகள் மொய்க்கின்ற திருத்துழாயின் புதிய அரும்புகள் கொண்ட மாலையினைத் திருமுடியில் சூடியவனே. உனது அடியார்களைப் பாதுகாப்பவனே. உலக இன்பங்களில் ஆசைகொண்ட மனத்தை உடையவனும், வஞ்சக எண்ணம் கொண்டவனும், உலகிலுள்ளவர்கள் இவன் பெரும்பாவி என்று இகழக்கூடிய கடைநிலையில் உள்ளவனுமாகிய எனக்கு அருள்புரிவாயாக.

புரந்தர னாமெனப் பூபதி யாகிப் புகர்முகமா
துரந்தர சாளிலென் னல்குர வாகிலென் றொல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலைநின் றார்க்கென் மனத்தினுள்ளே
நிரந்தர மாயலங் காரர்க்கிங் காட்பட்டு நின்றபின்னே. (5)

தொல்புவிக்கு வரம்தர மாலிருஞ்சோலை நின்றார்க்கு-அலங்காரர்க்கு-இங்கு நிரந்தரமாய் என் மனத்தினுள்ளே ஆட்பட்டு நின்றபின், புரந்தரன் ஆம் எனல் பூபதி ஆகிப் புகர் முகமாதுரந்து அரசு ஆளில் என்? நல்குரவு ஆகில் என்?

தொல்புவிக்கு-பழைய இவ்வுலகில் உள்ள உயிர் களுக்கு, இங்கு-இவ்வுலகில், நிரந்தரமாய்- இடை விடாமல், ஆட்பட்டு- அடிமையாகி, புரந்தரன்- இந்திரன், பூபதி-அரசன், புகர்முக மா துரந்து-செம்புள்ளி வாய்ந்த முகத்தினை உடைய (ஐராவதம்) யானையை ஏறிச் செலுத்தி, நல்குரவு-வறுமை.

தொல்புவியில் வாழ்கின்றவர்களுக்கு வேண்டும் வரம் கொடுத்து அருள்வதற்காகத் திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளி நிற்கின்ற அழகருக்கு, இம்மையில் யான் அடிமைப்பட்டு நின்ற பின்னர், யான் இந்திரனைப் போன்றவன் என்று அனைவரும் சொல்லு மாறு மன்னன் என பட்டத்து யானையின் மீதேறி அரசாண் டால் என்ன? வறுமையுற்றால் என்ன?

அழகருக்கு அடிமைப்பட்ட பின்பு, எனக்கு இவ்வுலக இன்பமும், துன்பமும் ஒன்றே, செல்வம் இருந்தாலும், வறுமையுற்றாலும் ஒன்றே. இவை எவற்றையும் ஒரு பொருளாகக் கருதேன் எனத் தன் மனத்தை வெளிப் படுத்துகிறார்.

நின்றபி ராணன் கழலுமுன் னேநெஞ்ச மேநினையாய்
சென்றபி ராயம்வம் பேசென்ற தாற்றிரு மங்கைகொங்கை
துன்றபி ராமனைச் சுந்தரத் தோளனைத் தோளின்மல்லைக்
கொன்றபி ரானை யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே. (6)

நெஞ்சமே, சென்ற பிராயம் வம்பே சென்றது. நின்ற பிராணன் கழலும் முன்னே திருமங்கை கொங்கை துன்று அபிராமனை-சுந்தரத் தோளனை-தோளின் மல்லைக் கொன்ற பிரானை அடைந்து, அடியாரொடும் கூடுகைக்கு நினையாய்.

வம்பே-வீணே, கழலும் முன்னே- உடலை விட்டு நீங்குமுன், துன்று-தழுவுகின்ற, அபிராமனை-கள்ளழகப்

பெருமானை, தோளின்-தோள்களால், மல்லை- (சாணூ ரன் முஷ்டிகன் என்னும் கம்சனால் ஏவப்பட்ட) மல்லர் களை, கூடுகைக்கு-சேர்தற்கு, நினையாய்- எண்ணு வாயாக.

மனமே இதுநாள்வரை கழிந்த ஆயுள் முழுவதும் வீணே போய்விட்டது. இனிமேலாவது இருக்கும் உயிர் உடலை விட்டு நீங்கும் முன், திருமகளின் அழகிய முலையினை நெருங்கித் தழுவுகின்ற அழகனும், அழகிய திருத்தோள்களை உடையவனும், தன் தோள் வலிமையினால் மல்லர்களைக் கொன்றவனுமாகிய பெருமானைச் சரணடைந்து, அவனுடைய அடியவர் களோடும் கூடுவோம்.

இதுநாள்வரை வீணாய்க் கழிந்த நாட்கள் குறித்துக் கவலை கொள்வதோடு நின்றுவிடாமல் இனிவரும் நாட்களில், வாழும் காலத்தில் ஒரு பொழுதேனும் எம்பெருமானைத் தியானித்தாலும் அது பயன்தரத் தக்கதாகும்.

கூடுகைக் குஞ்சர மத்தடி யேற்குக் கொடியவஞ்சஞ்
சாடுகைக் குஞ்சர ணந்தர வேண்டுந் தடத்தழுந்தி
வாடுகைக் குஞ்சரங் காத்தீர்விண் வாழ்க்கைக்கும் வாளரக்கர்
வீடுகைக் குஞ்சரங் கோத்தீர் விடைவெற்பின் வித்தகரே. (7)

தடத்து அழுந்தி வாடுகைக் குஞ்சரம் காத்தீர், விண் வாழ்க்கைக்கும் வாள் அரக்கர் வீடுகைக்கும் சரம் கோத்தீர், விடை வெற்பின் வித்தகரே, கூடுகைக்கும் சரமத்து அடியேற்குக் கொடிய வஞ்சம் சாடுகைக்கு உம் சரணம் தர வேண்டும்.

தடத்து-மடுவில், கைக்குஞ்சரம்-கஜேந்திரனாகிய யானையை, காத்தீர்-காத்தவரே, விண்-வானுலகத்தவர், வாழ்க்கைக்கும்-வாழ்வதற்கும், வாள் அரக்கர்-கொடிய அரக்கர், வீடுகைக்கும்-அழிதற்கும், சரம்கோத்தீர்-

அம்பைத் தொடுத்தவரே, விடைவெற்பு-இடபகிரி என்னும் திருமாலிருஞ் சோலை மலையில் உள்ள, வித்தகரே-ஞான சொரூபரே, கூடுகைக்கும் சரமத்து-உயிரானது என் உடலை வெறுக்கும் முடிவு காலத்தில், அடியேற்கு-அடியவனாகிய எனக்கு, வஞ்சம்-வஞ்னை, சாடுகைக்கு-அடித்தோட்டுதற்கு, சரணம்-திருவடிகளை.

தடாகத்திலே முதலையால் தாக்கப்பட்டதுதிக்கை உடைய யானை வாட்டமடைந்து மூழ்கியபொழுது அதனைப் பாதுகாத்து அருளியவரே, தேவர்கள் வாழும் படியாகவும், அரக்கர்கள் ஒழியும்படியாகவும் அம்பினைத் தொடுத்தவரே. விருஷபகிரியாகிய அழகர்மலையில் எழுந்தருளியிருக்கும் ஞான சொரூபியே, உயிர் நீங்கும் இறுதிக் காலத்திலே வாழும் எனக்கு தீய எண்ணங்கள் ஏற்படாதவண்ணம் அருள்வழங்கி காக்க வேண்டுகிறேன்.

வித்தக ரும்பர்க் கரசா னவனும் விதியுங்கங்கை
மத்தக ரும்பர வும்மலங் காரர் மழைகொண்டகார்
ஒத்தக ரும்பரஞ் சோதியர் நாம முரைத்தன்னைமீர்
இத்தக ரும்பர தெய்வமுங் கூத்தும்விட் டேத்துமினே. (8)

அன்னைமீர், இத்தகரும் பரதெய்வமும் கூத்தும் விட்டு, வித்தகர்-உம்பர்க்கு அரசானவனும் விதியும் கங்கை மத்தகரும் பரவும் அலங்காரர்-மழை கொண்டகார் ஒத்தகரும் பரஞ்சோதியார் நாமம் உரைத்து ஏத்துமின்.

அன்னைமீர்-தாய்மாரே, தகரும்-ஆட்டுக்கிடாய்ப் பலியும், பரதெய்வமும்-வேறுபாடு தெய்வ வழிபாடும், கூத்தும்-ஆவேசமாடுதலும், வித்தகர்-ஞான சொரூபரும், உம்பர்க்கு அரசு ஆனவன்-தேவேந்திரன், விதி-பிரமன், கங்கை மத்தகர்-கங்கையை தன் ஒற்றைச் சடையில் தாங்கிய சிவபெருமான், பரவும்-துதிக்கும், அலங்காரர்-அழகர், மழை-நீர், கார்-மேகம், பரஞ்சோதியார்-மேன்மை யான ஒளியுடையவர், ஏத்துமின்-துதியுங்கள்.

தாய்மார்களே, நீங்கள் ஆட்டுக்கிடாப் பலியையும், வேறு தெய்வ வழிபாட்டையும், வெறியாட்டு ஆடுவித் தலையும் விட்டுவிட்டு, அறிவுக்கடவுளானவனும், நீர் கொண்ட காளமேகம் போன்ற கரிய சிறந்த ஒளியினை உடைய பெருமான் இந்திரன். பிரமன், சிவன் ஆகியோர் களால் வணங்கி வழிபடப்பெற்ற அழகரை வணங்குவீர் களாக.

ஏத்துமின் பத்தியி னாலெட ெ ழுத்து மிணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணந் துழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்தி செயும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி லிருத்தியும் வைப்பர் கருணை செய்தே. (9)

பத்தியினால் எட்டு எழுத்தும் ஏத்துமின், தண்அம் துழாய்ப் பத்திரம் இணையடிக்கே சாத்துமின். மதிதாங்கிக் கஞ்சம் பூத்து மின் பத்தி செய்யும் பச்சை மாமுகில் போல் அழகர் கருணை செய்து காத்தும் இன்பத்தில் இருத்தியும் வைப்பர்.

எட்டு எழுத்து-அஷ்டாச்சர மந்திரம், ஏத்துமின்- துதி யுங்கள்,பத்திரம்-இலை,சாத்துமின்-அருச்சியுங்கள், மதி-சந்திரன், கஞ்சம்-தாமரை, பத்தி செயும்-அணி செய்கின்ற, இருத்தியும்- இருக்கச் செய்தும், வைப்பர்- வைகுந்தத்தில் வைத்திருப்பர்.

கலந்து பக்தியுடன் திரு எட்டு எழுத்தை உச்சரி யுங்கள். அப்பெருமானுடைய திருவடிகளிலே குளிர்ந்த அழகிய துளசியினை சமர்ப்பியுங்கள். இவ்வாறு செய்தீர் களாயின் சந்திர மண்டலத்தை மேலே சுமந்து தாமரை மலர்கள் பூக்கப்பெற்று மின்னல்கள் ஒழுங்காகத் தோன்றப் பெற்ற பசுமையான பெரியதொரு மேகம் போல் திருமேனி கொண்ட அழகர் அருள்பாலித்து, பாதுகாத்து, பேரின்பத்திலே நிலைநிறுத்தி உங்களை வைத்து அருள்வார்.

செய்தவ ராகவ ருந்தியுஞ் தீர்த்தத் துறை படிந்தும்
கைதவ ராகமங் கற்றுமென் னாங்கடற் பார்மருப்பிற்
பெய்தவ ராகனை மாலலங் காரனைப் பேரிலங்கை
எய்தவ ராகவ வென்றேத்த நீங்கு மிருவினையே. (10)

செய்தவராக வருந்தியும், தீர்த்தத்துறை படிந்தும் கைதவர் ஆகமம் கற்றும் என்னாம்? மருப்பில் கடல்பார் பெய்த வராகனை-மால் அலங்காரனை-பேரிலங்கை எய்தவ, ராகவ என்று ஏத்த, இருவினை நீங்கும்.

தவராக- தவசியராக, படிந்தும்-நீராடியும், கைதவர்- வஞ்சகராகிய அயல் மதத்தவரின், ஆகமம்- ஆகம சாத்திரங்களை, என்னாம்-என்ன பயனாகும்? மருப்பில்- தந்தத்தில். கடல்பார்-கடலால் சூழப்பட்ட பூமியியை, பெய்த-பொருந்திய வராகனை-வராக அவதாரியை, எய்தவ - அம்பெய்து அழித்தவனே, ராகவ - இரகு குலத்தவனே, ஏத்த-துதிக்க, இருவினை - நல்வினை தீவினைகள்.

உடலும், மனமும் வருந்தி தவம் செய்தும், புண்ணிய தீர்த்தங்களிலே நீராடியும், வஞ்சகர்களான பிற மதத்தினரின் ஆகம நூல்களைக் கற்றுணர்ந்தும் என்ன பயன் உண்டு? இரகு குலத்தில் அவதரித்தவனும், பெரிய அம்பினை எய்து இலங்கையை அழித்தவனும், கடல் சூழ்ந்த உலகத்தைக் கோட்டில் ஏந்தியவராக அவதாரம் எடுத்த பெருமையுடைய அழகனை வணங்கினால் இரு வினைகளும் நீங்கும்.

வினைக்கு மருந்தரிக் கும்பிணி மூப்புக்கும் வீகின்றவே
தனைக்கு மருந்தன்ன தாளழகாசெய்ய தாமரையங்
கனைக்கு மருந்தமு தேயரு ளாய்நின்னைக் காதலித்து
நினைக்கு மருந்ததி தன்னுயிர் வாழ்க்கை நிலைபெறவே. (11)

வினைக்கும், மருந்து அரிக்கும் பிணி மூப்புக்கும், வீசுகின்ற வேதனைக்கும் மருந்து அன்னதாள் அழகா.

செய்ய தாமரை அங்கனைக்கும் அருந்து அமுதே, நின்னைக் காதலித்து நினைக்கும் அருந்ததி தன் உயிர் வாழ்க்கை நிலை பெற அருளாய்.

வினைக்கும்-இருவினை நீக்கத்திற்கும், நீ மருந்து அரிக்கும்-மருந்தின் வலியையும் அழிக்கின்ற, பிணி-நோய், மூப்பு-முதுமை, வீசுகின்ற வேதனை-கறக்கும் துன்பம், அங்கனை- அழகியாகிய திருமகள், காதலித்து-விரும்பி, அருந்ததி தன்-அருந்ததி போன்ற கற்பரசியாகிய இப்பெண்ணின்

தன்னைச் சரணடைந்தவர்களுடைய இருவினை களாகிய நோய்களை ஒழிப்பதற்கும், மருந்துகளுக்கு தாம் வசப்பட்டு அழியாமல் எவ்வகை மருந்தையும் தமது ஆற்றலால் பயன்படாது அழியும்படிச் செய்கிற நோய்கள், மூப்பு என்னும் இவற்றை ஒழிப்பதற்கும், மரண வேதனையைப் போக்குவதற்கும் பிணி, பசி, மூப்பு மரணத்துன்பங்களை நீக்கவல்ல அமுதம் போன்ற திருவடிகளை உடைய அழகனே! செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அழகிய பெண்ணான திருமகளுக்கும் நுகர்தற்கு உரிய அமுதமாய் உள்ளவனே! உன்னை விரும்பி எப்பொழுதும் உன்னையே நினைத்து உள்ள அருந்ததி போன்றவளான இம்மங்கையினுடைய உயிர் வாழ்வு நிலைபெறும்படிக் கருணை செய்வாய்.

தலைவன் தலைவியைக் கூட, அது ஊரெங்கும் அலர் பரவுதலை அறிந்து அது அடங்க அவனைச் சிலகாலம் பிரிந்திருத்தல் ஒருவழித் தணத்தல் எனப்படும். அதனால் தலைவி வருந்த மீண்டு வந்த தலைவனை நோக்கி அத்தலைவியின் வருத்தத்தினைக் கூறுவதாக உள்ளது. சில நேரங்களில் அழகர்பிரான் ஐயங்கரரது ஞானக்கண்ணுக்குப் புலனாகி மறைய அதனால் இவர் வருந்த, வருந்தாதவாறு அருள்புரிய வேண்டுதல் இதற்கு உள்ளுறை.

நிலையாமை யான வுடலு முயிரு நினைவுந் தம்மிற்
கலையாமை யானங் கலக்குமுன் னேகங்கை வைத்த சடைத்
தலையாமை யானனன் றாமரை யான்றொழுந் தாளழகன்
அலையாமை யானவன் மாலிருஞ் சோலை யடைநெஞ்சமே. (12)

நெஞ்சமே, நிலையாமையயான உடலும், உயிரும், நினைவும் தம்மின் கலையா மையானம் கலக்குமுன்னே கங்கை வைத்த தலை ஆம் ஐயானனன் தாமரையான் தொழும் தாள் அழகன்-அலை ஆமையானவன் மாலிருஞ் சோலை அடை.

தம்மின் கலையா-தம்நிலையிலிருந்து கலைந்து, மையானம்-சுடுகாட்டை, ஐயானன்-ஐந்து முகங் களை யுடைய சிவனும், தாமரையான் - பிரமனும், அலை- திருப்பாற்கடலில், ஆமையானவன்-கூர்மவதாரம் செய்தருளியவனது, அடை-சேர்வாயாக.

மனமே, நிலையாத அழிவும் இயல்புடைய உடலும், உயிரும், சிந்தனையும், தம் நிலையிலிருந்து கலையப் பெற்று சுடுகாட்டை அடைவதற்கு முன்னே, கங்கையைத் தன் ஒற்றைச் சடையில் தரித்த ஐந்து முகனாகிய சிவபிரானும், தாமரையில் தோன்றிய பிரமனும் வணங்கிய, திருவடிகளைக் கொண்ட அழகனும், திருப்பாற்கடலிலே கூர்ம அவதாரம் எடுத்தவனுமாகிய பெருமானுடைய திருமாலிருஞ்சோலை மலையைச் சேருவாய்,

நெஞ்ச முருக்கு முயிருருக் குந்தொல்லை நீள்வினையின்
வஞ்ச முருக்கும் பவமுருக் கும்வண் டுழாயழகர்
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திருநண்பர் கஞ்சனுக்கு
நஞ்ச முருக்கு வளையாழி யன்னவர் நாமங்களே. (13)

கஞ்ச முருக்கு மலர் வாய்த்திரு நண்பர்- கஞ்சனுக்கு, நஞ்சம்-உருக்குவளை ஆழி அன்னவர்- வன் துழாய் அழகர் நாமங்கள் நெஞ்சம் உருக்கும், உயிர்

உருக்கும், தொல்லைநீள் வினையின் வஞ்சம் முருக்கும், பவம் முருக்கும்.

கஞ்சம்-தாமரை மலரில் வீற்றிருக்கும், முருக்கு மலர் வாய்த்திரு-முருக்கம்பூவைப் போலும் உதடுகளை உடைய இலக்குமிக்கு, நஞ்சம்-விஷம், உருக்குவளை ஆழி அன்னவர்-நிறத்தால் நீலோற்பவ மலரையும் கடலையும் ஒத்தவருமான, பவம்-பிறப்பை, முருக்கும்-அழிக்கும்.

தாமரையில் வீற்றிருக்கும் முருக்கமலர் போன்ற சிவந்த வாயினை உடைய திருமகளுக்கு மனம் ஒத்த அன்புடைய கொழுநராய், அப்பெரிய பிராட்டியாரை விட்டு என்றும் அகலாதவரும், கம்சனுக்கு நஞ்சானவரும், திருமேனி நிறத்தால் நீலோற்பவ மலரையும் கடலையும் போன்றவருமான செழிப்பான திருத்துழாய் மாலையைத் தரித்த அழகருடைய திருநாமங்கள் மனத்தை உருகச் செய்யும், உயிரை நெகிழச் செய்யும், தொன்றுதொட்டு வருகின்ற நீண்ட கருமங்களின் வஞ்சனையை அழிக்கும், பிறப்பை ஒழிக்கும்.

நாமங்க ளாவி நழுவுந் தனையு நவின்றவரைத்
தாமங்க ளாவி மனத்துள்வைப் பார்தண் டலையினகில்
தூமங்க ளாவி மணநாறு மாலிருஞ் சோலையன்பர்
சேமங்க ளாவின் கனியனை யார்பதஞ் சேருவரே. (14)

ஆழி நழுவுந்தலை நாமங்கள் நவின்று அவரைத் தாம் அங்கு அளாவி மனத்துள் வைப்பர், தண்டலையின் ஆவி அகில் தூமங்கள் மணம் நாறும்-மாலிருஞ்சோலை அன்பர் - சேமம் - களாவின் கனி அணையார் - பதம் சேருவர்.

ஆவி நழுவுந்தனை-உடலை விட்டு உயிர் நீங்கும் வரையில் நாமங்களை நவின்று-திருப்பெயர்களைத் துதித்து, அவரை-அப்பெருமானை, அளாவி-கலந்து.

மனத்துள் வைப்பார்-தியானிப்பார், தண்டலையின் சோலைகளில் ஆவி-தடாகங்கள், அகில் தூமங்கள்-நீராடும் பெண்டிர் தம் கூந்தலுக்கு ஊட்டிய அகிற் புகைகளின், அன்பர் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவரும், சேமம்-பாதுகாப்பனவரும், களாவின் கனி அணையார்- களாப்பழமொத்த கரிய நிறமுடையவரு மாகிய பெருமானது, பதம்-சேருவர்-திருவடிகளை அடைவர்.

அழகருடைய திருநாமங்களை உயிர் நீங்கும் அளவும் உச்சரித்து, அப்பெருமானை, தாம் அவ்விடத்திலே அடைந்து பற்றித் தம் மனத்தில் வைத்து வணங்குவோர், சோலைகளில் உள்ள குளங்களில் பெண்கள் நீராடியதால் உண்டான அகில் புகைகளின் நறுமணம் வீசப்பெற்ற சோலை மலையில் எழுந்தருளி யிருக்கிற அன்புடையவரும், அவ்வுயிர்களுக்குப் பாதுகாப்பாக உள்ளவரும், திருமேனியின் நிறத்தால் களாப்பழத்தை ஒத்தவருமான அப்பெருமானுடைய திருவடிகளைச் சேருவார்கள்.

சேராத காத நரகேழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராத காதம் வசைபிணி பாவ மறிகடன்முன்
தூராத காதங்க டூர்த்தானை மாலிருஞ் சோலையிற்போய்
ஆராத காத லுடன்பணி வீரென் னழகனையே. (15)

ஆராத காதலுடன் மாலிருஞ்சோலையில் போய் முன் மறிகடல் தூராத காதங்கள் தூர்த்தானை - என் அழகனைப் பணிவீர். ஏழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும் தகாத நரகு சேரா, அகாதம் வசை பிணி பாவம் வாராது.

முன்-இராமாவதார காலத்தில், மறிகடல்-அலை மடங்கி வீசும் பெருங்கடலில், தூர்த்தானை-அணை கட்டியவனை, பணிவீர்-வணங்குமின், நரகு-நரகங்கள், அகாதம்-வஞ்சகக்குணம், வசை-பழி, வாராது-அணுகாது.

அடங்காத அன்புடனே சோலை மலைக்குச் சென்று முன்பு அலைகள் மடங்கி அடிக்கப்பட்ட கடலிலே தூர்க்கப் படாத அநேக காத தூரமளவும் நிரப்பி அணை கட்டியவ னான என் தலைவனாகிய அழகப் பெருமானை வணங்குங்கள். அப்படி வணங்குவீர்களாயின் ஏழு தலைமுறைக்கும் கொடிய நரகம் உங்களைத் தீண்டாது. பழியும், நோயும், தீவினையும் ஏற்படாது.

அழக்கன் றியகருங் கண்ணிக்குக் கண்ணி யளித்திலரேல்
வழக்கன்றி முன்கொண்ட வால்வளை கேளு மறுத்ததுண்டேல்
குழக்கன்றின் பின்குழ லூதலங் காரர்க்குக் கோதைநல்லீர்
சழக்கன்றில் வாய்பிளந் தாலுய்ய லாமென்று சாற்றுமினே. (16)

கோதை நல்லீர்! அழக்கன்றிய கருங்கண் ணிக்குக் கண்ணி அளித்திலரேல், வழக்கு அன்றி முன்கொண்ட வால்வளை கேளும், மறுத்தது உண்டேல், குழக்கன்றின் பின் குழல் ஊது அலங்காரர்க்குச் சழக்கு அன்றில் வாய் பிளந்தால் உய்யலாம் என்று சாற்றுமின்.

கோதை நல்லீர்-பூமாலை அணிந்த தோழியரே, கன்றிய-வாடிய, கருங்கண்ணிக்கு-கரிய கண்களை உடைய தலைவிக்கு, கண்ணி-மலர் மாலையை, வழக்கு அன்றி-நியாயமல்லாமல், வால்வளை-வெண்மையான வளையல்களை, குழக்கன்றின் - இளம் பசுக் கன்று களின், அலங் காரர்க்கு-அழகராகிய தலைவர்க்கு, சழக்கு அன்றில்-கொடிய அன்றிற் பறவையின், உய்யலாம்- பிழைக்கலாம்.

பூமாலை போன்ற மெல்லியரான பெண்களே, அழுவதால் கன்றிப் போன கருமையான கண் களையுடைய இம்மகளுக்காகத் தம் மாலையைக் கொடாராயின், நியாயமாக அன்றி முன்பு வலியக் கவர்ந்து கொண்ட ஒள்ளிய வளையல்களைக் கேளுங்கள் மறுத்தால் இளமையான கன்றுகளின் பின்னே புல்லாங் குழலை ஊதிச் சென்ற அழகப்பிரானாகிய

அத்தலைவருக்குக் குற்றத்தை உடைய அன்றில் பறவையின் வாயினைக் கிழித்து விட்டால்தான் இவள் பிழைத்தல் கூடும் என்று சொல்லுங்கள்.

சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ் மலயக்
காற்றுக் கரும்பனை யுங்கண் படாளலங் காரற்கண்டர்
ஏற்றுக் கரும்பனை யக்கொங்கை யாள்கொண்ட வின்னலுக்கு
மாற்றுக கரும்பனை யல்லாது வேறு மருந்தில்லையே. (17)

சாற்றுக் கரும்பனை கூற்று என்னும் ஆசைத் தமிழ் மலையக் காற்றுக்கு அரும்பல் நையும், கண்படாள், அண்டர் ஏற்றுக்கு-அலங்காரர்க்கு-அரும்பு அனைய கொங்கையாள் கொண்ட இன்னலுக்கு மாற்று, கரும்பனை அல்லாது வேறு மருந்தில்லை.

சாற்றுக் கரும்பன்-மன்மதன், கூற்று என்னும்-யமன் என்பாள், மலையக்காற்று-பொதிய மலையில் இருந்து வரும் தென்றல் காற்று, அரும்பல்-மென்மையாக வீசும்போது, நையும்-வருந்துவாள், கண்படாள்-உறங் காள், அண்டர் ஏற்றுக்கு-தேவர் சிங்கமான பெருமானை அடைதற்கு, அலங்காரர்க்கு-அழகரைச் சேர்தற்கு, இன்னலுக்கு மாற்று-துன்பம் நீங்குதற்குப் பரிகார மாவது. கரும்பனை-கரிய பனை மடலூர்தல்.

இரசமுள்ள கரும்பினை வில்லாக உடைய மன் மதனை எமனென்று சொல்லுவாள் அனைவராலும் விரும்பப்படுவதும், தமிழ் வளர்ந்த இடமான பொதியமலையில் இருந்து தோன்றுவதுமான தென்றல் காற்றிற்கு, அது சிறியதாக வீசும்பொழுதெல்லாம் வருந்துவாள். துயில்கொள்ளமாட்டாள். தேவர்களில் சிங்கம் போன்றவனாகிய அழகப்பிரான் விஷயமாக கோங்கு அரும்பினை ஒத்த தனங்களை உடையவளான இவள் கொண்ட துன்பத்திற்குப் பரிகாரம் கரிய பனையின் மடலை ஊர்தலே அன்றி வேறு எதுவும் இல்லை போலும்.

மருந்துவந் தார்தொழு மாலிருஞ் சோலை மலையழகர்
அருந்துவந் தாரணி யென்றயின் றாரட லாயிரவாய்
பொருந்துவந் தார்பணிப் பாயார் விதுரன் புதுமனையில்
விருந்துவந் தாரடி யார்க்கில்லை நோயும் வெறுமையுமே. (18)

தாரணி அருந்துவம், என்று அயின்றார்-அடல் ஆயிரம் வாய் பொருந்து வந்து ஆர்பணிப் பாயார்-விதுரன் புதுமனையில் விருந்து வந்தார்-மருந்து உவந்தார் தொழும் மாலிருஞ்சோலை மலை அழகர் அடியார்க்கு நோயும் வெறுமையும் இல்லை.

தாரணி அருந்துவம்-பூமியை உட்கொள்வோம், அயின்றார்-உண்டவரும், அடல்-வலிமையுடைய, வந்து ஆர் பணிப்பாயார்-காற்றையே உணவாகக்கொள்ளும் பாம்புப் படுக்கையினை உடையவரும், மருந்து உவந்தார்-அமிர்தத்தை விரும்பிய தேவர், வெறுமை-தரித்திரம்.

பூமியை உண்போம் என்று திருவுள்ளம் கொண்டு உண்டருளியவரும், வலிமை உடையதும், ஆயிரம் வாய் பொருந்தியதும், காற்றையே உணவாகக் கொள்வதுமான ஆதிசேசன் என்னும் பாம்பாகிய சயனத்தை உடையவரும், விதுரனது புதிய மாளிகையில் விருந்தினராக வந்தருளியவரும், அமுதத்தை விரும்பி உண்டவரும். தேவர்களால் வணங்கப்பெற்ற திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளி இருப்பவரும் ஆகிய அழகருடைய தொண்டர்களுக்குப் பிணியும், வறுமையும் இல்லை.

வெறுத்தவ ரைக்கஞ்ச னைச்செற் றுளார்விடை
வெற்பர்வெங்கண்
கறுத்தவ ரைக்கஞ்ச லென்றுவந் தார்கன காம்பரத்தைப்
பொறுத்தவ ரைக்கஞ் சனமேனிக் காவி புலர்ந்துருகிச்
சிறுத்துவ ரைக்கஞ்சங் கூப்புமென் பேதைக்கென்
செப்புவதே. (19)

கஞ்சனை வெறுத்தவரை செற்றுளார்-வெங்கண் கறுத்தவரைக்கு அஞ்சல் என்று வந்தார்-விடைவெற்பர் கனக அம்பரத்தைப் பொறுத்த அரைக்கு, அஞ்சன மேனிக்கு ஆவி புலர்ந்து உருகிவரைச் சிறுத்த கஞ்சம் கூப்பும் என் பேதைக்கு என் செப்புவது.

கஞ்சனை வெறுத்தவரை-கஞ்சனையும், தம்மை வெறுத்தவராகிய பகைவரையும், செற்றுளார்- அழித்த வரும், வெங்கண்-கொடுமை வாய்ந்த கண்களையுடைய, கறுத்த வரைக்கு-கரியமலை போன்ற யானைக்கு, விடை வெற்பர்-இடபகிரியில் எழுந்தருளியவர், கனக அம் பரத்தை-பொன் ஆடையை, பொறுத்த அரைக்கு- தரித்த இடையின் அழகுக்கும், ஆவி புலர்ந்து-உயிர் வருந்தி, வரைச் சிறுத்த கஞ்சம் கூப்பும்-இரேகைகளை உடைய சிறிய தாமரை மலர் போலும் கைகளைக் குவித்து வணங்கும், பேதைக்கு-மகள் பொருட்டு, என் செப்புவது- சொல்லத்தகுவது யாது?

கம்சனையும், தம்மைப் பகைத்த பல கொடியவர்களையும் கொன்று அழித்தவரும், கொடிய கண்களை உடைய கரிய மலை போன்ற யானைக்கு அஞ்சாதே என்று சொல்லி அபயம் அளித்து எதிரில் வந்து அருளியவரும், இடபகிரியில் எழுந்தருளியவருமாகிய அழகருடைய பொன் மயமான பீதாம்பரத்தைத் தரித்த திருவரையின் அழகைக் குறித்தும், மை போலும் கரிய திருமேனி நிறத்தைக் குறித்தும் உயிர் வருந்திக் கரைந்து இரேகைகளை உடைய சிறிய தாமரை போன்ற கைகளைக் குவித்துத் தொழுகின்ற எனது மிக்க இளமைப் பருவமுடையவளான பெண்ணின் நிலைமை குறித்து யாது சொல்வது?

செப்போ தனஞ்செழுந் துப்போசெவ் வாயென்று சேயிழையார்க்
கொப்போ தனஞ்சுரு கித்திரி வீர்கன லூதைமன்விண்
அப்போ தனமென் றமுதுசெய் தாரலங் காரர்பொற்றாள்
எப்போ தனந்த றவிர்ந்தேத்த நீங்க ளிருக்கின்றதே. (20)

தனம் செப்போ! செவ்வாய் செழுந்துப்போ! என்று சேயிழையார்க்கு ஒப்பு ஓதல் நஞ்சு உருகித் திரிவீர், நீங்கள் கனல், ஊதை, மண், விண், அப்பு ஓதனம் என்று அமுது செய்தார்-அலங்காரர் பொன்தாள் அனந்தல் தவிர்ந்து ஏத்த இருக்கின்றது எப்போது.

தனம்-முலைகள், செப்போ-பொற்கலசங்களோ, துப்போ-பவழமோ! ஓதல்-சொல்லுதலில், நஞ்சு-வருந்தி, திரிவீர்-திரிபவரே, ஊதை-காற்று, அப்பு-நீர், ஓதனம்-உணவு, அனந்தல்-மயக்கம், எப்போது- எக்காலம்?

கொங்கைகள் பொன் கலசங்களோ? சிவந்த வாயானது செழுமை வாய்ந்த பவளமோ? என்று செம்பொன் அணிகள் அணிந்தவரான பெண்களின் உறுப்புகளுக்கு உவமை கூறுவதில் நெகிழ்ந்து கரைந்து வீணே திரிகின்றவர்களே, நீங்கள் நீரும், நெருப்பும், காற்றும், நிலமும், வானமும் ஆகிய பஞ்ச பூதங்க்ளை உணவாக உட்கொண்டவராகிய அழகரின் அழகிய திருவடிகளைத் தாமதமின்றி வணங்க இருப்பது எக்காலத்தோ ?

இருக்கந் தரத்தனை வோர்களு மோதி யிடபகிரி
நெருக்கந் தரத்தனை யேத்தநின் றானை நிறத்ததுப்பின்
உருக்கந் தரத்தனைத் துன்பொழித் தானை யுலகமுண்ட
திருக்கந் தரத்தனை யல்லாதெண் ணேனொடு
தெய்வத்தையே. (21)

அந்தரத்து அனைவோர்களும் இருக்கு ஓதி இடபகிரி நெருக்கம் தரத் தனை ஏத்த நின்றானை- நிறத்த துப்பின் உருக்கந்தர் அத்தனைத் துன்பு ஒழித்தானை-உலகம் உண்ட திருக்கந்தரத்தனை அல்லாது ஒரு தெய்வத்தை எண்ணேன்.

அந்தரத்து அனைவோர்களும்-தேவலோகத்தார் எல்லாரும், இருக்கு-வேதம், நெருக்கம்தர-நெருக்க

முண்டாகும்படி, தனை ஏத்த-தன்னைத் துதிக்க, நிறத்துப் பின் உரு-செந்நிறத்தை உடைய பவழத்தைப் போன்ற நிறத்தை உடைய, கந்தர்-முருகருக்கு, அத்தனை-தந்தை யாகிய சிவபெருமானை, துன்பு-துன்பம், கந்கரத் தனை- கழுத்தை உடையவனை, எண்ணேன்-தியானிக்க மாட்டேன்.

மறந்தும் புறந்தொழேன் என்பது கருத்து. மேல் உலகில் உள்ள எல்லாத் தேவர்களும் வேத வாக்கியங் களைச் சொல்லி, சோலைமலையில் நெருக்கம் உண்டாகும்படி தன்னைத் துதிக்க நின்றவனும், பவழம் போன்ற வடிவு நிறத்தினை உடைய முருகக்கடவுளின் தந்தையாகிய சிவபிரானின் இரத்தல் துன்பம் ஒழித் தவனும்-உலகங்களை அமுது செய்த அழகிய கண்டத்தை உடையவனுமான ஸ்ரீமந் நாராயணனை அன்றி, வேறொரு தெய்வத்தைக் கருதேன்.

தெய்வம் பலவவர் நூலும் பலவகை தேர்பொழுதிற்
பொய்வம் பலவென்று தோன்றும்புல் லோர்கட்குப்
போதநல்லோர்
உய்வம் பலனு மவனேயென் றோதி யுணர்வர்நெஞ்சே !
கொய்வம் பலர்சொரி யுஞ்சோலை மாமலைக்
கொண்டலையே. (22)

நெஞ்சே, தெய்வம் பல, அவர் நூலும் பல, அவை தேர் பொழுதில் பொய் வம்பு அல என்று புல்லோர்கட்குத் தோன்றும், போத நல்லோர், உய்வம் பலனும் அவனே என்று கொய் வம்பு அலர் சொரியும் சோலை மாமலைக் கொண்டலையே ஓதி உணர்வர்.

தெய்வம் பல- தெய்வங்கள் பலவாகும், நூலும்-மத சாத்திரங்களும், தேர் பொழுதில்-ஆராயும்பொழுது, வம்பு-வீண், புல்லோர்கட்கு-அற்பர்களுக்கு, போத நல்லோர்-ஞானம் வாய்ந்த நல்லவர், உய்வம்- பிழைப் போம், பலனும்-பயனும், வம்பு அலர்-மணமுள்ள மலர்களை, சொரியும் - உதிர்க்கின்ற, கொண்டலையே -

மேகம் போன்றவராகிய கள்ளழகப் பெருமானையே, ஓதி உணர்வர்- துதித்துத் தியானஞ் செய்வர்.

மனமே, தெய்வங்கள் பல உள்ளன. அத்தேவர் களைப் பற்றிய ஆகமங்களும் பல உள்ளன. அந்நூல்களை ஆராய்ந்தால், அவைகள் பொய்மை உடையனவும், பயனற்றவையும் அல்லவென்று அற்பர் களுக்குத் தோன்றும். ஞானத்தை உடைய நல்லவர் களோ, இவ்வழியல்லாத வழிகளில் செல்லாமல் நல்வழிச் சென்று உய்யக்கடவோம். பரகதிக்கு உபயமாகின்ற பாத்திரமே அன்றி அவ்விடத்து அனு பவிக்கப்படும் பயனாகின்றவனும் அழகப்பிரானே, என்று எண்ணி விரும்பிப் பறிக்கத் தக்க மணமுள்ள மலர்கள் சிந்தப்பெற்ற சோலைமலையில் எழுந்தருளி இருக்கப் பெற்ற நீர்கொண்ட மேகம் போன்றவனான அழகனையே வணங்குவார்கள்.

கொண்டலை யாநிற்கு மைம்புலக் கோண்மக ரங்களினீர்ப்
புண்டலை யார்பிற விக்கடன் மூழ்குவ ருத்தமனைத்
தண்டலை யார்திரு மாலிருஞ் சோலைத் தனிச்சுடரைப்
புண்டலை யால்வணங் காரணங் கார்வினை
போகவென்றே. (23)

உத்தமனை - தண்டலை ஆர் திருமாலிருஞ் சோலைத் தனிச்சுடரை, அணங்கு ஆர் வினை போக, என்று புண் தலையால் வணங்கார், கொண்டு அலையா நிற்கும் ஐம்புலக்கோள் மகரங்களின் ஈர்ப்புண்டு, அலைஆர் பிறவிக்கடல் மூழ்குவர்.

அணங்கு ஆர்வினை போக-துன்பம் நிரம்பிய கருமங்கள் ஒழிக, வணங்கார்-பணியாத புல்லர், கொண்டு-தம்மை அடிமை கொண்டு, அலையா நிற்கும்- வருந்துகின்ற, ஐம்புலக்கோள் மகரங்களின்-பஞ் சேந்திரியங்களாகிய வலிய சுறா மீன்களினால், ஈர்ப்புண்டு - இழுக்கபட்டு, அலை ஆர்-அலைகள் நிரம்பிய, பிறவிக்கடல்-பிறப்பாகிய பெருங்கடலில்.

மனத்தைத் தம் வசமாகக்கொண்டு வருந்தி நிற்கிற ஐம்புலன்களாகிய வலிய சுறா மீன்களினால் இழுக்கபட்டு சஞ்சலங்கள் நிறைந்த பிறவித் துன்பமாகிய அலைகள் பொருந்திய கடலிலே மூழ்குவர். குளிர்ச்சி பொருந்திய சோலைகள் நிறைந்த சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற ஒப்பற்ற ஒளிவடிவமான எம் பெருமானைத் துன்பம் நிறைந்த கருமங்கள் ஒழிவனவாக என்று தசை பொருந்திய தங்கள் தலையைக் கொண்டு வணங்க மாட்டார்கள்.

என்று தரங்கலந் தேனற்றை ஞான்றுதொட் டிற்றைவரை
நின்று தரங்கிக்கின் றேற்கருள் வாய்நெடுங் கான்கடந்து
சென்று தரங்கக் கடனூர்த் திலங்கையிற் றீயவரைக்
கொன்று தரங்குவித் தாய்சோலை மாமலைக் கோவலனே. (24)

நெடுங்கான் கடந்து சென்று தரங்கக் கடல் தூர்த்து இலங்கையில் தீயவரைக் கொன்று தரம் குவித்தாய், சோலை மாமலைக் கோவலனே, என்று உதரம் கலந்தேன் அற்றை ஞான்று தொட்டு இற்றைவரை நின்று தரங்கிக்கின்றேற்கு அருள்வாய்.

கான்-காடு, தரங்கம்-அலைகளை உடைய, தரம்-மலைபோல, கோவலனே-ஆயர்குலச் செம்மலே, உதரம்-தாயின் வயிற்றில், அற்றை ஞான்று தொட்டு-அந்நாள் தொடங்கி, நின்று தரங்கின்றேற்கு-இடைவிடாமல் மனம் அலைகின்ற எனக்கு, அருள்வாய்-கருணை செய்.

கொடிய காட்டை நடந்து கடந்து அப்பால் சென்று, அலைகளை உடைய கடலை மலைகள் கொண்டு நிரப்பி அணைகட்டி, இலங்கையில் இருந்த கொடிய அரக்கர் களைக் கொன்று மலையாகக் குவித்தவனே, சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற ஆயனே, எப்பொழுது தாயின் வயிற்றில் வந்து புகுந்தானோ, அன்றைய நாள்தொடங்கி, இன்றைய நாள் அளவும் இடைவிடாது அலைகின்றவனாகிய எனக்குக் கருணை செய்வாய்.

கோவலன் பார்ப்புடன் கேகயஞ் சூழ்குளிர் சோலைமலைக்
காவலன் பாற்கடற் கண்டுயின் மாலலங் காரனென்றே
பாவலன் பாற்பணி வாரணி வானவ ராகிமறை
நாவலன் பார்ப்பதி நாதனண் ணாப்பத நண்ணுவரே. (25)

கோவலன்-பார்ப்புடன் கேகயம் சூழ் குளிர்சோலை மலைக்காவலன்-பாற்கடல் கண்துயில் மால் அலங் காரன், என்றே பாவல் அன்பால் பணிவார், அணி வானவர் ஆகி, மறை நாவலன் பார்ப்பதி நாதன் நண்ணாப் பதம் நண்ணுவர்.

கோவலன்-கோபாலன், பார்ப்புடன்-குஞ்சுகளுடன், கேகயம்-மயில்கள், காவலன்-தலைவன், என்றே- என்று துதிக்கொண்டே, பாவல் அன்பால்- பரவலையுடைய அன்பினால், பணிவார்-வணங்குபவர், அணி வானவர் ஆகி-அழகிய தேவராய், மறைநாவலன்-பிரமனும், பார்ப்பதி நாதன்-சிவபிரானும், நண்ணாப்பதம்-அடையாத பரம பதத்தை, நண்ணுவர்-அடைவர்.

ஆயனாய் வளர்ந்தவன், குஞ்சுகளுடனே மயில்கள் சூழப்பெற்ற குளிர்ந்த சோலை மலைக்குத் தலைவன். பாற்கடலிலே யோக நித்திரை கொண்டருள்கிற பெருமை பொருந்திய அழகன் என்று சொல்லிக் கொண்டே பரவுதலை உடைய பக்தியினால் வணங்குபவர்கள் அழகிய முத்தர்களாகி, வேதம் வல்ல நூலினை உடையவனான பிரமனும், பார்வதி நாயகனாக சிவ பிரானும் அடைய மாட்டாத பரமபதத்தை அடைவார்கள்.

நண்ணின னாக முடிமே னடித்தென்னை நாசமறப்
பண்ணின னாகமும் பாரு மளந்தன பண்டுதம்பி
மண்ணின னாக வனம்போ யினவளர் சோலைமலைக்
கண்ணின னாகங் கரியான் சிவந்த கழலிணையே. (26)

வளர்சோலை மலைக்கண் இனன்-ஆகம், கரியான்- சிவந்த கழலினை, நாகம் நண் இனன்

முடிமேல் நடித்து, என்னை நாசம் அறப் பண்ணின, நாகமும் பாரும் அளந்தன, பண்டு தம்பி மண்ணினன் ஆக வனம் போயின.

இனன்-சூரியனாய் விளங்குபவனும், ஆகம்-திருமேனி, நாகம்-காளியனாகிய பாம்பின், நண் இனன் முடிமேல்-இடைவெளி இன்றி நெருங்கிக் கூட்டமாயுள்ள சிகரங்களின் மீது, நாசம் அற-அழிவு கெடும்படி, நாகமும் பாரும்-விண்ணுலகையும், மண்ணுலகையும், பண்டு-இராமவதாரஞ் செய்த முன் காலத்தில், தம்பி-பரதன், மண்ணினன் ஆக-நில ஆட்சிக்கு உரியவனாக.

ஓங்கி வளர்ந்த சோலைமலையில் உதித்த சூரியன் போல் விளங்குகின்றவனும், திருமேனி கருத்து உள்ள வனுமான அழகப்பிரானுடைய, செந்நிறமாயுள்ள இரு திருவடிகள் பாம்பினது (காளியன்) நெருங்கித் தொகுதி யாய் உள்ள தலைகளின் மேல் நடனஞ் செய்து, என்னை அழியாது உய்யும்படிச் செய்து அருளின. மேலுல கத்தையும், பூமியையும் அளந்தருளின. முன்பு அடுத்த தம்பியான பரதாழ்வான் நிலவுலகத்து அரசாட்சிக்கு உரியனாகுமாறு தாம் வனவாசம் சென்றன.

கழலப் புகுந்த வளையறி யாரென் கருத்தறியார்
அழலப் புகன்றொருப் பாரன்னை மாரறு காற்சுரும்பு
சுழலப் புனைந்த துழாய்மார்பர் மாலிருஞ் சோலையென்னார்
தழலப் புவரென் றனங்களி லேசந்த னங்களென்றே. (27)

அன்னைமார், கழலப்புகுந்த வளை அறியார், என் கருத்து அறியார் அழலப் புகன்று ஒறுப்பார், அறுகாற் சுரும்பு சுழலப் புனைந்த துழாய் மார்பர் மாலிருஞ்சோலை, என்னார் சந்தனங்கள் என்று என் தனங்களிலே தழல் அப்புவர்.

அன்னைமார்-என் உடல் மெலிவிற்குக் காரணம் அறியாத என் தாய்மார். கழலப் புகுந்த-கையிருந்து

நமுவி விழத் தொடங்கிய, வளை-வளையல்களின் பண்பை, அழலப் புகன்று ஒறுப்பார்-வெதும்பக் கூறி வருந்துவர், அறுகால் சுரும்பு-ஆறு கால்களை உடைய தேன் வண்டுகள், சுழல- சூழ்ந்து பறக்க, புனைந்த-தரித்த, என்னார்- என்று நினையார், தழல் அப்புவர்-நெருப்பை அப்புவர்.

தாய்மார்கள் கழன்று விழத்தொடங்கிய வளையல் களின் தன்மையை உணரார், என் மனதிற் கொண்ட காதலை உள்ளபடி உணரார். என் மனம் கொதிக்கக் கூறி வருத்துவார்கள், ஆறு கால்களுள்ள வண்டுகள் சுழன்று மொய்க்கும்படி தரித்த திருத்துழாய் மாலையை உடைய திருமார்பினரான அழகரது சோலை மலை என்று ஒரு தரமேனும் சொல்லார், சந்தனக் குழம்பு வகைகள் என்று சொல்லி என் தனங்களின் மேல் நெருப்பை வாரிப் பூசி நிரப்புவார்கள்.

தனத்துக் கராவிய வேல்விழிக் கேக்கற்றுத் தையலரால்
தினத்துக் கராகித் திரிவார் பலர்சிலர் செங்கமல
வனத்துக் கராசலங் காத்தாற்குச் சோலை மலையினின்ற
கனத்துக் கராவணை யாற்கெம்பி ராற்குள்ளங் காதலரே. (28)

தனத்துக்கு, அராவிய வேல் விழிக்கு ஏக்கற்று, தையலரால் தினத் துக்கராகித் திரிவார் பலர், சிலர் செங்கமல வனத்துக் கராசலம் காத்தாற்கு-சோலை மலையில் நின்ற கனத்துக்கு-அரா அணையாற்கு-எம்பிராற்கு உள்ளம் காதலர்.

தனத்துக்கு - பெண்களின் முலையழகிற்கும், அராவிய வேல்-அரத்தால் கூர்மையாக்கப்பட்ட வேல் போன்ற, ஏக்கற்று-ஏங்கித்தவித்து, தையலரால்- அப் பெண்ணால், துக்கராகி-துன்பமுடையவராய், வனத்து-மடுவின் நீரிலே, கராசலம்-கையை உடைய மலை போன்ற கஜேந்திரனாகிய யானையை, கனத்துக்கு-நீல மேகம் போன்றவனான திருமாலுக்கு, அரா

அணையாற்கு- ஆதிசேடனான பாம்பைப் படுக்கையாக உடையவனுக்கு, எம்பிராற்கு-எம்பெருமானுக்கு, காதலர்-அன்புடையவராவர்.

கொங்கைகளின் அழகுக்கும், அராவிக் கூர் செய்யப் பெற்ற வேல் ஆயுதம் போன்ற கண்ணழகுக்கும் ஏங்கி, அப்பெண்களின் தொடர்பினால் எந்நாளும் துன்பமுடையவர்களாய், வீணே அலை பவர்கள் பலராவர், சிலரே, செந்தாமரை மலர்கள் மலர்ந்த நீரினிடத்து கஜேந்திராழ்வானைப் பாதுகாத்து அருளியவனும், சோலைமலையிலே நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற காளமேகம் போன்றவனும், ஆதிசேடனை படுக்கையாக கொண்டவனுமாகிய எம் பெருமானிடத்தில் விருப்பம் உடையவராவர்.

காதலைப் பத்தினி மேல்வைத்த நீசக் கருநிருதன்
மாதலைப் பத்தியை மண்ணிலிட் டாய்நின்னை
வாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழு மிடபவெற்பா
தீதலைப் பத்தியங் கித்திரி வேற்கருள் செய்தருளே. (29)

பத்தினிமேல் காதலை வைத்த நீசன் கருநிருதன் மாதலைப் பத்தியை மண்ணில் இட்டாய், நின்னை வாழ்த்தி தொண்டர்க்கு ஈதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழும் இடப வெற்பா, தீது அலைப்பத் தியங்கித் திரிவேற்கு அருள் செய்தருள்.

பத்தினி மேல்-மனைவியான சீதா பிராட்டியிடம், நீசன்-கீழ்மகனான, கருநிருதன்-கரிய அரக்கனான இராவணனுடைய, மாதலைப் பத்தியை-பெரிய தலையின் வரிசையை, தொண்டர்க்கு-அடியவர்க்கு, பத்தியை-அன்பை, தீது அலைப்ப-தீவினைகள் பற்றி வருத்த, தியங்கித் திரிவேற்கு-மனம் கலங்கி அலையும் எனக்கு,

ஆசையை அறக்கற்புடைய நின் மனைவியான சீதாப் பிராட்டியிடம் வைத்த கீழ் மகனான இராவணன் என்னும்

கரிய அரக்கனுடைய பெரியதலை வரிசையைத் தரையில் தள்ளியவனே, உன்னை வாழ்த்தி நின் அடியவர்களுக்குக் கொடுத்தலையும், பக்தியையும் செய்பவர்கள் இனிது வசிக்கும் இடமான இடப கிரியில் எழுந்தருளி இருப்பவனே, தீவினை வருத்த கலங்கி அலைபவனான எனக்குக் கருணை செய்து அருள்வாய்.

அருடரு மங்கை விடாதேத்து மன்பருக் கன்பரெல்லில்
இருடரு மங்கை யெறியாழி யாரிசைக் கின்னரரும்
கெருடரு மங்கைய ரும்வா ழிடப கிரியிற்கல்லா
முருடரு மங்கைய லெய்திலன் றேயவர் முத்தரன்றே. (30)

அருள் தருமம் கைவிடாது ஏத்தும் அன்பருக்கு அன்பர்-எல்லில் இருள் தரும் அம்கை எறி ஆழியார் இசைக்கின்னரரும் கெருடரும் மங்கையரும் வாழ் இடப கிரியின் அங்கு அயல் கல்லா முருடரும் எய்தில் அன்றே அவர் முத்தர் அன்றே.

அருள் தருமம்-கிருபையையும் தருமத்தையும், எல்லில்-பகலில், இருள்தரும்-இருளை உண்டாக்கிய, அம்கை-அழகிய கையினால், எறி ஆழியார்-வீசிய சுதரிசனம் என்னும் சக்கரத்தையுடையவர், இசைக் கின்னரரும்- இசையில் வல்லவரான கின்னரரும், மங்கையரும்- அவர்தம் பெண்களும், அங்கு அயல்- அவ்விடத்தினருகில், முருடர்-மூடர், எய்தில்-அடைந்தால், அன்றே- அப்பொழுதே, அன்றே-அல்லவா ?

கருணையையும், அறத்தையும் விட்டு விடாமல் வணங்குகின்ற அடியார்களிடத்தில் அன்பை உடையவரும், பகற்பொழுதிலே இருளை உண்டாக்கிய அழகிய தம் திருக்கையால் எறிந்த சக்ராயுதத்தை உடையவருமான பெருமானது, இசை பாடுவதில் வல்லை கின்னரரும், மாதர்களும் வாழுமிடமான சோலை மலையின் அருகிலே, கல்வி அறிவில்லாத மூடர்கள், வந்தாலும், அப்பொழுதே அவர்கள் முக்தர்கள் ஆவரன்றோ ?

முத்தரன் றேநின் கழலொரு காற்கை முகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன் றேநினக் கேபித்த ராகிற் பிரமன்கங்கை
வைத்தரன் றேய்துயர் தீர்த்தாய் நின் சோலை மலைமருவும்
பத்தரன் றேபரி வாலென்னை யாளும் பரமர்களே. (31)

பிரமன் கம் கை வைத்து அரன் தேய்துயர் தீர்த்தாய், நின் கழல் ஒருகால் கை முகிழ்க்கப் பெற்றோர் அன்றே முத்தர், நினக்கே பித்தராகில், பித்தர் அன்றே, நின் சோலை மலை மருவும் பக்தரன்றே பரிவால் என்னை ஆளும் பரமர்கள்.

பிரமன் கம்-பிரம கபாலம், அரன்-சிவபிரான், தேய் துயர்-வருந்திய துயரத்தை, தீர்த்தாய்-நீக்கியவனே, கழல்-திருவடிகளை, ஒருகால்-ஒருமுறை, கை முகிழ்க்கப் பெற்றோர்-கைகூப்பி வணங்கியவர், அன்றே முத்தர்-அப்பொழுதே முத்தி அடைந்தவராவர். நினக்கே பித்தராகில்-உன்னிடமே காதற் பைத்தியம் உடையவ ரானால், பித்தர்அன்றே-பைத்தியக்காரர் அல்லர், மருவும் பத்தர் அன்றே-சாரும் அன்பரல்லரோ? பரிவால்-அன்பி னால், என்னை ஆளும் பரமர்கள்-என்னை அடிமை கொள்ளும் சான்றோர்.

பிரமனது தலையைக் கையில் வைத்துக் கொண்டு சிவபிரான் வருந்திய துன்பத்தை ஒழித்தருளிய வனே, உன் திருவடிகளை ஒருதரம் கைகூப்பித் தொழப் பெற்றவர்கள் அப்பொழுதே முக்தி பெற்றவர்களாவர். உன்னிடத்தே பக்திப் பித்து ஏறியவர்களாயின், பித்துடை யவர் என்று இகழத்தக்கவராகார். உன் சோலை மலையை அடைந்திருக்கின்ற அடியார்களன்றோ அன்பினால் என்னை ஆட்கொள்ளும் மேலோர் ஆவர்.

பரந்தா மரைத்திரு மாலிருஞ் சோலைப் பரமரைக்கால்
கரந்தா மரையன்ன கார்நிறத் தாரைக் கடல்கடக்குஞ்
சரந்தா மரைதிரி கான்போ யிலங்கைத் தலைவன்பத்துச்
சிரந்தா மரைக்கணத் தெய்தாரை யெய்தற்குத் தேர்மனமே. (32)

மனமே, பரந்தாமரை-திருமாலிருஞ் சோலைப் பரமரை-கால் கரம் தாமரை அன்ன கார் நிறத்தாரை- தாம் மரை திரிகான் போய், கடல் கடக்கும் சரம் இலங்கைத் தலைவன் பத்துச் சிரம்தாம் அரைக் கணத்து எய்தாரை எய்தற்குத் தேர்.

பரந்தாமர்-பரமபதநாதர், பரமர்-தலைவர், கார்-நீலமேகம் போலும், தாம் மரைதிரி கான்- துள்ளிக் குதிக்கும் மான்கள் உலாவுகின்ற காட்டில், கடல் கடக்கும் சரம்-வருணனை வென்ற அம்பினால், இலங்கைத் தலைவன்-இராவணனுடைய, அரைக்கணத்து எய் தாரை-அரை விநாடியில் அறுத்து வீழ்த்திய பெருமானை, எய்தற்கு-அடைதற்கு, தேர்-துணிவு கொள்.

மனமே, பரமபதத்தை உடையவரும், சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற தலைவரும், திருவடிகளும், திருக்கைகளும் தாமரை மலர்களை ஒத்து இருக்கப் பெற்ற காளமேகம் போன்ற திருமேனி நிறத்தை உடையவரும், தாவுகின்ற மான்கள் சஞ்சரிக்கப்பட்ட வனத்திலே வாசகமாகச் சென்று கடல் அரசனை வென்ற அம்பினால் இலங்கை மன்னனான இராவணனுடைய பத்து தலைகளையும் அரைக்கணப் பொழுதிலே துணித்து தள்ளியவருமான எம்பெருமானைச் சரணடைவதற்குத் துணிவு கொள்வாய்.

தேரா யிரவு பகலிரை தேடுவை தீமைநன்மை
பாரா யிரங்குவை பாவைய ராற்பண்டு மாவலிபால்
சோரா யிரந்த வனைத்திரு மாலிருஞ் சோலைநின்ற
பேரா யிரமுடை யானைநெஞ் சேயென்று பேணுவையே. (33)

நெஞ்சே, தேராய் இரவு பகல் இரை தேடுவை, தீமை நன்மை பாராய், பாவையரால் இரங்குவை, பண்டு மாவலி பால் சோர் ஆய் இரந்தவனை, திருமாலிருஞ் சோலை நின்ற பேர் ஆயிரம் உடையானை என்று பேணுவையே !

தேராய்-ஆராய்ந்து தெளிவடையமாட்டாய், பாவைய ரால்-பெண்டிர் காரணமாக, இரங்குவை-வருந்துவாய், பண்டு-வாமன அவதாரம் செய்து பழைய காலத்தில், சோர் ஆய்-வஞ்சகமாய், இரந்தவனை-மூன்றடி மண் யாசித்த பெருமானை, நின்ற-நின்ற திருக்கோலத்தில் உள்ள, என்று பேணுவையே - எக்காலத்தில் தியானித்து ஈடேறுவாயோ !

மனமே, ஆராய்ந்து தெளியாமல் இரவும் பகலும் உணவைத் தேடி அலைகின்றாய், தீவினைகள், நல்வினைகள் நோக்குகின்றாய் இல்லை, பெண்கள் காரணமாக உருகுவாய், முன் ஒரு காலத்தில் மாவலி மன்னனிடம் கபடமாக யாசித்தவனும், சோலைமலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி இருக்கின்ற ஆயிரம் திருநாமங்களை உடையவனுமான எம்பெருமானை எக்காலத்தில் விரும்பி வணங்குவாயோ ?

பேணிக் கவித்த வரைக்குடை யாய் பெரி யோர் பதின்மர்
ஆணிக் கவித்தமிழ் மாலைகொண் டாயழ காகரிய
மாணிக் கவித்தக மாமலை யே வண் டுளவுக்கல்லால்
பாணிக் கவித்தடங் காதுவெங் காமப் படர்கனலே. (34)

பேணிக்கவித்த வரைக்குடையாய், பெரியோர் பதின்மர் ஆணிக் கவித்தமிழ் மாலை கொண்டாய். அழகர், வித்தக, கரிய மாணிக்க மாமலையே, வெங்காமப் படர்கனல் வண்துளவுக்கு அல்லால் பாணிக்கு அவித்து அடங்காது.

பேணிக்கவித்த - ஆயரையும் கன்றுகாலிகளையும் ஆதரித்துப் பிடித்த, வரைக்குடையாய்- கோவர்த்தனம் என்னும் மலைக்குடையை உடையவனே, பெரியோர் பதின்மர்-பத்து ஆழ்வாருடைய, ஆனி சிறப்பு வாய்ந்த, வித்தக-ஞான சொரூபியே, படர்கனல்-பரவும் தீயானது, துளவுக்கு அல்லால்-துளசி மாலைக்கு தணிதல் அன்றி, பாணிக்கு-நீரால்.

அன்பு கொண்டு ஆக்களிடத்தும், ஆயரிடத்தும் எடுத்துப் பிடித்த கோவர்த்தன மலையாகிய குடையை உடையவனே, பெரியவர்களான பத்து ஆழ்வார் களுடைய சிறந்த தமிழ்ப் பாமாலைகளாகிய திவ்வியப் பிரபந்தங்களை ஏற்றுக்கொண்டவனே, அழகனே, ஞானத்தையுடைய கருநிறமானதொரு மாணிக்க மயமாகிய பெரிய மலை போன்றவனே, மெல்லிய காதலாகிய மேன்மேற் பரவுகின்ற நெருப்பானது வளப்பம் உள்ள திருத்துழாய் மாலைக்குத் தணியுமே அன்றி, நீரினால் தணிக்கப்பட்டு அடங்கிவிட மாட்டாது.

படராகு வால்குவி யக்குழ லூதிய பாலரையும்
அடராகு வாகனன் றாதைக்கிட் டாரலங் காரர்துழாய்க்
கிடராகு வார்பலர் காண்டமி யேனை யெரிப்பதென்னீ
விடராகு வாய்க்கொண் டுடல்சுட்டுக் கான்றிட்ட
வெண்டிங்களே. (35)

விடராகுவாய்க் கொண்டு உடல் சுட்டுக் கான்றிட்ட வெண்டிங்களே, படர் ஆகுவால் குவியக் குழல் ஊதிய பாலர்-ஐயம் அடர் ஆகு வாகனன் தந்தைக்கு இட்டார்-அலங்காரர் துழாய்க்கு இடர் ஆகுவார் பலர்காண், தமியேனை நீ எரிப்பது என்.

விட ராகு - நஞ்சுடைய ராகு என்னும் பாம்பு, வாய்க் கொண்டு- வாயால் பற்றி, உடல் சுட்டுக்கான்றிட்ட- அதன் உடலைச் சுட்டது காரணமாக அது கக்கிவிட்ட, வெண்டிங்களே-வெள்ளிய சந்திரனே, படர் ஆ-பல இடங்களில் பரவிய பசுக்கள், குவால் குவிய-கூட்டமாகத் திரளும்படி, பாலர்-இடைப்பிள்ளை யானவரும், ஐயம் அடர்- பலி ஏற்றலால் துன்புற்ற, ஆகு வாகனன்-பெருச்சாளி வாகனனாகிய வினாயகனுடைய, தாதைக்கு-தந்தை யாகிய சிவபிரானுக்கு, இட்டார்-பிச்சையிட்டவரும், அலங்காரர்-அழகரது, துழாய்க்கு-துளசி மாலையைப் பெறுவதற்கு விரும்பி, இடர்

ஆகுவார்-துன்புறுவர், தமியேனை-திக்கற்ற என்னை மட்டும், நீ எரிப்பது என்-நீ எரிப்பதற்குக் காரணம் என்ன ?

நஞ்சினை உடைய இராகு என்னும் பாம்பினால் வாயில் பெய்து கொள்ளப்பட்டு அதன் உடம்பைச் சுடுதலால் உமிழ்ந்து விடப்பெற்ற வெண்மையான சந்திரனே, பரவிச் சென்றுள்ள பசுக்கள் தொகுதியாக வந்து சேரும்படி வேய்ங்குழல் ஊதிய ஆயர்குலப் பிள்ளையாய் வளர்ந்த வரும், பிச்சை ஏற்றலால் வருந்திய பெருச்சாளியை வாகனமாக உடைய வினாயகனது தந்தை சிவ பிரானுக்குப் பிச்சையிட்டவருமாகிய அழகரது திருத் துழாய் மாலையைப் பெறுவதற்குத் துன்பமடைபவர் பலருளர் அன்றோ? என் ஒருத்தியை மட்டும் நீ எரிப்பது ஏனோ ?

திங்களப் பாநின்ற செந்தீக் கொழுந்திற் செழுஞ்சங்குபோ
லுங்களப் பாவை யுருகுவ தோர்கில ரும்பரெல்லாம்
எங்களப் பாஎமைக் காவா யெனவுல கீரடியில்
அங்களப் பான்வளர்ந் தார்சோலை மாமலை யாதிபரே. (36)

உம்பர் எல்லாம், எங்கள் அப்பா, எமைக்காவாய், என உலகு ஈரடியில் அளப்பான் அங்கு வளர்ந்தார் சோலை மலை ஆதிபர், செழுஞ்சங்கு போலும் களப்பாவை திங்கள் அப்பா நின்ற செந்தீக் கொழுந்தின் உருகுவது ஓர்கிலர்.

உம்பர்-தேவர், அளப்பான்-அளப்பதற்காக, அங்கு-மாவலி எனும் அசுரன் தாரை வார்த்துக்கொடுத்த அவ்விடத்தில், வளர்ந்தார்-திரிவிக்கிரமராய் வளர்ந்தவ ராகிய, ஆதிபர்-தலைவர், களப்பாவை-கழுத்தையுடைய பாவை போன்ற தலைவி, திங்கள்-சந்திரன், அப்பா நின்ற-அப்புகின்ற, கொழுந்தின்-தீப்பிழம்பால், ஓர்கிலர்-அறியாதிருக்கின்றனர்.

தேவர்கள் அனைவரும் எங்கள் இறைவனே, எங்களைப் பாதுகாத்து அருள்வாய் என்று வேண்ட, உலகங்களை இரு அடிகளால் அளவிடுமாறு அப்பொழுது வளர்ந்தருளியவராகிய சோலைமலைக்குத் தலைவரான அழகர், செழுமையான சங்கு போன்ற கழுத்தினை உடைய அழகிய இத்தலைவி, சந்திரன் பூசியிடுகின்ற தீச்சுவாலையினால் கரைந்து வருந்துவதை அறிகின்றார் இல்லை.

ஆதிய ராவிற் றுயிலலங் கார ரழகரன்பாம்
வேதிய ராவுதி வீற்றிருப் பாரண்ட மீதிருக்கும்
சோதிய ராவின்பின் போந்தாரை யன்றித் தொழேனுடலைக்
காதிய ராவினும் பொன்மா மகுடங் கவிக்கினுமே. (37)

ஆதி அராவில் துயில் அலங்காரர் அழகர்-அன்பு ஆம் வேதியர் ஆவுதி வீற்றிருப்பார்-அண்ட மீது இருக்கும் சோதியர்-ஆவின் பின் போந்தாரை அன்றி, உடலைக் காதி அராவினும், பொன் மா மகுடம் கவிக்கினும் தொழேன்.

ஆதி அரா-ஆதிசேடன், ஆவுதி-ஆகுதியில், அண்ட மீது-உலகத்திற்கு மேலான பரமபதத்தில், ஆ-பசு, போந்தாரை-சென்றவரை, காதி-வருத்தி, அராவினும்-அரத்தால் தேய்த்தாலும், கவிக்கினும்-சூட்டினாலும்.

ஆதிசேடன் மேல் பள்ளிகொண்டு யோக நித்திரை செய்கின்ற அலங்காரர் என்றும் அழகர் என்றும் திருநாமம் உடையவரும், அன்பு கொண்ட அந்தணர்களுடைய ஆகுதிகளில் வீற்றிருப்பவரும், அண்ட கோளத்திற்குப் புறம்பே உள்ளதான பரமபதத்தில் எழுந்தருளி இருக்கின்ற ஒளி வடிவானவரும், பசுக்களை மேய்ப்பதற்கு அவற்றின் பின்னே சென்றவருமாகிய எம்பெருமானை அல்லாமல், என் உடம்பைக் கூறு செய்து அராவி வருத்தினாலும், பொன்மயமான முடியைச் சூட்டினாலும் வணங்கமாட்டேன்.

கவித்தானை மன்னற்கு நட்பாய் முடிகவித் தானையன்று
புவித்தானை வற்றப் பொழிசரத் தானைப் பொருதிலங்கை
அவித்தானை மாலிருஞ் சோலைநின் றானை யழகனைமுன்
தவித்தானை வாவென வந்தானைப் பற்றினென்
றஞ்சமென்றே. (38)

கவித்தானை-மன்னற்கு நட்பாய் முடி கவித்தானை-அன்று புவித்தானை வற்றப் பொழி சரத்தானை-பொருது இலங்கை அவித்தானை-மாலிருஞ்சோலை நின்றானை-முன் ஆனை தவித்து வா என வந்தானை-அழகனைத் தஞ்சம் என்று பற்றினென்.

கவித்தானை மன்னற்கு-குரங்குச் சேனையை உடைய மன்னனான சுக்ரீவனுக்கு, முடி கவித்தானை-மகுடம் சூட்டியவனை, அன்று-இராமனாக அவதரித்த அந்நாளில், புவித்தானை-நிலமகளுக்கு ஆடையாகிய கடல், சரத்தானை-அம்புகளை உடையவனை, அவித்தானை-அழித்தவனை, ஆனை-கஜேந்திரன். தஞ்சம்-அடைக்கலம்.

வானரப் படைகளைக் கொண்ட வானர மன்னனான சுக்ரீவனுக்கு நண்பனாகி அவனுக்கு முடி சூட்டுவித்தவனும், அந்நாளில் பூமிதேவிக்கு ஆடையாகிய கடல் தபிக்கும்படி செலுத்தத் தொடங்கிய நெருப்புக் கணையை உடையவனும், போர் செய்து இலங்கையினை அழித்திட்டவனும், சோலைமலையில் நின்ற திருக் கோலமாய் எழுந்தருளி இருக்கிறவனும், முன் ஒரு காலத்திலே கஜேந்திராழ்வான் வந்தருள் என்று அழைக்க வந்தருளியவனுமான அழகனைச் சரணம் என்று அடைந்தேன்.

தஞ்சந் தனமென்று தேடிப்புல் லோர்தைய லார்கடைக்கண்
வஞ்சந் தனங்கொள்ள வாளா விழப்பர் மதியுடையோர்
செஞ்சந் தனப்பொழின் மாலிருஞ் சோலைத் திருநெடுமால்
நெஞ்சந் தனக்குவப் பாகநல் காநிற்பர் நேர்படினே. (39)

புல்லோர் தஞ்சம் என்று தனம் தேடி, தையலார் வஞ்சம் தனம் கொள்ள வாளா இழப்பர், மதி உடையோர் நேர்படின், செஞ்சந்தனப் பொழில் மாலிருஞ்சோலைத் திருநெடுமால் நெஞ்சந்தனக்கு உவப்பாக நல்கா நிற்பர்.

புல்லோர்-அற்பர், தஞ்சம் என்று-பாதுகாப்பாகும் என்று, வஞ்சம் தனம்-வஞ்சனையும் கொங்கைகளும், கொள்ள-அபகரித்துக்கொள்ள, வாளா-வீணாக, நேர் படின்-கிடைக்குமாயின், சந்தனப்பொழில்-சந்தனமரச் சோலை சூழ்ந்த, உவப்பாக-மகிழ்ச்சி உண்டாகும்படி, நல்கா நிற்பர்-கொடுத்திருப்பர்.

அற்பர்கள் செல்வமே பாதுகாப்பது என்று கருதி முயன்று அதனைச் சம்பாதித்துப் பெண்களுடைய கடைக்கண்களின் வஞ்சனையும், கொங்கைகளின் பொலிவும் கவர்ந்து கொள்ள, வீணாக இழந்து விடுவார்கள். நல்லறிவுடையவர்களோ கிடைத்தால் சிவந்த சந்தனமரங்களின் சோலையையுடைய திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற திருமாலின் திரு உள்ளத்தும் உகப்பு உண்டாகும்படி உபயோகிப் பார்கள்.

நேராய வேதனை நெஞ்சிடந் தாய்நெடுஞ் சோலைமலைக்
காராய வேதனை முன்படைத் தாய்நின் கழற்குத்தொண்டென்
றாராய வேதனைப் புன்பிறப் போயு மவாவழியிற்
பேராய வேதனை யில்லுழைப் போரும் பிழைப்பர்களே. (40)

நேராய ஏதனை நெஞ்சு இடந்தாய், நெடுஞ்சோலை மலைக் கார் ஆய, வேதனை முன் படைத்தாய், நின் கழற்குத் தொண்டு என்று ஆராயவே தனைப் புன்பிறப்பு ஓயும், அவா வழியின் பேராய வாதனை இல் உழைப் போரும் பிழைப்பர்கள்.

நேராய-எதிர்நின்ற, ஏதனை-குற்றமுடையவனான இரணியனை, நெஞ்சு இடந்தாய்-மார்பைப் பிளந்தவனே,

கார் ஆய-கரிய இடைச்சிறுவனாய் இருந்தவனே, வேதனை-பிரமனை, தனை-ஒருவனை, ஓயும்- ஓய்ந்து விடும், அவாவழியின்-பேராசை வழியால், பேராய வாதனை இல்-பெரிய கூட்டமானது துன்பங்களைத் தரும் சமுசாரத்தில்.

எதிராய் நின்ற குற்றத்தை உடையவனான இரணியனுடைய மார்பினைப் பிளந்தவனே, நெடிய திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளி இருப் பவனும், கரிய திருநிறமுடைய இடைப்பிள்ளையாய் வளர்ந்தவனுமானவனே, பிரமனை முன்பு படைத்தவனே, உன் திருவடிகளுக்குத் தாம் அடிமையென்று ஆராய்ந் துணரவே, இழிவான பிறப்பு வகைகள் எத்தனையுண்டோ, அத்தனையும் ஓய்ந்துவிடும். ஆசை வழியால் பெரிய தொகுதியான துன்பங்களைத் தருகின்ற சம்சார பந்தத்தில் அகப்பட்டு வருந்துவோரும் உய்வார்கள்.

பிழைத்தலை யானெண்ணிப் பேசுகின் றேனிப்
பிணிமற்றொன்றால்
மழைத்தலை வார்குழ லீர் தணி யாது வருணனைமுன்
அழைத்தலை யங்கடைத் தாரலங் கார ரலங்கனல்கீர்
முழைத்தலை நின்று மலயா நிலம்வந்து மோதுமுன்னே. (41)

தலை மழை வார் குழலீர், யான் பிழைத்தலை எண்ணிப் பேசுகின்றேன், இப்பிணி மற்றொன்றால் தணியாது, மலய அநிலம் முழைத்தலை நின்று வந்து மோதும் முன்னே வருணனை முன் அழைத்து அங்கு அலை அடைந்தார் அலங்காரர் அலங்கல் நல்கீர்.

தலை-தலையில், மழைவார் குழலீர்-மேகம் போலும் நீண்ட கூந்தலையுடைய தோழியரே, இப்பிணி-இக் காதல் நோய், மலய அநிலம்-மலய மலையிலிருந்து வரும் காற்றாகிய தென்றல் காற்று, முழைத்தலை நின்று-குகையிலிருந்து, அலை-கடலை, அங்கு-சேது பந்தனம் செய்த அப்பொழுது, அலங்கல் நல்கீர்-மலர்மாலையைக் கொண்டுவந்து கொடுங்கள்.

தலையிலே மேகம் போன்ற நீண்ட கூந்தலை உடையவர்களே, நான் பிழைக்கும் வழியினை ஆராய்ந்து சொல்லுகின்றேன், இக்காதல் நோய் வேறொரு பரிகாரத்தால் அடங்காது. மலய மாருதமாகிய தென்றல் காற்று அம்மலைய பருவத்தினது குகையிடத்தினின்று வந்து தாக்குவதற்கு முன்னமே, வருணனை எதிரில் வரவழைத்துக் கடலுக்கு அப்பொழுது அணைகட்டி அடைத்தவரான அழகருடைய மாலையைக் கொணர்ந்து கொடுங்கள்.

மோதாக வந்தனை மூட்டிலங் கேசன் முடிந்துவிண்ணின்
மீதாக வந்தனை வில்லெடுத் தேவிடை வெற்பினின்ற
நாதாக வந்தனைச் செற்றா யுனையன்றி நான் மறந்தும்
தீதாக வந்தனை செய்யேன் புறஞ்சில தேவரையே. (42)

விடை வெற்பில் நின்ற நாதா, கவந்தனைச் செற்றாய், மோது ஆகவந்தனை மூட்டு இலங்கா ஈசன் முடிந்து விண்ணின் மீதாக வில் எடுத்து வந்தனை, உனை அன்றிச் சில புறத்தேவரை நான் மறந்தும் தீதாக வந்தனை செய்யேன்.

செற்றாய்-அழித்தவனே, ஆகவந்தனை-போரை, விண்ணின் மீதாக-விண்ணுலகு அடையும்படி, வந்தனை-வந்தாய், தீதாக-தீமையுண்டாகும்படி.

இடபகிரியாகிய சோலைமலையில் நின்ற திருக் கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற தலைவனே, கவந்தன் என்ற இராட்சசனைக் கொன்று அழித்தவனே, தாக்கிச் செய்வதான போரை வலிய உண்டாக்கி நடத்திய இலங்கைக்குத் தலைவனான இராவணன் இறந்து மேலுலகில் சேரும்படி, கோதண்டத்தைக் கையில் எடுத்து வந்தாய். பெரும்பிழை செய்து பகையாய் எதிர்த்தவனும் நற்கதி சேரும்படி கருணை புரிந்த உன்னையே வணங்குவனேயன்றி, வேறு சில தேவர்களை நான் மறந்தாயினும் தீமை நிகழுமாறு வணங்கமாட்டேன்.

தேவரை யாதன் மனிதரை யாதல் செழுங்கவிதை
நாவரை யாம னவிலுகிற் பீர்நம்மை யாளுஞ்செம்பொன்
மேவரை யானை யிருஞ்சோலை வேங்கட மெய்யமென்னும்
மாவரை யானை யொருவனை யேசொல்லி வாழுமினே. (43)

தேவரையாதல், மனிதரையாதல், நா வரையாமல் செழுங்கவிதை நவிலுகிற்பீர், நம்மை ஆளும் செம்பொன் மேவு அரையானை-இருஞ்சோலை, வேங்கடம், மெய்யம் என்னும் மா வரையானை - ஒருவனையே சொல்லி வாழுமின்.

தேவரையாதல்- தேவரையாவது, நா வரையாமல்- நாவினால் வரையறை செய்யாமல், நவிலுகிற்பீர்- சொல்லித் துதிப்பவர்களே, செம்பொன் மேவு-பீதாம்பரம் பொருந்திய, அரையானை-இடையை உடையவனை, மா வரையானை-பெரிய மலைகளில் எழுந்தருளியவனை, ஒருவனை-ஒப்பற்றவனை, சொல்லி-துதித்து.

தேவர்களைக் குறித்தாவது, மனிதர்களைக் குறித்தாவது நாவினால் வரையறை இன்றி, செழுமையான பாடல்களைப் பாடித் துதிப்பவர்களே, நம் அனைவரையும் அடிமையாகக் கொண்டுள்ள, மாற்று யர்ந்த பொன்னாடை பொருந்திய திருவரையை உடைய வனும், சோலைமலை, திருமலை, திருமெய்யம் என்னும் பெரிய மலைகளைக் கொண்டவனுமாகிய எம்பெருமான் ஒருவனையைக் கவிபாடித் துதித்துப் பேரின்ப வாழ்வு பெற்று உய்யுங்கள்.

வாழுமின் பங்கயச் சுந்தர வல்லிம ணாளன்வெற்பைச்
சூழுமின் பந்தித்த தொல்வினை தீர்ந்துய்யத் தொங்கல்சுற்றும்
தாழுமின் பஞ்சணை மேன்மட வார்தட மாமுலைக்கே
வீழுமின் பங்கரு தித்துன்ப யோனியில் வீழ்பவரே. (44)

சுற்றும் தொங்கல் தாழும் இன் பஞ்சு அணைமேல் மடவார் தட மா முலைக்கே வீழும் இன்பம் கருதித் துன்ப யோனியில் வீழ்பவரே, பந்தித்த தொல்வினை தீர்ந்து உய்ய, வாழும் மின் பங்கயச் சுந்தரவல்லி மணாளன் வெற்பைச் சூழுமின்.

தொங்கல்-மலர் மாலைகள், தாழும்-தொங்கும், வீழும்-விரும்பும், இன்பம்-சிற்றின்பம், துன்ப யோனியில்-துன்பமயமான பிறவிக்குழியில், பந்தித்த-கட்டுப்படுத்திய, உய்ய-பிழைக்க, வாழும்மின்-நிலைபெற்றிருக்கின்ற மின்னலைப்போன்ற, பங்கயச் சுந்தரவல்லி-செந்தா மரையில் வாழும் சுந்தரவல்லியென்னும் திருமகளின், வெற்பை-மலையை, சூழுமின்-சுற்றி வாருங்கள், வாழும் மின்-இல்பொருள் உவமை.

சுற்றிலும் பூமாலைகள் தொங்கவிடப்பட்ட இனிமையான பஞ்சு மெத்தையின் மீது, இளமகளிரது பெரிய அழகிய தனங்களிலே விரும்பச் சேர்த்து பெறுகின்ற சிற்றின்பத்தைப் பொருளாகக் கருதி, துன்பம் தரும் பிறப்பாகிய படுகுழியில் விழுந்து அழிபவர்களே, கட்டுப்படுத்துகின்ற பழமையான கருமங்கள் நீங்கி ஈடேறும்படி, என்றும் அழியாது நிலைபெற்றிருப்பதொரு மின்னல் போன்றவளும், செந்தாமரை மலரில் வாழ்பவளும், சுந்தரவல்லி எனும் திருநாமம் உடைய வளும் ஆன பெரிய பிராட்டியின் கணவனாகிய அழகப் பிரானது திருமாலிருஞ் சோலை மலையினை வலம் வாருங்கள்.

வீழம ராமர மெய்தார் மதிதவழ் வெற்பைநெஞ்சே
தாழம ராடச் சமன்குறு கானிச் சரீரமென்னும்
பாழம ராமற் பரகதி யேற்றுவர் பார்க்கில்விண்ணோர்
வாழம ராவதி யுந்நர காமந்த மாநகர்க்கே. (45)

நெஞ்சே, மராமரம் வீழ எய்தார் மதி தவழ் வெற்பைத் தாழ், அமர் ஆடச் சமன் குறுகான், இச்சரீரம் என்னும்

பாழ் அமராமல் பரகதி ஏற்றுவர், பார்க்கில் விண்ணோர்
வாழ் அமராவதியும் அந்த மா நகர்க்கு நரகாம்.

மராமரம்-ஆச்சா மரம், எய்தார்-அம்பைச் செலுத்தியவரின், மதி-சந்திரன், வெற்பைத் தாழ்-மலையை வணங்கு, அமர் ஆட-போர் செய்ய, சமன்-இயமன், பாழ்,-பாழில், அமராமல்-பொருந்தாதபடி, பரகதி-பரம பதத்தில், பார்க்கில்-யோசித்துப் பார்த்தால், அமராவதி-தேவ லோகம், நரகு-நரகம்.

மனமே, மராமரங்கள் விழும்படி அம்பு எய்தவரான பெருமானுடைய சந்திரன் தவழப் பெற்ற திருமாலிருஞ் சோலை மலையை வணங்குவாய், போர் செய்து வென்று உயிரைக் கவர்ந்து செல்வதற்காக எமன் அருகிலேயும் வராது. இவ்வுடம்பாகிய பாழிலே பொருந்தாதபடி பரமபதத்தில் சேர்த்து அருளுவார். ஆராய்ந்துப் பார்த்தோமானால் தேவர்கள் வாழும் அமராவதி நகரமும் அந்த ஸ்ரீவைகுண்ட திவ்விய நகரத்திற்கு முன்னே நரகம் எனத்தக்கதாகும்.

நகரமு னாடும் புரந்தவர் நண்ணல ரால்வனமும்
சிகரமு னாடுஞ் சிறுமைகண் டோமஞ்ஞை தேனிசைகள்
பகரமு னாடும் பனிச்சோலை வெற்பினிற் பார்க்குக்கஞ்சன்
தகரமு னாடுகைத் தார்க்கறிந் தீர்கள் சரண்புகுமே. (46)

முன் நகரம் நாடும் புரந்தவர் நண்ணலரால் வனமும் சிகரமும் நாடும் சிறுமை கண்டோம், அறிந்தீர்கள், தேன் இசைகள் பகர மஞ்ஞை முன் ஆடும் பனிச்சோலை வெற்பில் நிற்பார்க்கு-கஞ்சன் தகர முன் நாள் துகைத் தார்க்குச் சரண்புகும்.

முன்-முன்பு, புரந்தவர்-ஆண்டவரான மன்னர், நண்ணலரால்-பகைவரால், சிகரமும்-மலை உச்சியையும், நாடும் சிறுமை-தேடிச் செல்லும் சிறுமையை,

அறிந்தீர்கள்-அறிந்த உலகத்தவர்களே, தேன்-வண்டுகள், இசைகள் பகர-பல இராகங்களில் ரீங்காரம் செய்ய, மஞ்ஞை-மயில்கள், பனிச்சோலை வெற்பில் நிற்பார்-குளிர்ச்சியை உடைய திருமாலிருஞ்சோலைப் பெருமானார், கஞ்சன்-கம்சன், தகர-அழிய, முன் நாள்-கிருஷ்ண அவதாரம் செய்த முற்காலத்தில், துகைத் தார்க்கு-காலால் மிதித்தவரான பெருமானுக்கு, சரண் புகும்-அடைக்கலம் புகுவீர்களாக.

இரண்டாவது அடியில் சிகரமுனாடும் எனத் தந்நகரம் றன்னகரமாகத் திரிந்தது திரிபு நயத்தால்.

நகரங்களையும், நாடுகளையும் ஆண்ட மன்னர்கள் பகைவர்களால் காட்டினையும் மலை உச்சியையும் தேடிச் செல்லும்படியான, எளிமையைப் பார்த்துள்ளோம், அறிய வேண்டுபவற்றை அறிந் தவர்களே. வண்டுகள் கீதம்பாட, மயில்கள் எதிரிலே கூத்தாடப்பெற்ற குளிர்ந்த சோலை மலையிலே நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி இருப்பவரும், கம்சன் அழியும்படி முற்காலத்திலே மிதித்தவருமான பெரு மானிடம் அடைக்கலம் சேருங்கள்.

சரணிய னாகத் தனைநினைந் தாரைத்தன் போலவைக்கும்
அரணிய னாகத் தணையா னரங்க னழகனெங்கோன்
இரணிய னாக மிடந்தான் கதையன்றி யீனர்தங்கள்
முரணிய னாகத்தும் புன்குர லோரி முதுக்குரலே. (47)

தனைச் சரணியன் ஆக நினைந்தாரைத் தன் போல வைக்கும் அரணியன்-நாகத்து அணையான்- அரங்கன்-எம்கோன்-இரணியன் ஆகம் இடந்தான் அழகன் கதை அன்றி, ஈனர் தங்கள் முரண் இயல் நா கத்தும் புன்குரல் ஓரி முதுக்குரலே.

சரணியன்-சரணம் புகத் தகுந்தவன், அரணியன்-காவலாய் உள்ளவன், அணையான்-படுக்கையாய் உடையவன், இடந்தான்-பிளந்தவன், ஈனர் தங்கள்-

அற்பர்களுடைய, முரண் இயல் நா-மாறுபட்ட சுபாவத்தை யுடைய நாவினால், புன்குரல்-இழிவான ஒலி, ஓரி-கிழ நரியின், முதுகுரலே-பெரிய ஊளைச் சத்தமேயாகும்.

தன்னைச் சரணமடையத் தக்கவனாக எண்ணிச் சரணமடைந்தவர்களைத் தன்னைப் போலவே வைத்து அருள்கின்ற பாதுகாப்பாய் உள்ளவனும், ஆதிசேடன் என்னும் பாம்பினையே படுக்கையாக உடையவனும், திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவனும், எம் தலைவனும், இரணியனுடைய மார்பினைப் பிளந்த வனுமான அழகப்பிரானுடைய திவ்விய சரித்திரம் அன்றி, இழிந்த பிற சமயத்தோர் தங்கள் மாறுபாடு கொண்ட நாவினால் பிதற்றுகின்ற இழி சொற்கள் கிழநரி இடுகின்ற ஊளைச்சத்தம் போல செவிக்கு இன்னாததாய் வெறுக்கத் தக்கனவாகும்.

முதுவிருந் தாவனத் தானிரை மேய்த்தவர் முன்விதுரன்
புதுவிருந் தானவர் மாலலங் காரர் பொலங்கழலாம்
மதுவிருந் தாமரைக் காளா யிரார்க்கு மதிநுட்ப நூல்
எதுவிருந் தாலு மதனால் விடாவிங் கிருவினையே. (48)

முது விருந்தாவனத்து ஆன் நிரை மேய்த்தவர்-முன் விதுரன் புதுவிருந்து ஆனவர்-மால் அலங்காரர் பொலங் கழலாம் மது இருந்தாமரைக்கு ஆளாய் இரார்க்கு மதி நுட்ப நூல் எது இருந்தாலும், அதனால் இங்கு இரு வினை விடா.

முது விருந்தாவனத்து-பழைய பிருந்தாவனத்திலே, ஆன்நிரை-பசுக்கூட்டத்தை, புதுவிருந்து-அற்புத விருந் தினர், பொலங்கழல்-அழகிய திருப்பாதங்கள், மது இருந்தாமரை-தேனை உடைய பெரிய தாமரை மலர்கள், ஆள்-அடிமை, விடா-விட்டு நீங்கா.

பழமையான பிருந்தாவனத்திலே பசுக் கூட்டங்களை மேய்த்தவரும், முன்னர் விதுரனுக்கு அதிசயிக்கத்தக்க

விருந்தினருமாகிய பெருமையுடைய அழகரது அழகிய திருவடிகளாகிய தேன் கொண்ட பெரிய தாமரை மலர்களுக்கு அடிமைப்பட்டு இராதவர்களுக்கு, நுண்ணறிவை உண்டாக்குகின்ற சாத்திரங்களில் எது பயின்று தேறப்பட்டிருந்தாலும், அச்சாத்திரத் தேர்ச்சி மாத்திரத்தால் இவ்வுலகில் இருவகை வினைகளும் நீங்கமாட்டா.

வினையாட்டி யேன்கொண்ட வெங்காம நோய்வெறி யாட்டினுமிச்
சினையாட்டி னுந்தணி யாதன்னை மீர் செய்ய பூங்கமல
மனையாட்டி நாயகன் மாலிருஞ் சோலை மலைச் சிலம்பாற்
றெனையாட்டி வாருஞ்சொன் னேனெந்த நோயு
மெனக்கில்லையே. (49)

அன்னைமீர், வினையாட்டியேன் கொண்ட வெங் காம நோய், வெறியாட்டினும் இச்சினை ஆட்டினும் தணியாது, செய்ய பூங்கமல மனையாட்டி நாயகன் மாலிருஞ்சோலை மலைச் சிலம்பு ஆற்று எனை ஆட்டி வாரும், எந்த நோயும் எனக்கு இல்லை.

அன்னை மீர்-தாய்மாரே, வினையாட்டியேன்- தீ வினையை மேற்கொண்டவளான யான், வெறியாட்டு-ஆவேசமாடுதல், சினை ஆடு-கேடில்லாத உறுப்புகளைக் கொண்ட ஆட்டுக்கிடாய், மனையாட்டி-வாழும் இடமாகக் கொண்ட திருமகள், சிலம்பாற்று-நூபுர கங்கை என்னும் நதியில், ஆட்டி-நீராடச் செய்து.

தாய்மார்களே, தீவினையால் ஆட்டப் படுபவளாகிய யான் அடைந்திருக்கின்ற கொடிய இக் காதல் நோயானது ஆவேசமாடுவித்தலாலும், உறுப்புகளில் குறையில்லாத ஆட்டைப் பலி கொடுப்பதினாலும் அடங்க மாட்டாது. செந்தாமரை மலரைத்தான் வாழும் இடமாகக் கொண்டு ஆள்பவளான திருமகளின் கணவனாகிய திருமாலினுடைய சோலை மலையில் உள்ள நூபுர கங்கை என்னும் திவ்விய நதியிலே என்னை நீராட்டி வாருங்கள், எனக்குச் சிறிது நோயும் இராது. சொல்லி விட்டேன்.

எனக்கா வியங்கு முடலிங்கு மாகி யிருப்பதைச்சந்
தனக்கா வியங்குந் தமரவண் டீர் சொல்லுந் தத்துவநூல்
கனக்கா வியங்கவி வல்லோர் புகழலங் காரனுக்கு
வனக்கா வியங்கண்ணி மாமல ராண்மண வாளனுக்கே. (௫௦)

சந்தனக் கா இயங்கும் தமர வண்டீர், தத்துவ நூல் எனக் காவியக்கவி வல்லோர் புகழ் அலங்காரனுக்கு-வனக்காவி அம் கண்ணி மாமலராள் மணவாளனுக்கு, எனக்கு ஆவி அங்கும் உடல் இங்கும் ஆகியிருப்பதைச் சொல்லும்.

சந்தனக் கா இயங்கும்-சந்தனச் சோலையில் திரிகின்ற, பறந்து தமரவண்டீர்-ரீங்கார ஒலி செய்யும் வண்டுகளே, கன காவியம்-பெருங்காப்பியம், வனக் காவி அம் கண்ணி-தண்ணீரில் உள்ள குவளை மலர் போலும் கண்களை உடையவள், மாமலராள்-இலக்குமி, மண வாளன்-கணவன், ஆவி-உயிர்.

சந்தன மரச்சோலைகளிலே சஞ்சரிக்கும் தன்மையுள்ள, ஓசையினை உடைய வண்டுகளே, தத்துவ சாத்திரங்களிலும், பெரிய காவியங்களிலும், கவி பாடுவதிலும் வல்லவர்களான ஆன்றோர்களால் வணங்கப் பெற்ற அழகனும், நீரில் உள்ள நீலோற்பவ மலர் போன்ற அழகிய கண்களை உடையவளான சிறந்த தாமரை மலரில் வீற்று இருக்கின்றவளாகிய திருமகளின் கணவனுமாகிய தலைவனுக்கு, என் உயிர் அத் தலைவனிடத்திலும் உடம்பு மட்டும் இங்குமாக இருக்கின்ற செய்தியினைச் சொல்லுங்கள்.

மணவாள ராவி நிகர்திரு மாதுக்கு மாலழகர்
பணவாள ராவிற்கண் பள்ளிகொள் வார்திருப் பாதமெண்ணக்
குணவான ராவிரின் றேயுயிர் காளும்மைக் கூற்றுவனார்
நிணவாள ராவி யறுக்குமப் போது நினைப்பரிதே. (51)

உயிர்காள், ஆவி நிகர் திருமாதுக்கு மணவாளர்-மால் அழகர்-பணவாள் அராவில் கண் பள்ளி கொள்வார் திருப்பாதம் எண்ண இன்றே குணவாளர் ஆவிர், உம்மைக் கூற்றுவனார் நிணவாள் அராவி அறுக்கும் அப்போது நினைப்பு அரிது.

உயிர்காள்-ஜீவர்களே, ஆவி நிகர்-உயிரை ஒத்த, திருமாது-இலக்குமி, பணவாள் அரா-படமும் ஒளியும் பொருந்திய ஆதிசேடன், எண்ண-தியானிக்க, நிணவாள் அராவி-கொழுப்பு பொருந்திய வாளைக் கூர்மை செய்து, அப்போது-அந்த மரண காலத்தில், நினைப்பு அரிது-நினைப்பது இயலாது.

உயிர்களே உயிர் போன்ற திருமகளுக்குக் கணவரும், பெருமையை உடைய அழகரும், படத்தையும் ஒளியையுமுடைய திருவனந்தாழ்வான் மேலே படுத்துக் கொண்டு யோக நித்திரை செய்தருள்பவருமான எம்பெருமானுடைய திருவடிகளை வணங்குமாறு இப்பொழுதே நற்குணம் உடையவராவீர்கள். உங்களை எமன் நிணம் தோய்ந்த வாளாயுதத்தைக் கூர் செய்து கொண்டு அறுக்கும்படியான அந்த அந்திம காலத்திலே பெருமான் திருவடிகளை நினைப்பது இயலாததாகும்.

நினைப்பரி யாயெளி யாயும்பர் யார்க்குநின் னன்பருக்கும்
வினைப்பரி யானவன் வாய்பிளந் தாய்வியன் சோலைமலை
தனைப்பரி யாநின்ற தாளழ கா முற் சனனத்துள்ளும்
உனைப்பரி யாமலன் றோபரித் தேனிவ் வுடலத்தையே. (52)

உம்பர் யார்க்கும் நின் அன்பருக்கும் நினைப்பு அரியாய், எளியாய் வினைப்பரி ஆனவன் வாய் பிளந்தாய், வியன் சோலை மலைதனைப் பரியா நின்ற தாள் அழகா, முன் சனனத்துள்ளும் உனைப்பரியாமல் அன்றோ இவ்வுடலைப் பரித்தேன்.

உம்பர்-தேவர், வினைப்பரி ஆனவன்-குறும்புச் செயலை உரிய குதிரை வடிவானவனான கேசி என்னும் அசுரனது, பிளந்தாய்- பிளந்தவனே, வியன்-பெரிய, தனைப் பரியா நின்ற-தன்னைத் தாங்குகிற, முன் சனனத்துள்ளும்-முன்பிறப்பிலும், பரியாமல்-விரும் பாமல், அன்றோ - அல்லவா ?

தேவர் எல்லோருக்கும் உன்னிடம் பக்தியை உடைய அடியார்களுக்கும் சிந்தித்தற்கு அரியவனும், எளியவனுமாய் இருப்பவனே. தீச்செயலை யுடைய குதிரை வடிவில் வந்த அசுரனது வாயைக் கிழித்தவனே, பெரிய திருமாலிருஞ்சோலை மலையானது தன்னை வகிக்கப்பட்ட திருவடியை உடைய அழகனே ! முற்பிறப்பிலும் உன்னை விரும்பி பக்தி செய்யாமல் போனதாலேயே இப்பிறப்பு எடுத்தேன்.

முற்பிறப்பில் உன்னிடம் பக்தி செய்திருந்தால் எல்லாக் கருமங்களும் ஒழியப் பிறப்பற்று மீளா உலகை மாகிய முக்தியை அடைந்திருப்பேன், ஆதலின் இப்பிறப்பு எனக்கு நேர்ந்திருக்காது. இனியாவது மீண்டும் பிறவாதவாறு பக்திச் செய்வேன் என்பதாம்.

உடலம் புயங்கத் துரிபோல் விடுமன் றுவணப்புள்ளின்
அடலம் புயமிசை நீவர வேண்டுமை யானனற்கும்
மடலம் புயற்கும் வரந்தருஞ் சோலை மலைக்கரசே
கடலம் புயர்வரை யாலடைத் தாயென்னைக் காப்பதற்கே. (53)

ஐயானனற்கும் மடல் அம்புயற்கும் வரம் தரும் சோலை மலைக்கு அரசே, உயர் வரையால் கடல் அம்பு அடைத்தாய், புயங்கத்து உரிபோல் உடல் விடும் அன்று என்னைக் காப்பதற்கு உவணப்புள்ளின் அடல் அம் புயமிசை நீ வர வேண்டும்.

ஐயானனன்-ஐந்து முகங்களை உடையவனான சிவன், மடல் அம்புயன்-இதழ்களை உடைய தாமரையி

லுள்ள பிரமன், வரையால்-மலைகளால், கடல் அம்பு-சமுத்திர நீரை-உவணப்புள்ளின்-கருடப்பறவையினது, அடல் அம்புயமிசை-வலிய அழகிய தோள்களில் ஏறி.

ஐந்து முகங்களை உடையவனான சிவபெருமா னுக்கும், இதழ்கள் நிறைந்த தாமரை மலரில் தோன்றியவனான பிரமனுக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்து அருள்கின்ற சோலை மலைக்குத் தலைவனே! கடல்நீரை உயர்ந்த மலைகளைக் கொண்டு அணை கட்டி அடைத்தவனே! பாம்பு தன் தோலை விட்டு நீங்குவது போல. உயிர் உடம்பை விட்டு நீங்கும் அந்நாளில் என்னைப் பாதுகாப்பதற்காகக் கருடப் பறவையின் வலிமை வாய்ந்த அழகிய தோள்களின் மேல் ஏறி நீ எழுந்தருள வேண்டும்.

இப்பிறப்பின் முடிவிலே, மறுபிறப்பு இல்லாதபடி என்னைக் காக்குமாறு நீ பெரிய திருவடியின் மேல் எழுந்தருளிக் காட்சி தரவேண்டும் என்பதாம்.

காப்ப வனந்த மலரோனை யுங்கறைக் கண்டனையும்
பூப்ப வனந்தரம் போக்கவைப் பான்புனல் பார்விசும்பு
தீப்ப வனந்தருந் தெய்வ சிகாமணி சேவடியை
நாப்ப வனந்தப் புகழ்வார்க் கொப் பில்லை நவகண்டத்தே. (54)

காப்பவன்-அந்த மலரோனையும் கறைக் கண்டனையும் பூப்ப அனந்தரம் போக்க வைப்பான்-புனல், பார், விசும்பு, தீ, பவனம் தரும் தெய்வ சிகாமணி சேவடியைப் பவம் நந்த நாப்புகழ்வார்க்கு நவகண்டத்து ஒப்பு இல்லை.

காப்பவன்-பாதுகாப்பவனும், மலரோன்-பிரமன், கறைக்கண்டன்-சிவன், பூப்ப-உண்டாக்கவும், போக்க-அழிக்கவும், வைப்பான்-நியமனம் செய்து வைப்பவனும், விசும்பு-ஆகாயம், பவனம்-காற்று, பவம் நந்த-பிறப்பு அழியும்படி, நா-நாவினால், புகழ்வார்க்கு-புகழ்பவராகிய அடியவர்க்கு, நவகண்டம்-ஒன்பது கண்டங்கள், தெய்வ

சிகாமணி-தேவாதி தேவன் இது அழகரின் மற்றொரு திருநாமம்.

எல்லா உலகங்களையும் காத்தல் தொழில் செய்பவனும். அந்தப் பிரமனையும், சிவனையும் படைத்தல் தொழில் செய்யுமாறும், அழித்தல் தொழில் செய்யுமாறும் நியமித்து வைப்பவனும், நீர், நிலம், வான், நெருப்பு, காற்று என்னும் பஞ்ச பூதங்களையும் படைத் தருளிய தேவர்களுக்குச் சிரோ ரத்தினம் போன்றவனு டாகிய அழகர் பிரானுடைய சிவந்த திருவடிகளைப் பிறப்பு இனி இல்லையெனும்படி நாவினால் துதிக்கின்ற பாகவதர்களுக்கு ஒன்பது கண்டங்களிலும் நிகரானவர் யாரும் இல்லை. பாகவதரின் பெருமை கூறுவது. தெய்வ சிகாமணி-தேவர்கள் முடிமேல் கொள்ளும் இரத்தினம் போன்றவன்.

கண்டா கனன்கண்ண னல்லாற் கதியின்மை கண்டடைந்த
துண்டா கனம்பவொட் டாதுங்க ளூழ்வினை யுண்மையறிந்
தண்டா கனவண்ண னேயரு ளாயென் றழகனுக்கே
தொண்டா கனன்னெஞ்சி னாலுறைப் பீர்பிறர்
தொண்டர்களே. (55)

பிறர் தொண்டர்களே, கண்டாகனன், கண்ணன் அல்லால் கதி இன்மை கண்டு அடைந்தது உண்டாக, உங்கள் ஊழ்வினை நம்ப ஒட்டாது, உண்மை அறிந்து, அண்டா கனவண்ணனே, அருளாய், என்று அழகனுக்கே தொண்டாக நல் நெஞ்சினால் உரைப்பீர் !

அண்டா-இடைச்சிறுவனே, கனவண்ணனே-மேக நிறம் உடையவனே, அருளாய்-கிருபைசெய், உரைப்பீர்-சொல்லுங்கள், கண்டாகனன்-முதலில் சிவனுக்கு அடிமை பூண்டு திருமாலை நிந்தித்தவன், ஆயினும், சிவன் பரகதி அருளாமை கண்டு திருமாலுக்கு அடிமை செய்து முத்தி பெற்றனன்.

வேறு தெய்வங்களுக்கு அடிமையாகி இருப்பவர்களே, கண்டாகனன் என்பவன், கண்ணபிரானே அல்லாமல் புகலிடம் வேறு இல்லாதது அறிந்து, சரணமடைந்த செய்தி உண்டாகி இருக்கவும். உங்கள் விதியானது அதனை நம்பும்படி செய்யாது இனிமேலாவது நீங்கள் உண்மை நிலையினை அறிந்துகொண்டு இடைப்பிள்ளையாய் வளர்ந்தவனே. மேகம் போன்ற திருநிறம் உடையவனே, கருணைபுரிவாய் என்று அழகனுக்கே அடிமையாகுமாறு நல்ல மனதுடன் சொல்லுங்கள்.

ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று சாதிப்பதற்குச் சாட்சியாகிற சரிதங்களுள் முதலில் சிவ பக்தியுடன் விஷ்ணு துவேஷமும் மேலிட்டிருந்த கண்டாகனன் பின்னர் சிவனால் முக்தி பெறமாட்டாது கண்ண பிரான் அருளால் பெற்றான் என்ற வரலாறு சிறத்தலால், அதனை இங்கு எடுத்துக் காட்டினர்.

தொண்டுப டார்திரு மாலிருஞ் சோலையிற் சோதிக்கன்பு
கொண்டுப டாமல ரிட்டிறைஞ் சார்மடக் கோதையரைக்
கண்டுப டாமுலை தோயனு ராகங் கருதியிரா
உண்டுப டாநிற்கும் போதுநை வாரெங்ங னுய்வதுவே. (56)

திருமாலிஞ் சோலையில் சோதிக்கு அன்பு கொண்டு தொண்டு படார், படா மலர் இட்டு இறைஞ்சார், மடக் கோதையரைக் கண்டு படாம் முலை தோய் அனுராகம் கருதி, இரா உண்டு படா நிற்கும்போது நைவார் உய்வது எங்ஙன் ?

படா மலர்-வாடாமலர், படாம் முலைதோய்-கச்சணிந்த கொங்கைகளிற்பதிகின்ற, அனுராகம்-மோகம், இரா-இரவில், படாநிற்கும்போது-படுத்து உறங்கும்போது, நைவார்-வருந்துபவராகிய காமுகர், உய்வது-பிழைப்பது, எங்ஙன்-எவ்வாறு ?

சிற்றறிவு பெற்றவர்கள் திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற பரஞ்சோதி சொரூபியான அழகப்பிரானுக்கு பக்தி கொண்டு அடிமைப்படார். வாடாத மலர்களை அப்பெருமானின் திருவடிகளில் இட்டு அருச்சித்து வணங்கார் இளமை யான பெண்களைப் பார்த்துக் கச்சணிந்த அவர்களின் கொங்கைகளில் அணைகிற இன்பத்தில் ஆசையை மனதில் கொண்டு இரவில் உணவு உண்டு படுத்துக் கொள்ளும்போது வருந்துவார்கள். இப்படியானவர்கள் நற்கதி பெறுவது எவ்வாறோ ?

உய்வந் தொழும்புசெய் தென்றிருப் போமையுய் யாமலைவர்
பெய்வந் தொழுவினைக் கேயென்ப ராற்பெருந் தேன்சிகரம்
தைவந் தொழுகு மலையலங் கார சதுமுகத்துத்
தெய்வந் தொழுந்தெய்வ மேயென்கொ லோவுன்
திருவுளமே. (57)

பெருந்தேன் சிகரம் தைவந்து ஒழுகும் மலை அலங்கார, சதுமுகத்துத் தெய்வம் தொழும் தெய்வமே, தொழும்பு செய்து உய்வம் என்று இருப்போமை, ஐவர், உய்யாமல் தொழுவினைக்கே பெய்வம் என்பர், உன் திருவுளம் என் கோலோ ?

தைவந்து - தடவி, அலங்கார - அழகனே, சது முகத்துத் தெய்வம்-பிரமதேவன், தொழும்பு-அடிமை, உய்வம் - பிழைப்போம், இருப்போமை - இருக்கும் எங்களை, ஐவர்- பஞ்சேந்திரியங்களான விரோதிகள், தொழுவினைக்கே- கொடிய பாவச்செயல்களிலேயே, பெய்வம்-அழுத்துவோம், ஐவர்-திணை வழுவமைதி.

மிகுதியான தேன் சிகரத்தைத் தடவிக் கொண்டு பெருகப் பெற்ற சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற அழகனே, நான்கு முகங்களை உடைய கடவுளாகிய பிரம தேவனும் வணங்கப்பெற்ற முழு முதற் கடவுளே, உனக்கு

அடிமை செய்து உய்வடைவோம் என்று எண்ணியிருக்கிற எங்களை ஐம்பொறிகளாகிய பகைவர்கள் அவ்வாறு உய்விக்க ஒட்டாதபடி கொடிய பாவங்களிலே உங்களை அகப்படுத்துவோம் என்று கறுவிச் சொல்கிறார்கள். இதில் நின் திரு உள்ளக் கருத்து யாதாக இருக்கிறதோ ?

திருவிளை யாடுதிண் டோட்செங்கண் மால்பல தேவருடன்
மருவிளை யான்றிரு மாலிருஞ் சோலை மலையெனவோர்
உருவிளை யாமற் பிறப்பார் பலர்புக ழோதிச்சிலர்
கருவிளை யாநிற்க வித்தாவர் முத்தியிற் காமமற்ற. (58)

திருவிளையாடு திண்டோள் செங்கண்மால்-பல தேவருடன் மருவு இளையான்-திருமாலிருஞ் சோலை மலை என ஓர் உரு விளையாமல் பிறப்பார் பலர், சிலர், காமம் அற்று புகழ் ஓதி, கரு இளையா நிற்க முத்தியில் வித்து ஆவர்.

திரு-வீரலட்சுமி, பலதேவர்-பலராமர், உருவிளை யாமல்-அனு சந்தானம் செய்யாமல், காமம்-சிற்றின்ப விருப்பம், புகழ்-கீர்த்தியை, கரு இளையா நிற்க-பிறப்பு வலிமை குறைந்து நிற்க, முத்தியில்-மோட்ச உலகில், வித்து ஆவர்-விதை ஆவர்.

வீரலட்சுமி வீற்றிருந்து குலாவுதற்கு இடமான வலிமையான தோள்களையுடைய திருமாலும், பலராமனுடன் மனம் கலந்து பொருந்திய தம்பியுமாகிய எம்பெருமானது சோலைமலை என்று ஒருதரமேனும் சொல்லாமல் பிறந்து வருந்துபவர் உலகத்தில் பலராவர். சிலரோ சிற்றின்ப ஆசை அற்று அத்திருமலையின் பெருமைகளை எடுத்துச் சொல்லி அதனாலேயே பிறப்புகள் இனித் தம்மைச் சேரமாட்டாமல் வலிகுன்றி நிற்க. வீட்டுலகத்தில் முளைக்கும் விதையாவார்கள்.

காமத் தனைப்பொய் யழுக்காறு கோபங் களவுகொலை
யாமத் தனையு முடையேனை யாளுங்கொ லான்பொருப்பாம்
தாமத் தனைவரும் போற்றநின் றான்பண்டு தாமரையோன்
பூமத் தனைச்செய்த நோய்துடைத் தானடிப் போதுகளே. (௫௦)

ஆன் பொருப்பு ஆம் தானத்து அனைவரும் போற்ற நின்றான்-தாமரையோன் பண்டு பூமத்தனைச் செய்த நோய் துடைத்தான்-அடிப்போதுகள், காமத்தனை-பொய், அழுக்காறு, கோபம், களவு, கொலை ஆம் அத்தனையும் உடையேனை ஆளுங் கொல் ?

ஆன் பொருப்பு ஆம் தானத்து - இடபகிரி ஆகிய இடத்தில், நின்றான்-நின்று அருளியவனும், பூமத்தனை-ஊமத்த மலரைச் சூடிய சிவனுக்கு, செய்த நோய்-உண்டாக்கிய நோயை, துடைத்தான்-அழித்தவனுமாகிய திருமாலின், அடிப்போதுகள்-திருவடிமலர்கள், காமத் தனை-சிற்றின்ப விருப்பமுடையவனாகிய என்னை, அழுக்காறு - பொறாமை, ஆளுங்கொல் - அடிமை கொள்ளுமோ ?

இடபகிரியாகிய இடத்திலே எல்லோரும் தன்னை வணங்கும்படி நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி இருப்பவனும், தாமரை மலரில் தோன்றிய வனாகிய பிரமன் முன்பு தன் தலையைக் கிள்ளிய காலத்தில் ஊமத்தம் பூவைச் சூடுபவனான சிவபெருமானுக்குப் பிச்சை எடுத்தலாகிய துன்பத்தைத் தீர்த்தருளிய வனுமாகிய பெருமானுடைய திருவடித் தாமரை மலர்களானவை , சிற்றின்ப ஆசையினை உடையவனும், பொய்யும், பொறாமையும், கோபமும், திருட்டுத்தனமும் கொல்லுதல் தொழிலுமாகிய அவ்வளவுத் தீங்குகளை உடையவனுமான என்னைப் பாதுகாத்து அருளுமோ? இவ்வாறு கூறியது நைச்யாநுசந்தாநம், அதாவது தம்மைத் தாழ்த்திக் கூறுவது.

போதகத் தானும்வெண் போதகத் தானும் புராந்தகனும்
தீதகத் தானது தீர்தருங் காலைத் திருவரைசேர்
பீதகத் தாயழ காவரு ளாயென்பர் பின்னையென்ன
பாதகத் தான்மறந் தோதனி நாயகம் பாவிப்பரே. (60)

போதகத்தானும், வெண்போதகத்தானும், புராந்தகனும், அகத்து ஆனது தீர்தருங்காலை, திருஅரைசேர் பீதகத்தாய், அழகா, அருளாய், என்பர். பின்னை என்ன பாதகத்தாலோ மறந்து தனி நாயகம் பாவிப்பர்.

போதகத்தான் - தாமரை மலரிலுள்ள பிரமன், வெண் போதகத்தான் - வெள்ளை யானை வாகனனாகிய இந்திரன், புராந்தகன்-முப்புரம் அழித்தவனாகிய சிவன் அகத்து ஆனது தீது தீர்தருங்காலை-மனத்தில் உண்டான தாகிய துன்பம் நீங்க வேண்டிய காலத்தில், அரை-இடை, பீதகத்தாய்-பீதாம்பரம் உடையவனே, அருளாய்-கிருபை செய்வாய், பின்னை-பின்பு, பாதகம்-தீவினை, தனி நாயகம்-ஒப்பற்ற தலைமையை, பாவிப்பர்-பாவனை செய்வர்.

தாமரை மலரைத் தான் பிறந்த இடமாக உடையவனான பிரமனும், ஐராவதம் என்னும் வெள்ளை யானையையுடைய இந்திரனும், திரிபுர தகனம் செய்தவனுமான சிவனும், தம் மனத்தில் உண்டான துன்பம் நீங்க வேண்டிய சமயத்தில், திருவரையில் பொருந்திய பீதாம்பரத்தை உடையவனே ! அழகனே ! எம்மிடம் கருணை செய்வாய் என்று துதித்து வணங்குவார்கள். அப்பரமன் அருளால் தமது துயர் தீர்ந்த பின்பு, என்ன தீவினையாலோ அப்பெருமான் தங்களுக்குச் செய்த உதவியையும் தங்கள் நிலைமையினையும் மறந்து போய் ஒப்பற்ற தலைமையைத் தமக்கு ஏறிட்டுக்கொண்டு அதற்கேற்ப ஒழுகுவார்கள்.

போதகம் 10 ஆண்டுள்ள யானைக் கன்று. இங்கு யானை என்ற அளவில் நின்றது.

பாவிக் கமல விரிஞ்சற் கிறையவர் பத்தர்தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப் பாரளிப் பாடல்கொண்ட
வாவிக் கமல மணநாறுஞ் சோலை மலையைக் கண்ணால்
சேவிக் கமல மறுமன மேயெழு செல்லுதற்கே. (61)

மனமே, பாவிக்கு அமல விரிஞ்சற்கு இறையவர்-பத்தர் தங்கள் ஆவிக்கமலத்து வீற்றிருப்பார்-அளிப்பாடல் கொண்ட வாவிக் கமலம் மணம் நாறும் சோலைமலையைக் கண்ணால் சேவிக்க மலம் அறும், செல்லுதற்கு எழு.

பாவிக்கு-பாவியாகிய எனக்கும், அமல விரிஞ்சற்கு-தூயவனான பிரமனுக்கும், இறையவர்-தலைவரும், பத்தர்-அடியவர், ஆவிக்கமலத்து-இதயத் தாமரையில், அளிப்பாடல்-வண்டுகளின் ரீங்காரம், வாவிக்கமலம்-குளங்களில் உள்ள தாமரை மலர்கள், மலம் அறும்-உயிர்க்குற்றங்கள் நீங்கும், எழு-புறப்படு, ஆவி-இருதயத்திற்கு இலக்கணை.

மனமே, தீவினை உடையவனான எனக்கும், தூயவனான பிரமனுக்கும் தலைவரும், பக்தியுள்ள அடியார்களின் இதய கமலத்திலே எழுந்தருளி இருப்பவருமான எம்பெருமானது, வண்டுகளின் இசைப்பாட்டைக் கொண்ட தடாகங்களின் நீர் நறுமணம் வீசப்பெற்ற சோலை மலையைக் கண்ணால் தரிசித்த அளவில் நமது தீவினைகள் தீரும், ஆதலால் அங்குப் போவதற்குச் சித்தமாவாய்.

செல்லுக் குவளை குழனாட்ட மென்று தெரிவையர்பால்
பல்லுக் குவளை முதுகாந் தனையும்புன் பாட்டுரைப்பீர்
அல்லுக் குவளை யுழும்பாண்டி நாட்டை யடைந்துநுங்கள்
சொல்லுக் குவளையுண் டார்க்கலங் காரர்க்குச் சூட்டுமினே. (62)

குழல் செல்லு, நாட்டம் குவளை, என்று தெரிவையர் பால் பல் உக்கு வளை முதுகு ஆந்தனையும் புன் பாட்டு உரைப்பீர், அல்லுக்கு வளை உழும் பாண்டி நாட்டை

அடைந்து, நுங்கள் சொல்லுக்கு அளை உண்டார்க்கு-அலங்காரர்க்குச்-சூட்டுமின்.

செல்லு-மேகம், நாட்டம்-கண், உக்கு-உதிர்ந்து, புன் பாட்டு-இழிவான பாடலை, உரைப்பீர்-பாடும் புலவர் களே, அல்லுக்கு-இரவில், வளை-சங்குகள், உழும்- உழுகின்ற, சொல்லு-கவியை, கு அளை-பூமியையும் வெண்ணெ யையும், சூட்டுமின்-சூட்டுங்கள்.

மகளிரின் கூந்தல் மேகத்தைப் போன்றது என்றும், அவர்தம் கண்கள் நீலோற்பவ மலரைப் போன்றது என்றும், அப்பெண்களிடத்து, பற்கள் விழுந்து கூன் வளைந்த முதுகை உடையராமளவும் இழிவான பாடல்களைப் பாடிப் புகழ்ந்து ஏங்கி நிற்பவர்களே, இனியாகிலும் நீங்கள் இரவிலே சங்குகள் உழுது செல்லப்பட்ட பாண்டிய நாட்டைச் சேர்ந்து, உங்கள் சொல் மாலைகளைப் பூமியையும், வெண்ணெயையும் அமுது செய்தவராகிய அழகருக்குச் சமர்ப்பியுங்கள். பெண்கள் மேல் ஆசைகொண்டு, அவர்கள் உடம்பின் அழகில் ஈடுபட்டு அவர்களைக் குறித்துப் பலவாறு வருணித்துக் கவிபாடித் திரியும் சிற்றறிவு பெற்றவர்களாகிய புலவருக்கு அறிவுறுத்தியதாகும்,

சூட்டோ திமஞ்சென்று சொல்லாதென் காதலைத் தும்பியிசைப்
பாட்டோதி மங்கைய ரும்பணி யார்பண்டு கன்மழைக்காகக்
கோட்டோ திமமெடுத் தார்சோலை மாமலைக் கோவலனார்
மாட்டோதி மஞ்சினங் காளுரைப் பீர்மறு வாசகமே. (63)

மஞ்சு இனங்காள், சூட்டு ஓதிமம் சென்று என் காதலைச் சொல்லாது, தும்பி இசைப்பாட்டு ஓதி மங்கை யரும் பணியார், பண்டு கல் மழைக்காக் கோட்டு ஓதிமம் எடுத்தார்-சோலை மாமலைக் கோவலனார் மாட்டு ஓதி, மறுவாசகம் உரைப்பீர்.

மஞ்சு இனங்காள்-மேகக் கூட்டங்களே, சூட்டு ஓதிமம்-உச்சிக் கொண்டையினை உடைய அன்னப் பறவை, தும்பி-வண்டுகளின், இசைப்பாட்டு ஓதி-ரீங்கா ரத்தை உடைய கூந்தலை உடையவராகிய, மங்கையரும்-தோழியரும், பணியார்-சொல்லார், பண்டு-பழைய காலத்தில், மழைக்காக-மழையைத் தடுத்ததற்காக, கோட்டு ஓதிமம்-சிகரத்தை உடைய கோவர்த்தன மலையை, கோவலனார் மாட்டு-ஆயர்குலச் செம் மலாரிடம், ஓதி-தெரிவித்து, மறுவாசகம்-மறுமொழியை, உரைப்பீர்-கூறுங்கள்.

மேகக் கூட்டங்களே, உச்சிக் கொண் டையை உடைய அன்னமானது என் தலைவரிடம் போய் என் ஆசை நோயை அவருக்கு எடுத்துச் சொல்ல மாட்டாது, சூடிய மலர்களில் மொய்க்கிற வண்டுகளின் இசைப் பாட்டையுடைய கூந்தலை உடைய மாதர்களும் என் காதலை என் தலைவருக்குச் சொல்லமாட்டார். முன்பு கல் மழையைத் தடுப்பதற்காக உயர்ந்த சிகரத்தை உடைய கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்தவரும், சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற ஆயனாருமாகிய அத்தலைவரிடத்து நீங்களாயினும் என் காதலைச் சொல்லி, அவர் கூறும் மறுமொழியை என்னிடம் வந்து சொல்லுங்கள்.

கார் காலத்தில் திரும்பி வருவதாகச் சென்ற தலைவன், வாராமையால் வருந்தும் தலைவி, மேகங் களைப்பார்த்து என் நிலைமையினை என்னுடைய தலைவரான சோலைமலை அழகரிடம் சொல்லி, அதற்கு அவர் அருளிச் செய்யும் மறுமொழிகளைக் கேட்டு மீண்டு வந்து எனக்குச் சொல்லுமாறு நீங்கள் தூதாக வேண்டும் என வேண்டுகிறாள்.

வாசம் பரந்த துழாயுமென் பாடலு மாலையொளி
வீசம் பரம்பசும் பொன்னுமென் வேட்கையும் வீற்றிருக்கும்
தேசம் பரம பதமுமென் சிந்தையுந் தீவளியா
காசம் பரவைமண் கண்டுண்ட மாலலங் காரனுக்கே. (64)

தீவளி, ஆகாசம், பரவை, மண் கண்டு உண்ட மால் அலங்காரனுக்கு வாசம் பரந்த துழாயும் என் பாடலும் மாலை, பசும்பொன்னும் என் வேட்கையும் ஒளி வீசு அம்பரம், பரமபதமும் என் சிந்தையும் வீற்றிருக்கும் தேசம்.

தீ-நெருப்பு, வளி-காற்று, பரவை-நீரை உடைய கடல், மண்-பூமி, கண்டு-சிருட்டித்து, உண்ட-உட்கொண்ட ருளிய, அலங்காரனுக்கு-அழகனுக்கு, வாசம் பரந்த-மணம் மிகுந்த, துழாயும்-துளசியும், பசும்பொன்னும்-மாற்று உயர்ந்த பொன்னாடையும், வேட்கை-அன்பு, அம்பரம்-ஆடையாம், பரமபதம்-வைகுந்தம், சிந்தை-மனம், தேசம்-இருப்பிடமாம்.

நிலம், நீர், தீ, வான், வளி ஆகிய ஐம்பெரும் பூதங்களைப் படைத்து, பிரளய காலத்திலே விழுங்கி அருள்கிற பெருமையை உடைய அழகப்பிரானுக்கு, நறுமணம் வீசுகின்ற திருத்துழாயும், யான் பாடும் செய்யுளும் மாலையாம். மாற்று சார்ந்த பொன் மயமான பீதாம்பரமும் யான் செய்கின்ற பக்தியும், ஒளி வீசுகிற ஆடையாம், ஸ்ரீவைகுண்டமும் அடியேனுடைய மனமும் மிகச் சிறப்பாக எழுந்தருளி இருக்கும் இடமாம்.

எனது சொல் கொண்டு தொகுத்துச் சமர்ப்பித்த மாலையை அவன் தனக்கு இனிய திவ்வியமான நறுந் துழாய் மாலை போலவும், யான் அவனிடம் வைத்த காதலை அவன் தனக்கே உரியதாய்ச் சிறக்கிற திவ்விய பீதாம்பரம் போலவும், யான் அவனுக்கு இடமாக ஆக்கிய என மனத்தை அவன் தான் நித்தியமாக வசிக்கும் கலங்காப் பெருநகரமாகிய பரமபதம் போலவும் யோக்கிய மாகக் கொண்டு அருளினான் என்பதாம்.

அலங்காரன் சுந்தரத் தோள னழக னணிமுடியில்
இலங்கார னேறு திருவுடை யானெட் டெழுத்துங்கற்றார்
கலங்கா ரனங்கன் கணையாலெச் செல்வமுங் காதலியார்
மலங்கா ரருந்துயர் மேவினு மாகுவர் வானவரே. (65)

அலங்காரன், சுந்தரத்தோளன், அழகன்-அணி முடியில் இலங்கு ஆரன்-ஏறு திருவுடையான் எட்டெழுத்தும் கற்றார், அனங்கன் கணையால் கலங்கார், எச்செல்வமும் காதலியார், அருந்துயர் மேவினும் மலங்கார், வானவர் ஆகுவர்.

இலங்கு ஆரன்-விளங்குகின்ற மலர் மாலையை உடையவன், ஏறு திரு உடையான்-நாளுக்கு நாள் உயரும் செல்வமுடையவன், எட்டெழுத்தும்-திரு அஷ்டாச்சர மந்திரமாகிய எட்டு எழுத்துக்களையும், அனங்கன், கணை-மன்மத பாணம், காதலியார்-விரும்பார், மேவினும்-வந்து சேர்ந்தாலும், மலங்கார்-வருந்த மாட்டார், வானவர்-தேவர்.

அலங்காரன் என்றும், சுந்தரத்தோளன் என்றும், அழகனென்றும் திருநாமங்களை உடைய வனும், அழகிய முடியிலே விளங்குகிற பூமாலையை உடைய வனுமாகிய எம்பெருமானுடைய எட்டு எழுத்துக் களையும் உபதேச முகமாகப் பெற்று ஓதி உணர்ந்தவர்கள், மன்மதனுடைய அம்புகளால் கலங்கார். எவ்வகைப் பொருட் செல்வத்தையும் விரும்பார். பொறுத்தற்கரிய துன்பங்கள் நேர்ந்தாலும் வருந்தமாட்டார். பரமபதத்தை அடைபவராவர்.

வானவ தாரணி சுந்தரத் தோளன்முன் மாவலியைத்
தானவ தாரணி தாவென்ற மாயன் றராதலத்து
மீனவ தார முதலா னவைவினை யின்றியிச்சை
யானவ தாரறி வாரவ ரேமுத்த ராமவரே. (66)

வால் நவதார் அணி சுந்தரத்தோளன்-முன் மாவலியைத் தானவ, தாரணி தா, என்ற மாயன்-தராதலத்து மீன் அவதாரம் முதலானவை வினை இன்றி இச்சையான அது ஆர் அறிவார்? அவரே முத்தராமவர்.

வால் நவதார்-ஒளியும் புதுமையும் வாய்ந்த மலர் மாலையை, மாவலி-மகாபலி சக்கரவர்த்தி, தானவ-அசுரனே, தாரணி-பூமியை, மாயன்-மாயச்செயல் உடையவன், தராதலம்-பூமி, வினை இன்றி-கர்ம வசத்

தாலில்லாமல், இச்சையான அது-விருப்பினால் ஆன அச்செய்தியை, முத்தராமவர்-மோட்சத்திற்கு உரியவ ராவர்.

ஒளியுள்ளதும் புதியதுமாகிய மாலையைத் தரித்த அழகிய திருத்தோள்களை உடையவனும், முன்பு மாவலியை அசுரனே நிலத்தைக்கொடு என்று இரந்த ஆச்சரியமான குணம் செயல்களை உடையவனுமாகிய ஸ்ரீமந் நாராயணன், நிலவுலகிலே எடுத்த மச்சாவதாரம் முதலிய வைகள், கர்ம வசத்தினால் அல்லாமல், அவனது சங்கல்ப மாத்திரத்தாலேயே ஆகிய அம்மெய்மையை யாவர் அறிவரோ அவர்தாம் முத்தி பெறுபராவர்.

ஆமவ ரைப்பணித் தாள்வா ரழக ரயனுமையாள்
வாமவ ரைப்பணி யான்பணி பாதத்தை வாழ்த்துங்கொங்கை
ஏமவ ரைப்பணி பூணாள்சந் தேந்திழை யாளுரைத்தால்
வேமவ ரைப்பணி யாதே யெனுமெங்கண் மெல்லியலே. (67)

எங்கள் மெல்லியல், ஆமவரைப் பணிந்து ஆள்வார் அழகர் அயன் உமையாள் வாம அரைப்பணியான் பணி பாதத்தை வாழ்த்தும், ஏம வரைக் கொங்கை பணி பூணாள், ஏந்து இழையாள் சந்து உரைத்தால், வேம், அவரைப் பணியாதே.

மெல்லியல்-பெண், ஆமவரை-அன்பராகின்றவரை, பணித்து ஆள்வார்-பணியச் செய்து ஆள்பவராகிய, அழகர்-அழகருடைய, அயன்-பிரமனும், உமையாள், வாமம்-பார்வதியுடன் கூடிய இடப்பாகத்தையும், அரைப் பணியான்-இடையில் பாம்புக் கச்சையையும் உடைய வனாகிய சிவனும், பணி பாதத்தை-வணங்கும் திருவடி களை, வாழ்த்தும்-வாழ்த்துவாள், ஏமவரைக் கொங்கை-பொன் மலை போலும் கொங்கைகளின் மீது, பணி பூணாள்-ஆபரணங்களை அணியமாட்டாள், ஏந்து இழையாள்-தோழியானவள், ஏந்து உரைத்தால்- சமா தானச் சொற்களைக் கூறினாள், வேம்-வெதும்புவாள்,

அவரைப் பணியாதே எனும்-அத்தலைவரைப் பற்றிப் பேசாதே என்பாள்.

மென்மையான தன்மையை உடையவளாகிய எங்கள் பெண் ஆனவள், தம்மிடம் அனுகூலராய் வருபவர்களான அன்பர்களை அடிமை கொண்டு ஆள்பவ ராகிய அழகருடைய, பிரமனும் பார்வதியைக் கொண்ட இடப்பாகத்தையும் இடையில் பாம்புக் கச்சையை உடையவனான சிவனும் வணங்கப்பெற்ற திருவடிகளை வாழ்த்துவாள். பொன்மலை போன்ற தனங்களின் மீது ஆபரணங்களை அணியாள், தரித்த ஆபரணங்களை உடையவளான பாங்கி, சமாதான வார்த்தை சொன்னால், உள்ளமும் உடலும் தவிப்பாள். சிறிதேனும் அன்பும், அருளும் இன்றி என்னைவிட்டுப் பிரிந்து சென்ற அத்தலைவரைப் பற்றி சொல்லாதே என்று சொல்வாள்.

மெல்லிய லைப்பரி யங்கனை யாரும் வெறுத்துவசை
சொல்லிய லைப்பரி யங்கவொட் டார்சுடர் மாமலையைப்
புல்லிய லைப்பரி யங்கத்தி லேறும் புயல்பதின்மர்
நல்லிய லைப்பரி யங்கழற் றாம நயந்தபின்னே. (68)

சுடர் மா மலையைப்புல்லி-அலைப் பரியங்கத்தில் ஏறும் புயல்-பதின்மர் நல்லியலைப் பரி அம் கழல் தாமம் நயந்த பின், மெல்லியலைப் பரி அங்கனையாரும் வெறுத்து வசை சொல்லி அலைப்பர், இயங்க ஒட்டார்.

சுடர் மா மலையைப் புல்லி-ஒளி வீசுகின்ற பெரிய திருமாலிருஞ் சோலை மலையை இடமாகக் கொண்டிருப் பவன், அலைப் பரியங்கம்-பாற்கடலாகிய பள்ளியில், ஏறும் புயல்-ஏறும் மேகம் போன்றவனான அழகப்பெருமானது, பதின்மர் நல்லியலை-பத்து ஆழ்வாருடைய நல்ல பிரபந்தங்களை, பரி-தாங்குகின்ற, அம் கழல் தாமம் நயந்த பின்-அழகிய திருவடிகளில் சூட்டப்பட்ட மலர் மாலையை விரும்பிய பிறகு, பரி அங்கனையாரும்- அன்பு கொள்ளும் செவிலித் தாய்மாரும், வசை-பழிச்சொல், அலைப்பர்-வருத்துவர், இயங்க ஒட்டார்-நடக்க விடார்.

விளங்குகின்ற பெரிய சோலை மலையை அடைந்து அதில் எழுந்தருளி இருப்பவனும், திருப்பாற் கடலிலே ஆதிசேடனாகிய கட்டிலில் ஏறிப் பள்ளி கொண்டருளும் மேகம் போன்றவனுமான அழகப் பிரானது பத்து ஆழ்வார்களுடைய சிறந்த தமிழ்ப் பிரபந்தங்களை ஏற்றுக்கொண்ட அழகிய திருவடிகளில் சாத்திய மாலையை இம்மட மகள் விரும்பிய பின்பு, மென்மைத் தன்மையுடைய உடையவளான இவளை, அன்பு கொண்டு நடத்தி வந்த மாதர்களும் வெறுத்துப் பழிமொழி கூறி வருத்துவார்கள். இவள் விருப்பத்தின்படி இவளைச் செல்ல விடமாட்டார்கள்.

பின்னிறப் பும்பிறப் புந்நரை மூப்பும் பிணியுமனை
முன்னிறப் பும்பிரித் தானிருந் தானவர் மூதிலங்கை
மன்னிறப் புங்கக் கணைதொட்ட சோலை மலையழகன்
பொன்னிறப் புண்டரி கத்திருத் தாளன்றிப் போற்றிலமே. (69)

'பிறப்பும் பின் இறப்பும் நரை மூப்பும் பிணியும் மனைமுன் இறப்பும் பிரித்தான்-இருந்தானவர், மூதி லங்கை மன் இறப்புங்கக் கணை தொட்ட சோலைமலை அழகன்-பொன்னிறப் புண்டரிகத்தாள் அன்றிப் போற்றிலம்.'

மனைமுன் இறப்பும்-வீட்டின் முன் யாசித்தலையும் இருந்தானவர்-பெரிய அரக்கரின், மூதிலங்கை மன்-பழைய இலங்கை அரசனான இராவணன், இற-மடியும்படி, புங்கக்கணை-உயர்வுடைய அம்புகளை, தொட்ட-தொடுத்த, போற்றிலம்-வணங்கோம்.

இரப்பும் என்பது 'இறப்பும்' என எதுகை நயம் நோக்கி விகாரப்பட்டது.

பிறப்பையும் அதன்பின் நேரக்கூடிய இறப்பையும், மயிர் நரைக்கப்பெறுகிற முதுமையையும், நோய் களையும், வீட்டின் மேல் இறப்புப் போலக் கவிந்து கொள்வதான கருமத்தையும் இயல்பில் நீக்கியுள்ள

வனும், பெரிய அசுரர்களும் இலங்கையின் மன்னனாகிய இராவணனும் அழியும்படி சிறந்த அம்புகளைத் தொடுத்தவனுமான, சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற அழகர் பிரானுடைய பொன் நிறமுள்ள செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை அல்லாமல் வேறொன்றை யாம் வணங்க மாட்டோம்.

போற்றியி ராமவென் னார்சோலை மாமலை போதவிடார்
மாற்றியி ராவைப் பகலாக்கி லார்வண் டுழாய்குழன்மேல்
ஏற்றியி ராசத மாகவை யாரென் னிடரையெல்லாம்
மாற்றியி ராரன்னை மாரென்னை வாய்வம் பளக்கின்றதே. (70)

'அன்னைமார் இராம போற்றி' என்னார், சோலை மாமலை போதவிடார், இராவை மாற்றிப் பகல் ஆக்கிலார், வண்டுழாய் குழல்மேல் ஏற்றி இராசதம் ஆக வையார், என் இடரை எல்லாம் ஆற்றியிரார், வாய் வம்பு அளக்கின்றது என்னை ?'

அன்னைமார்-செவிலித் தாய்மார், இராம போற்றி-இராமனே இவளைக் காப்பாற்று, போத-செல்ல, வண்டுழாய்-வளப்பமான துளசி மாலையை, இராசதம் ஆக-இராசத குணம் உண்டாகும்படி, வம்பு-வீண் பழிச்சொல்.

என் தாய்மார், யான் கொண்ட நோய்க்குப் பரிகாரமாக இராமபிரானே ! போற்றி ! என்று அத் தலைவன் பெயரைச் சொல்லி வாழ்த்த மாட்டார்கள். என்னைச் சோலைமலையில் சென்று சேரவிடமாட்டார்கள். இரவை மாற்றிப் பகல் பொழுதாக்க மாட்டார்கள். அத்தலைவனுடைய செழிப்பான திருத் துழாய் மாலையைக் கொண்டு வந்து என் கூந்தலின் மேல் சூட்டி மேன்மையாக வைக்கமாட்டார்கள். யான் படும் துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். என்னைக் குறித்து வாயினால் வம்பளக்கின்றதே இவர்கள்

தொழிலாக இருக்கின்றது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி, தனது தளர்ச்சியை ஊரார் முதலியவர்களால் அறிந்த செவிலித்தாயார் அதற்குத் தக்க பரிகாரம் ஒன்றும் செய்யாது முனிந்து கூறும் வார்த்தைகள் தன் வருத்தத்தை மிகுவித்தல் பற்றி இரங்கிக் கூறியது இது.

அளப்பது மங்கையி னீரேற் பதுந்தந் தளிப்பதும்பின்
பிளப்பது மங்கையில் வெண்கோட்டிற் கொள்வதும் பேருணவாக்
கிளப்பது மங்கை யெனத்தோள் புணர்வதும் கேட்கில்வையம்
வளப்பது மங்கையஞ் சேர்சோலை மாமலை மாதவரே. (71)

'வளப்பதுமம் கையம் சேர் சோலை மாமலை மாதவர், அளப்பதும், அம்கையில் நீர் ஏற்பதும், தந்து அளிப்பதும், பின் பிளப்பதும், ஐயில் வெண் கோட்டில் கொள்வதும், பேருணவாக் கிளப்பதும், மங்கை எனத் தோள் புணர்வதும் கேட்கில் வையம்.'

'அயில், கயம்' என்பன, எதுகை நயம் நோக்கி, 'ஐயில், கையம்' எனப் போலியாயின.

கயம்-குளம், மாதவர்-திருமால், தந்து அளிப்பதும்-சிருட்டித்துக் காப்பதும், பிளப்பதும்-அழிப்பதும், அயில்-கூர்மையான, வெண்கோட்டில்-வெண்மையான கோரப் பல்லினால், கிளப்பதும்-சொல்லப்படுவதும், வையம்-பூமியே.

வையம் அளந்ததும் கையில் நீரேற்றதும் வாமனாவதாரத்தில். கோட்டில் கொண்டது-வராக அவதாரத்தில்.

தடாகங்களில் செழிப்பான தாமரை மலர்கள் பொருந்திய சோலை மலையில் எழுந்தருளி இருக்கின்ற திருமகள் கொழுநரான திருமால் காலினால் அளந்து கொள்வதும். அழகிய திருக்கையில் தாரை வார்க்கும் நீரோடு தானமாக ஏற்றுக்கொள்வதும், ஆதியில்

படைத்துப் பின்பு காப்பதும், இறுதியில் அழிப்பதும் கூரிய வெண்ணிறமான கோர தந்தத்தால் குத்தி எடுப்பதும், தமக்கு ஏற்ற சிறந்த உணவாகச் சொல்வதும், மனை யாளாகக் கொண்டு தோள்களைத் தழுவுவதும் ஆகிய இவையெல்லாம் எதனை என்று கேட்டுமிடத்து பூமியையேயாகும்.

மாதவ ராலும்ப ராலறி யார்மது ரைப்பிறந்த
யாதவ ராலிலை மேற்றுயின் றாரிருந் தாழ்சுனையிற்
போதவ ராலுகண் மாலிருஞ் சோலையிற் போம்பிறவித்
தீதவ ராலன்றி யெத்தேவ ராலுந் தெறலரிதே. (72)

'மாதவரால் உம்பரால் அறியார்-மதுரைப் பிறந்த யாதவர்-ஆல் இலைமேல் துயின்றார் இருந்தாழ் சுனையில் போதவரால் உகள் மாலிருஞ்சோலையில் போம், பிறவித் தீது அவரால் அன்றி எத்தேவராலும் தெறல் அரிதே'!

மாதவர்-முனிவர், உம்பர்-தேவர், அறியார்- அறிய இயலாதவர், மதுரை-வடமதுரை, யாதவர்-யதுகுலச் செல்வர், துயின்றார்-அறிதுயில் கொண்டவர், இருந்தாழ் சுனை-பெரிய ஆழமான சுனை, போத-மிகுதியாக, வரால் உகள்-வரால் மீன்கள் துள்ளுகின்ற, போம்-சென்று சேவியுங்கள், பிறவித்தீது-பிறப்பாகிய துன்பம், தெறல் அரிதே-அழித்தற்கு இயலாததே ஆகும்.

பெரும் தவமுடைய முனிவர்களாலும் தேவர்களாலும் உள்ளபடி அறிய ஒன்னாதவரும், வட மதுரையில் திருவவதரித்த யதுகுலத் தோன்றலும், ஆல் இலையின் மீது கண் வளர்ந்தருளியவருமாகிய எம் பெருமானுடைய, பெரிய ஆழ்ந்த சுனைகளிலே மிகுதியாக வரால் மீன்கள் துள்ளப்பெற்ற சோலை மலையில் சென்று சேருங்கள் பிறவித்துன்பம் அப்பெருமானால் அன்றி வேறு எக்கடவுளராலும் நீக்குவதற்கு அருமையானதாம்.

அரியவ ரந்தந் தயன்முத லோர்க்கருள் செய்தவரைப்
பெரியவ ரந்தமில் வாழ்வின ராக்கித்தம் பேரருளால்
கரியவ ரந்தணர் கைதொழு மாலலங் காரர்வையத்
துரியவ ரந்தரங் கத்துயர் தீர்க்கவு லாவுவரே. (73)

'கரியவர்-அந்தணர் கை தொழும் மால் அலங்காரர், அயன் முதலோர்க்கு அரிய வரம்தந்து, அருள்செய்து, அவரைப் பெரியவர் அந்தமில் வாழ்வினர் ஆக்கி, தம் பேரருளால் வையத்து உரியவர் அந்தரங்கத் துயர் தீர்க்க உலாவுவர்.'

கரியவர்-கருநிறமுடையவரும், அயன்-பிரமன், அந்தமில்-அழிவில்லாத, உரியவர்-அடியவரின், அந்த ரங்கத்துயர்-மனத்துயரங்களை, அழகர்-அடியவர் துயர் நீக்க வையத்தில் அவதரித்து உலாவுவர்.

கரிய கருநிறம் உடையவரும், வேதியர்கள் கைகூப்பி வணங்கப்பெற்ற பெருமையுடைய அழகருமாகிய எம்பெருமான், பிரமன் முதலிய தலைமைத் தேவர் களுக்குப் பெறுவதற்கரிய வரங்களைத் தந்து கருணை புரிந்து அவர்களால் பெருமை உடையவர்களாகவும், யுக முடிவு வரை முடிவில்லாத வாழ்வை உடையவர்களாகவும் செய்து, தமது பெருங் கருணையினால் நிலவுலகிலே தமக்கு உரியவர்களான அடியார்களுடைய மனத் துன்பங்களை நீக்குவதற்காக உலாவுவர்.

உலகுதிக் கும்படி சிந்தித்துத் தந்திவ் வுலகிலுறும்
நலகுதிக் கும்படி நின்றபி ரானிட நானிலமும்
இலகுதிக் கும்விசும் புந்தொழ வோங்கி யிறால்வருடை
பலகுதிக் குந்தொறுந் தேன்பாயுஞ் சோலைப் பருப்பதமே. (74)

உலகு உதிக்கும்படி சிந்தித்து, தந்து, இவ்வுலகில் உறும் நல குதிக்கும்படி நின்ற பிரான் இடம், நானிலமும் இலகு திக்கும் விசும்பும் தொழ ஓங்கி, வருடை பல குதிக்குந்தொறும் இறால் தேன் பாயும் சோலைப் பருப்பதம் என்க.

உதிக்கும்படி-தோன்றும்படி, தந்து-சிருஷ்டித்து, நலை-நன்மைகள், குதிக்கும்படி - ஆனந்த நடனம் செய்யும்படி, நானிலமும்-உலகத்தவரும், இலகு திக்கும்- விளங்கும் அட்டதிக்குப் பாலகரும், விசும்பும்-வானவரும், வருடை-மலை ஆடுகள், இறால்-தேன் கூடுகள், சோலைப் பருப்பதம்-திருமாலிருஞ்சோலை மலையாம்.

உலகங்கள் உண்டாகுமாறு நினைத்து, அவற்றைப் படைத்து, இவ்வுலகிலே மிக்க நன்மைகள் மேலும் மேலும் பொங்கும்படி திருவருள் கொண்டு நின்ற உபகாரனாகிய எம்பெருமான் திருவுள்ளம் உவந்து எழுந்தருளி இருக்கிற இடம் எதுவென்றால் நிலவுலகில் உள்ளோரும், மேலுலகத்தில் உள்ளோரும் வணங்கும்படி உயர்ந்து மலை ஆடுகள் பல எழும்பிப் பாயுந்தோறும் தேன் கூடுகளிலிருந்து தேன் பெருகிப் பாயப்பெற்ற சோலை மலையாம். இது ஊர் அல்லது பதி எனப்படும் பிரபந்தத் துறை அமையக் கூறியது. பிரபந்த தலைவனது வாழிடம் இத்தகுச் சிறப்பு வாய்ந்தது என்று கூறுதல் இதன் இலக்கணமாகும்.

பருப்பதந் தாமன்னி நிற்பது பாற்கடல் பள்ளிகொள்வ
திருப்பதந் தாமம்பண் டிப்போ தெலாமிள ஞாயிறன்ன
உருப்பதந் தாமதர்க் கீயாம லன்பர்க் குதவழகர்
திருப்பதந் தாமரை போல்வா ருகப்பதென் சிந்தனையே. (75)

இளஞாயிறு அன்ன உருப்பதம் தாமதர்க்கு ஈயாமல், அன்பர்க்கு உதவு திருப்பதம் தாமரை போல்வார், பண்டு தாம் மன்னி நிற்பது, பருப்பதம், பள்ளி கொள்வது, பாற்கடல், இருப்பது, அம் தாமம் இப்போது எலாம் உகப்பது என் சிந்தனையே.

இளஞாயிறு - இளஞ்சூரியன், உகப்பதும் - நிற முடைய பரமபதத்தை, தாமதர்க்கு-தாமச குணமுடைய வர்க்கு, உதவு திருப்பதும்-கொடுத்து அருள்கின்ற திருவடிகள், மன்னி நிற்பது-நிலைபெற்று நிற்பது,

பருப்பதும்-திருமாலிருஞ்சோலை மலை, அம் தாமம்- அழகிய இடமான பரமபதம், எலாம் உகப்பது- அவை அனைத்துமாக விரும்புவது, சிந்தனையே-மனமே.

இளஞ்சூரியனைப் போன்று விளங்கும் திருவுரு வத்தை உடைய, பரமபதத்தை, தாமசகுணம் உள்ளவர்களுக்குக் கொடாமல் தம்மிடம் பக்தியுள்ள அடியவர்களுக்குக் கொடுத்து அருள்கிற, தாமரை மலர்கள் ஒத்திருக்கத் திருவடிகள் பெற்றவரான அழகப் பெருமான், முன்பு தாம் நின்ற திருக்கோலமாக நித்திய வாசம் செய்கின்ற இடம், சோலைமலையாம், கிடந்த கோலமாய் எழுந்தருளி இருக்கின்ற இடம் திருப்பாற் கடலாகும். வீற்றிருக்கின்ற இடம் அழகிய இடமான பரமபதமாம். இப்பொழுதோ நிற்கிற, படுக்கிற, அமர்கிற இடங்கள் ஆகிய அனைத்துமாக அப்பெருமான் விரும்புவது என் மனமேயாகும்.

சிந்திக் கலாரங் கொழிக்குந் திருச்சிலம் பாற்றழகும்
பந்திக் கலாப மயிலாடுஞ் சாரலும் பங்கயனோ
டந்திக் கலாமதி யாற்கரி யாருறை யான்பொருப்பும்
வந்திக் கலாமெனிற் சந்திக்க லாமுயர் வைகுந்தமே. (76)

ஆரம் கல் சிந்திக் கொழிக்கும் திருச்சிலம்பாற்று அழகும், பந்திக் கலாப மயில் ஆடும் சாரலும், பங்கய னோடு அந்திக் கலா மதியாற்கு அரியார் உறை ஆன் பொருப்பும் வந்திக்கலாம் எனின், உயர் வைகுந்தம் சந்திக்கலாம்.

ஆரம்-முத்தும், கல்-மாணிக்கமும், சிந்திக் கொழிக்கும்-சிதறி ஒதுக்கும், சிலம்பாறு-நூபுர கங்கை, பந்தி-வரிசையாய் அமைந்த, கலாபம்-தோகை, பங்கயன்- பிரமன், அந்திக் கலா மதியாற்கு-மாலையில் தோன்றும் கலையை உடைய பிறைச் சந்திரனை சூடிய சிவனுக்கும், அரியார்-உரை அரியவர், உறை-தங்கும், ஆன் பொருப்பு- இடபகிரி என்னும் திருமாலிருஞ்சோலை

மலை, வந்திக்கலாம் எனின்-வணங்குதல் வாய்க்கும் என்றால், சந்திக்கலாம்-அடைந்து உய்யலாம்.

முத்துக்களையும், பலவகை இரத்தினங் களையும் அலைகளிலே வீசி ஒதுக்குகின்ற சிறந்த நூபுர கங்கை நதியினது அழகையும், வரிசையான தோகையை உடைய மயில்கள் களித்துக் கூத்தாடப்பெற்ற சோலை மலையின் சாரலையும், தாமரையில் தோன்றியவனான பிரமனுக்கும், அந்தி மாலைப் பொழுதிலே விளங்குகிற கணையை உடைய பிறைச்சந்திரனை தரித்தவனாகிய சிவபிரானுக்கும், அரியவரான அழகப்பிரான் நித்திய வாசம் செய்து அருளப்பெற்ற இடப கிரியாகிய அத்திருமாலிருஞ் சோலை மலையையும் வணங்குதல் கூடுமாயின், உயர்ந்ததான பரமபதத்தை அடையலாம். இவற்றை வணங்கியவர் தவறாது திருவைகுந்தம் பெறுவர் என்பதாம்.

வைதா ரையுமுன் மலைந்தா ரையுமலர்த் தாளில்வைத்தாய்
மொய்தாரை யத்தனைத் தீங்கழைத் தேனையு மூதுலகிற்
பெய்தாரை வானிற் புரப்பா னிடபப் பெருங்கிரியாய்
கொய்தாரை வேய்ந்த திருவடிக் கீழ்த்தொண்டு
கொண்டருளே. (77)

மூதுலகில் பெய்தாரை வானின் புரப்பான் இடபப் பெருங்கிரியாய், முன் வைதாரையும் மலைந்தாரையும் மலர்த்தாளில் வைத்தாய், மொய்தாரை அத்தனைத் தீங்கு இழைத்தேனையும் கொய்தாரை வேய்ந்த திருவடியின் கீழ்த் தொண்டு கொண்டு அருள்க.

வானின் புரப்பான்-மேகம் போல பாதுகாத்தற்கு, இடபப் பெருங்கிரியாய்-இடபகிரி என்னும் பெரிய திருமாலிருஞ் சோலையில் உள்ளவனே, வைதாரையும்-உன்னை நிந்தித்த சிசுபாலன் முதலியவரையும், மலைந்தாரையும்-போர் செய்த தந்தவக்கிரன் முதலிய வரையும், வைத்தாய்-அமைந்தருளினாய், மொய்தாரை-

நெருங்கியுள்ள நட்சத்திரங்கள், கொய்தாரை-பறித்த மலரால் தொடுக்கப்பட்ட மாலை, தொண்டு-அடிமை.

பழமையான உலகத்திலே பொழிகின்ற மழைப் பெருக்கை உடைய மேகம் போல வரையாது அனைவரையும் பாதுகாத்தற்கு, பெரிய இடப கிரியில் எழுந்தருளி இருக்கின்றவனே, முன்பு உன்னை நிந்தித்த வரையும், உன்னை எதிர்த்துப் போர் செய்தவரையும் தாமரை மலர் போன்ற உன் திருவடியில் சேர்த்து அருளினாய். அத்தன்மையான நீ வானத்தில் நெருங்கிய நட்சத்திரங்கள் அளவு பெருந்தொகையுள்ள தீவினை களைச் செய்துள்ளவனான என்னையும், பறிக்கப்பட்ட மலர்களால் ஆகிய மாலைகளைத் தரித்த நின் திருவடியின் கீழ் அடிமை கொண்டருள்வாய்.

கொண்ட மருந்துங் கடைவாய் வழியுகக் கோழைவந்து
கண்ட மருந்துய ராம்போதுன் பாதங் கருதறியேன்
வண்ட மருந்துள வோனேதென் சோலை மலைக்கரசே
அண்ட மருந்தும் பிரானேயின் றேயுன் னடைக்கலமே. (78)

வண்டு அமரும் துளவோனே, தென் சோலை மலைக்கு அரசே, அண்டம் அருந்தும் பிரானே, கொண்ட மருந்தும் கடைவாய் வழி உக, கோழை கண்டம் வந்து அருந்துயர் ஆம் போது உன் பாதம் கருத அறியேன், இன்றே உன் அடைக்கலம்.

துளவோனே-துளசி மாலையைத் தரித்தவனே, அரசே- தலைவனே, அண்டம்-உலகங்களை, அருந்தும்-உட்கொள்ளும், மருந்தும்-பாலும், உக-சிந்த, கோழை கண்டம் வந்து-கபம் நெஞ்சில் உண்டாகி, அருந்துயர்-அரிய மனவேதனை, கருத-நினைக்க, அடைக்கலம்-சரணம் அடைந்தேன்.

வண்டுகள் விரும்பி மொய்க்கும் திருத்துழாய் மாலையை உடையவனே. அழகிய சோலை மலைக்குத் தலைவனே, அண்ட கோளங்களை உண்ணும் எம்பெருமானே, அரிதில் வாயில் செலுத்தப்பட்ட பாலும் உள்ளே இறங்கமாட்டாமல் கடைவாயின் வழியாக வெளியே வழிய, கபம் நெஞ்சில் அடைத்துக்கொண்டு அரிய மரண வேதனை உண்டாகும் சமயத்தில் உன் திருவடிகளை நினைக்க வல்லோன் அல்லன். இப்பொழுதே உன்னை நான் சரணம் அடைந்தேன்.

அடைக்கலந் தானை யிரந்தாள் புகல வவள்பொருட்டாள்
படைக்கலந் தானைத் தருமன் கெடாமல்வெம் பாரதப்போ
ரிடைக்கலந் தானை யலங்கா ரனைச்சர ணென்றடைந்தேன்
முடைக்கலந் தானையு மப்போ தயர்ப்பினு முத்தியுண்டே. (79)

தானை இரந்தாள் அடைக்கலம் புகல, அவள் பொருட்டால் படைக்கலம் தானைத் தருமன் கெடாமல் வெம்பாரதப் போரிடைக் கலந்தானை-அலங்காரனைச்-சரண் என்றடைந்தேன் முடைக்கலந்தான் நையும் அப்போது அயர்ப்பினும் முத்தி உண்டு.

தானை இரந்தாள்-கண்ணனிடம் புடைவையை யாசித்த திரௌபதி, புகல-சொல்லி, படைக்கலம் தானைத் தருமன்-ஆயுதங்களையும், சேனைகளையும் உடைய தருமன், கெடாமல்-அழியாதபடி வெம்பாரதப் போரிடை-கொடிய பாரத யுத்தத்தில், கலந்தானை-அருச்சுன னுக்குச் சேர்ந்தவனை, முடைக்கலம்தான் நையும் அப்போது-புலாம் நாற்றம் வீசும் உடம்பாகிய பாத்திரம் அழியும் அக்காலத்தில், அயர்ப்பினும்-நினைக்க மறந்தாலும், முத்தி-மோட்சம்.

கண்ணபிரானைக் குறித்து ஆடையை இரந்து பெற்றவளாகிய திரௌபதி, சரணம் என்று சொல்ல, அவள் நிமித்தமாக ஆயுதங்களையும், சேனைகளையும் உடைய

தருமபுத்திரன் அழியாதபடி, கொடிய பாரதப் போரிலே பாண்டவ சகாயனாய் அருச்சுனன் தேரில் சேர்ந்தவனாகிய அழகனை, அடைக்கலம் என்று அடைந்துவிட்டேன். ஆதலால் இனி தீ நாற்றமுடைய தசை நிரம்பியதொரு பாத்திரம் போன்ற இவ்வுடம்பு தளர்ந்தழியும், அப்பொழுது அப்பெருமானை நினையாது மறந்தாலும், எனக்கு மோட்சம் கிடைக்கும்.

பெருமானைச் சரணம் அடைந்தவர் அந்திம காலத்தில் அவனை நினையாவிடினும் பரமபதம் பெறுவர் என்பது கருத்தாகும்.

உண்டிறக் கும்புவ னங்களை மீள வுமிழ்ந்திலையேல்
பண்டிறக் கும்பது மத்தோன் புரந்தரன் பைந்தழல்போல்
கண்டிறக் குஞ்சங் கரன்முத லோர்களைக் கண்டவரார்
திண்டிறக் குஞ்சரஞ் சேர்சோலை மாமலைச் சீதரனே. (௪0)

திண்திறக் குஞ்சரம் சேர் சோலை மாமலைச் சீதரனே, நீ உண்டு இறக்கும் புவனங்களை மீள உமிழ்ந்திலையேல், பண்டு இறக்கும் பதுமத்தோன். புரந்தரன்-பைந்தழல் போல் கண் திறக்கும் சங்கரன் முதலானவர்களைக் கண்டவர் யார்?

திண்திறக் குஞ்சரம்-மிகுந்த வலிமை வாய்ந்த யானைகள், சீதரனே-இலக்குமியை மார்பில் தரித் தவனே, உண்டு இறக்கும்-உட்கொண்டதனால் மறையும், புவனங்களை-உலகங்களை, பண்டு இறக்கும்-முன்னம் அழிந்த, பதுமத்தோன்-பிரமன், புரந்தரன்-இந்திரன், சங்கரன்-சிவன்.

மிக்க வலிமையுடைய யானைகள் பொருந்திய சோலை மலையில் எழுந்தருளியிருக்கிற திருமாலே, நீ பிரளய காலத்தில் வாயினுள் கொண்டு வயிற்றினுள் செலுத்திய உலகங்களை, அப்பிரளயம் நீங்கும் அளவிலே வெளிப்படுமாறு உமிழாது இருந்தா யானால், முன்பு அழிந்து போன பிரமன், இந்திரன், பசுமையான

நெருப்புப் போல நெற்றிக் கண்ணைத் திறக்கின்ற சிவபிரான் முதலானவர்களை மீண்டும் பார்த்தவர் யாவர்.

நீ அமுது செய்த உலகங்களை மீள உமிழ்ந்த தனாலே அவ்வுலகங்களுடனே பிரமன் முதலிய தலைமைத் தேவர்கள் தோன்றினர் என்பதாம்.

சீரரி தாழ்பொழின் மாலிருந் சோலையிற் செல்வர் செங்கட்
போரரி தாள்புனை தாரரி தாகிற்றண் பூந்துளவின்
தாரரி தாவுந் தழையரி தாகிற் றழைதொடுத்த
நாரரி தாகிற் பிழைப்பரி தாமெங்க ணன்னுதற்கே. (81)

சீர் அரி - செங்கண் போர் அரி - தாழ்பொழில் மாலிருஞ்சோலையில் செல்வர் தாள் புனை தார் அரிது ஆகில், தண் பூந்துளவின் தார் அரி தாவும் தழை அரிது ஆகில், தழை தொடுத்த நார் அரிது ஆகில், எங்கள் நன்னுதற்குப் பிழைப்பு அரிதாம்.

சீர் அரி-சிறப்புடைய அரி என்னும் திருப்பெயருடைய வரும், போர் அரி-போரில் வல்ல நரசிங்கரும், செல்வர்-செல்வருமாகிய அழகரின், தாள் புனை-திருவடியை அலங்கரிக்கும், தார் அரிது ஆகில்-மாலை கிடைப்பது இயலாதாயின், தார் அரி தாவும்-மாலையில் வண்டுகள் தாவுகின்ற, தழை-இலையும், நன்னுதற்கு-அழகிய நெற்றியை உடையவளான பெண்ணுக்கு, பிழைப்பு அரிது-உயிர் வாழ்தல் இயலாது.

சிறந்த ஹரி என்னும் ஒரு திருநாமம் உடைய வரும், சிவந்த கண்களை உடைய போர்த்தொழிலில் வல்ல நரசிங்க மூர்த்தியானவரும் ஆகிய கிளைகள் தழைத்துத் தாழ்ந்துள்ள சோலைகளை உடைய சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற எல்லாச் செல்வங்களுக்கும் தலைவரான அழகப்பிரானது திருவடிகளில் தரித்த மாலை கிடைப்பது அரியதானால், குளிர்ச்சியான மலர்களை உடைய அத்திருத்துழாய் மாலையில் இடையிடையே தொடுக்கப்பட்டுள்ள நறுமணத்துடன் வண்டுகள் மேல்

விழுந்து மொய்க்கப்பெற்ற தழையும் கிடைப்பது அரிது. ஆனால் அத்தழை தொடுக்கப் பெற்றுள்ள நாரும் கிடைப்பது அரியதானால், அழகிய நெற்றியினை உடையவளான எங்கள் மங்கைக்கு உயிர் வாழ்க்கை அரியதாம்.

நன்னுத லைப்பணி பூண்மார்பில் வைத்துவிண் ணாட்டிருப்பார்
மின்னுத லைப்பணி மேற்றுயில் வார்விடை வெற்பினிற்பார்
மன்னுத லைப்பணி யன்பரை வைக்கு மலரடிக்கீழ்த்
துன்னுத லைப்பணி செய்வதெஞ் ஞான்றென்
றுயர்தொலைந்தே.(82)

பணி பூண் மார்பில் நன்னுதலை வைத்து விண் நாட்டு இருப்பார்-மின்னுதலைப் பணிமேல் துயில்வார்-விடை வெற்பில் நிற்பார், பணி அன்பரை மன்னுதலை வைக்கும் மலர் அடிக்கீழ் என்துயர் தொலைந்து துன்னு தலைப் பணி செய்வது எஞ்ஞான்று ?

பணி பூண்-ஆபரணங்களைத் தரித்த, நன்னுதலை-அழகிய நெற்றியினை உடையவளான இலக்குமியை, இருப்பார்-இருப்பவரும், மின்னுதலைப் பணிமேல்-ஒளி வீசுகின்ற தலைகளை உடைய ஆதிசேடன் என்னும் பாம்பின்மேல், துயில்வார்-அறிதுயில் கொள்பவரும், பணி அன்பரை-வணங்கும் அடியவரை, மன்னுதலை-நிலை பெற்ற இடமாகிய பரமபதத்தில், துன்னுதலைப் பணி- பொருத்தமான தலைமைத் திருத்தொண்டுகளை, எஞ்ஞான்று-எந்நாளில் ?

ஆபரணங்களைத் தரிக்கின்ற திரு மார்பில் அழகிய நெற்றியை உடையவளான திருமகளை வைத்துக் கொண்டு, பரமபதத்தில் வீற்றிருக்கின்றவரும், விளங்கு கின்ற தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பின் மீது யோக நித்திரை செய்கின்றவரும் சோலை மலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி இருக்கின்ற வருமான அழகரது வணங்குகின்ற அடியவர்களை எந்நாளும் அழிவின்றி நிலைபெற்ற இடமாகிய பரம

பதத்திலே வைத்து அருள்கிற தாமரை மலர் போன்ற திருவடிகளின் கீழ் எனது துன்பங்கள் நீங்கிப் பொருந்திய தலைமையான திருத்தொண்டுகளைச் செய்வது எந்நாளோ ?

தொலைந்தானை யோதுந் தொலையானை யன்னைசொல்
லான் மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை யாய்ச்சி கலைத்தொட்டிலோ
டலைந்தானைப் பாலி னலையானை வாணன்கை யற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்தென்
மடநெஞ்சமே. (83)

என் மட நெஞ்சமே, ஆனை தொலைந்து ஓதும் தொலையானை-அன்னை சொல்லால் மகுடம் கலைந் தானை-ஞானக் கலையானை-ஆய்ச்சி கலைத் தொட்டி லோடு அலைந்தானை-பாலின் அலையானை-வாணன் கை அற்று விழ மலைந்தானை-சோலை மலையானை வாழ்த்து.

தொலைந்து-வலி அழிந்து, தொலை யானை-தூரத்தில் உள்ளவனை, அன்னை-கைகேசியின், கலைந் தானை- நீங்கப்பெற்றவனை, ஞானக் கலையானை-ஞான நூலாகிய கீதையை வெளியிட்டவனை, கலைத் தொட்டிலோடு-சித்திர வேலைப்பாடு அமைந்த தொட்டி லுடன், பாலின் அலை யானை-திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனை, வாணன்-வாணாசுரனுடைய, மலைந் தானை-போர் செய்தவனை.

அறியாமையுடைய என் மனமே, கஜேந்திராழ்வான் வலிமை குன்றி அழைக்கப்பெற்ற பழமையானவனும், கைகேயின் சொல்லில் பட்டாபிடேக உற்சவம் கலைந்துவிடப் பெற்றவனும், நல்லுணர்வைத் தருகின்ற சாத்திரங்களால் கொண்டாடப் படுகிறவனும், இடைச்சியாகிய யசோதையினால் அமைக்கப்பட்ட துணித் தொட்டிலோடு அசைந்தவனும், திருப்பாற்

கடலைத் தான் வாழும் இடமாகக் கொண்டவனும், வாணாசுரனுடைய கைகள் துணிந்து விழும்படி போர் செய்தவனும் ஆகிய சோலை மலை அழகப்பிரானை வாழ்த்துவாய்.

நெஞ்சிலம் பாற்ற முடியாது வேளெய்து நீளிரவும்
துஞ்சிலம் பாற்றுளி யுந்நஞ்ச மாஞ்சொரி கன்மழையை
அஞ்சிலம் பாற்றடுத் தாரலங் கார ரடிவிளக்கும்
செஞ்சிலம் பாற்றரு கேகிடத் தீருயிர் தேற்றுதற்கே. (84)

நெஞ்சில் அம்பு ஆற்ற முடியாது வேள் எய்து நீள் இரவும் துஞ்சிலம், பால் துளியும் நஞ்சமாம். சொரிகல் மழையை அம் சிலம்பால் தடுத்தார் அலங்காரர் அடி விளக்கும் செஞ்சிலம் பாற்று அருகே உயிர் தேற்றுதற்குக் கிடத்தீர்.

அம்பு-பாணங்களை, ஆற்ற முடியாது-பொறுக்க இயலாதபடி, வேள் எய்து-மன்மதன் எய்ததனால், துஞ்சிலம்-உறங்கோம், நஞ்சமாம்-விஷம் போலும், அம் சிலம்பால்- அழகிய கோவர்த்தன மலையால், சிலம்பாறு-அழகர் மலையிலுள்ள நூபுர கங்கை, கிடத்தீர்-என்னைப் படுக்க வையுங்கள்.

நெஞ்சிலே, பாணங்களைப் பொறுக்க முடியாதபடி மன்மதன் செலுத்தியதால், நெடிய இரவு முழுவதும் உறக்கம் கொள்ளுகின்றோம் இல்லை. பாலின் துளியும் எமக்கு நஞ்சு போன்றதாம், ஆதலால் பொழிந்த கல் மழையை அழகிய மலையைக் கொண்டு தடுத்திட்டவராகிய அழகரது திருவடிகளைப் பிரமன் தன் கைக் கமண்டல தீர்த்தம் கொண்டு கழுவியதனால் வருகிற சிறந்த சிலம்பாற்றினது அருகில் எம்மை உயிர் பிழைக்கச் செய்வதற்காகக் கொண்டு போய்ப் படுக்க வையுங்கள்.

தேற்றுவித் தாற்புன றேற்றுநர் போற்றிரு வெட்டெழுத்தால்
மாற்றுவித் தானென் மயக்கமெல் லாமண்ணும் விண்ணுமுய்யப்
போற்றுவித் தாரப் புயலலங் காரன்பொன் மேருவைப்போல்
தோற்றுவித் தாரணி யுஞ்சுந் தரத்திருத் தோளண்ணலே. (௮௫)

மண்ணும் விண்ணும் உய்யப் போற்றுவித்தாரப் புயல்-பொன்மேருவைப் போல் தோற்றுவித்தார் அணியும் சுந்தரத் திருத்தோள் அண்ணல்-அலங்காரன், தேற் வித்தால் புனல் தேற்றுநர் போல், திரு எட்டு எழுத்தால் என் மயக்கமெல்லாம் மாற்றுவித்தான்.

மண்ணும்-பூமியில் உள்ளவரும், விண்ணும்-வானிலுள்ளவரும், உய்ய-பிழைக்க, போற்று-வழுங்கப் பட்ட, வித்தாரப்புயல்-பரவிய மேகம் போன்றவனும், வித்தார்-மலர் மாலையை, அண்ணல்-பெரியவனும், அலங்காரன்-அழகனுமான பெருமான், தேற்றுவித்தால்-தேற்றாங்கொட்டையால், புனல் தேற்றுநர் போல்-தண்ணீரைத் தெளியச் செய்பவர் போல.

நிலவுலகத்தாரும் வானுலகத்தாரும் உய்வு பெறுவதற்காக வணங்கப்பெற்ற பெரிய மேகம் போன்றவனும், பொன் மயமான மேருமலை போல விளங்குகின்றவனும், வண்டுகள் மொய்க்கும் மாலையைத் தரித்த அழகிய தோள்களை உடைய பெரியோனுமாகிய அழகப்பிரான், தேற்றாங் கொட்டையைக் கொண்டு நீரைக் கலக்கம் மாற்றித் தெளியச் செய்பவர் போல, திரு எட்டு எழுத்து மகாமந்திரத்தைக் கொண்டு என் மதி மயக்கத்தை எல்லாம் ஊற்றி மனம் தெளியச் செய்தருளினான்.

மண் கலந்த நீரைத் தேற்றாங்கொட்டையைக் கொண்டு தெளிவித்தல் போல, மயங்கிய மனத்தைப் பெரிய திருமந்திரத்தைக் கொண்டு தெளிவித்தவன் என்றார்.

அண்ணலை வான்மதி தோய்சோலை மாமலை யச்சுதனைத்
தண்ணலை வானவ னைத்தெய்வ நாதனைத் தாளடைவான்
எண்ணலை வான்பகை யாமைவ ரோடிசைந் தின்னமுடற்
புண்ணலை வானெண்ணி னாய்மன மேயுன்

புலமைநன்றே. (௪௬)

மனமே, அண்ணலை-தண் அலை வானவனை தெய்வநாதனை-வால் மதிதோய் சோலை மாமலை அச்சுதனைத் தாள் அடைவான் எண்ணலை, வான் பகை ஆம் ஐவரோடு இசைந்து இன்னம் உடல் புண் அலைவான் எண்ணினாய், உன் புலமை நன்று.

தண் அலை-குளிர்ச்சியான பாற்கடலில் பள்ளி கொள்ளும், வானவனை-கடவுளை, வால்-வெண்மை யான, மதிதோய்-சந்திரன் தவழ்கின்ற, அச்சுதனை-அழியாப் பெருமானை, அடைவான்-சேர்வதற்கு, எண்ணலை-நினைப்பாயல்லை, வான்-பெரிய, ஐவரோடு-ஐம்பொறிகளுடன், உடல் புண் அலைவான்-உடலாகிய புண்ணினால் வருந்த, புலமை-அறிவு, நன்று என்றது நன்றன்று என்று இகழ்ந்தபடி.

மனமே! பெருமையில் சிறந்தவனும், குளிர்ச்சியான திருப்பாற்கடலில் பள்ளிகொண்டருள்கிற கடவுளும், தேவர்களுக்கெல்லாம் தலைவனுமாகிய தூய்மையான சந்திரன் படியப் பெற்ற சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற அச்சுதன் என்னும் ஒரு திருநாமம் உடையவனான அழகப்பிரானின் திருவடிகளை அடையும் படி நீ நினைக்கின்றாய் இல்லை. பெரும்பகைவராகிய ஐம்பொறிகளோடு கூடி இன்னமும் உடம்பாகிய புண்ணினால் வருந்துமாறு நினைத்தாய், உனது அறிவுத் தேர்ச்சி நன்றாய் இருந்தது.

செய்வன தவிர்வன உணராது உட்பகையான ஐம்பொறிகளுக்கு இணங்கி, ஐம்புல நுகர்ச்சியில் ஆவல் கொண்டு, அப்புலன்களில் ஆழ்ந்து, இதுவரை மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அலைந்தது போதாமல் இன்னும் பிறப்பு எடுத்து அலையுமாறு தீவினை தேடுவதாகி, பெருமானைச் சரண் அடைந்து பிறவி நோய் தீரக் கருதாமையால், மனம் இங்ஙனம் இகழப்பட்டது.

புலமையி லேநிமிர்ந் தற்பரைப் போற்றிப் பொதுமகளைக்
குலமையி லேகுயி லேகொடி யேயென்றுங் கூர்விழியாம்
பலமையி லேயென்றும் பாடாமற் பாடுமின் பாவலர்காள்
நலமையி லேமுத்த மார்சோலை மாமலை நம்பனையே. (87)

பாவலர்காள், புலமையிலே நிமிர்ந்து, அற்பரைப் போற்றி, பொது மகளைக் குலமயிலே, குயிலே, கொடியே என்றும், கூர்விழி பலம் அயிலே ஆம் என்றும் பாடாமல், நல் அமையில் ஏய் முத்தம் ஆர் சோலை மாமலை நம்பனைப் பாடுமின்.

பாவலர்காள்-செய்யுள் செய்ய வல்ல புலவர்களே, புலமையிலே நிமிர்ந்து-அறிவில் சிறப்படைந்து, பொது மகளை-வேசையை, குலமயில்-சிறந்த மயில், கொடியே-பூங்கொடியே, கூர்விழி-கூர்மையான பார்வையுடைய கண்கள், பலம் அயிலே ஆம்-வலிய வேலாயுதமேயாகும், அமையில்-மூங்கிலில், ஏய்-பொருந்திய, ஆர்-நிரம்பிய, நம்பனை-நம் பெருமானான அழகனை.

மயில், அயில் என்பன எதுகை நயம் பற்றி மையில், ஐயில் எனப் போலியாயின.

கவிபாட வல்ல புலவர்களே! நீங்கள் கல்வித் தேர்ச்சியில் சிறந்து இழிவான மனிதர்களைத் துதித்து, வேசையை சிறந்த மயிலே குயிலே பூங்கொடியே என்றும், அவளது கூரிய கண்கள் வலிய வேலாயுதம் போலும்

என்றும் கவிபாடாமல், சிறந்த மூங்கில்களில் பொருந்திய முத்துக்கள் நிறைந்த சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற சிறந்த கடவுளான அழகனைக் கவிபாடித் துதியுங்கள்.

நம்பிநின் றேனுன் சரணார விந்தத்தை நன்னெஞ்சென்னும்
செம்பிநின் றேபொறித் தேனுனக் காளென்று தெய்வக்குழாம்
பம்பிநின் றேசெறிக் கும்பதங் காணப் பதறுகின்றேன்
கொம்பிநின் றேன்சொரி யுஞ்சோலை மாமலைக்
கொற்றவனே. (৪৪)

கொம்பின் இன் தேன் சொரியும் சோலை மாமலைக் கொற்றவனே, உன் சரண அரவிந்தத்தை நம்பி நின்றேன். உனக்கு ஆள் என்று நல் நெஞ்சு என்னும் செம்பின் இன்றே பொறித்தேன். தெய்வக் குழாம் பம்பி, தேசு எறிக்கும் நின் பதம் காணப் பதறுகின்றேன்.

கொம்பின்-பூங்கொம்பிலிருந்து. கொற்றவனே-தலைவனே, சரண அரவிந்தத்தை-திருப்பாதக் கமலங்களை, ஆள்-அடிமை, செம்பின்-செப்பேட்டிலே, பொறித்தேன்-எழுதினேன், தெய்வக்குழாம் பம்பி-தேவர்களின் கூட்டம் நெருங்கி, தேசு எறிக்கும்- ஒளிவீசும், நின்பதம்-உனது பரமபதத்தை.

செம்பிநின்றே, கொம்பிநின்றே என னகரம் நகரமாக எதுகை நோக்கித் திரிந்து நின்றது.

பூங்கொம்புகளின்று இனிமையான தேன் பெருகப் பெற்ற சோலை மலையில் எழுந்தருளி இருக் கின்ற தலைவனே! உன் திருவடித் தாமரையையே நம்பி நின்றேன். உனக்கு நான் அடிமை என்று எனது அனுகூலமான மனமாகிய செப்பேட்டில் இன்றைக்கே எழுதி வைத்துக் கொண்டேன். நித்திய சூரிகளுடைய கூட்டம் நெருக்கப் பெற்று நினது ஒளி விளங்கப்பெற்ற பரமபதத்தை அடைவதற்கு விரைகின்றேன்.

கொற்ற விராவணன் பொன்முடி வீழக் கொடுங்கண்டுஞ்சல்
உற்ற விராவணன் மாளவெய் தோனொண் பரதனுக்குச்
சொற்ற விராவணன் மாலிருஞ் சோலை தொழுதுவினை
முற்ற விராவண னற்றமிழ் மாலை மொழிந்தனனே. (௮௯)

கொற்ற இராவணன் பொன்முடி வீழ, கொடுங்கண் துஞ்சல் உற்ற இராவணன் மாள எய்தோன்-ஒண் பரதனுக்குச் சொல் தவிரா அண்ணன்-மாலிருஞ்சோலை தொழுது வினைமுற்ற இராவண்ணன் நற்றமிழ் மாலை மொழிந்தனன்.

கொற்ற இராவணன்-வெற்றி வாய்ந்த இராவணன், துஞ்சல் உற்ற-தூக்கம் மிகுந்த, இராவ(ண்)ணன்-இரவைப்போன்ற கரிய நிறத்தினை உடைய கும்ப கன்னன், மாள-இறக்க, எய்தோன்-அம்பைச் செலுத்திய வனும், ஒன் பரதனுக்கு-சிறந்த பரதாழ்வானுக்கு, சொல் தவிரா-சொல்லை நீங்காத, அண்ணன்-தமையனுமான அழகனுடைய, வினை முற்ற இரா வ(ண்)ணன்-தீவினை முழுதும் இல்லாவிதமாக, நல் தமிழ் மாலை-அழகிய தமிழ்ப் பாமாலையை, மொழிந்தனன்-பாடினேன்.

இறுதியடியில் இராவண னற்றதமிழ் என்பதில் தந்நகரம், றன்னகரமாய்த் திரிந்தது திரிபு நலங் கருதி எனலாம்.

வெற்றியை உடைய இராவணனது பொன் மயமான முடிகள் கீழே விழும்படியும், பயங்கரமான கண்களை மூடித் தூங்குதல் மிக்க இருள் போன்ற கரு நிறத்தை உடையவனான கும்பகர்ணன் இறக்கும் படியும், அம்பெய்தவனும் விளங்குகிற பரதாழ்வானுக்கு சொல் தவறாதபடி மீண்டு வந்தருளிய தமையனுமான அழகப் பிரானுடைய சோலை மலையைத் தொழுது, கருமம் முழுதும் இராதவிதமாகச் சிறந்த தமிழ்ப் பாமாலையைச் சொன்னேன்.

மொழித்தத்தை கொஞ்சு மலையலங் காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித் தோனடி நாட்டொடர்ந்தென்
னுழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொருநொடியிற்
கழித்தத்தை யென்சொல்லு கேன்றனக் காட்பட்ட காலத்திலே.(90)

மொழித் தத்தை கொஞ்சும் மலை அலங்காரன்-முன் நூற்றுவரை அழித்து, அத்தை மைந்தர்க்கு அரசு அளித்தோன்-அடிநாள் தொடர்ந்து என் வழித் தத்தைச் செய்து அன்றிப் போகா வினையைத் தனக்கு ஆட்பட்ட காலத்திலே ஒரு நொடியில் கழித்தத்தை என் சொல்லுகேன்.

மொழித்தத்தை-பேச்சில் சிறந்த கிளிகள் கொஞ்சும்-அழகாகப் பேசும், மலை-திருமாலிருஞ் சோலை மலையிலுள்ள, அலங்காரன்-அழகனும், முன்- கிருஷ்ணாவதாரம் செய்த முன் காலத்தில், நூற்றுவரை-துரியோதனன் உள்ளிட்ட கௌரவர் நூறு பேரையும், அத்தை - குந்தி தேவியின், அடிநாள் - ஆதிகாலம், என்னுழி - என்னிடத்தில், தத்தைச் செய்து-ஆபத்தை விளைத்து, அன்றி-அல்லாமல், கழித்தத்தை-ஒழித்ததை, என் சொல்லுகேன்-என்னவென்று கூறி வியப்பேன்.

கழித்ததை என்பது கழித்தத்தை என விரித்தல் விகாரம் பெற்று நின்றது.

சொல்லழகில் சிறந்த கிளிகள் கொஞ்சிப் பேசுதற்கு இடமான சோலை மலையில் எழுந்தருளி இருக்கிற அழகனும், முன்பு துரியோதனாதியார் நூறு பேரையும் அழித்துத் தனது அத்தையான குந்தியின் குமாரர்களாகிய பாண்டவர்களுக்கு அரசாட்சியைக் கொடுத்து அருளியவனுமாகிய எம்பெருமான், ஆதி காலம் தொடங்கி என்னிடத்தில் துன்பத்தைச் செய்தல்லது ஒழியாத என் கருமங்களை அவனுக்கு அடிமைப்பட்ட பொழுதே ஒரு மாத்திரைப் பொழுதில் ஒழித்தருளிய திறத்தை என்னவென்று சொல்வேன் ?

கால மலைக்கும் புவனங்க ளைக்கரந் தாயுதிரங்
கால மலைக்குமைத் தாயழ காகம லத்துப்பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன் பாவுயிர் காயம்விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக் காய்ந்தென்னைக்
காத்தருளே. (91)

கால் அம் அலைக்கும் புவனங்களைக் கரந்தாய், உதிரம் கால ம(ல்)லைக் குமைத்தாய், அழகா, கமலத்துப் பஞ்சு ஆர்கால் அமலைக்கும் புவிக்கும் அன்பா, உயிர் காயம் விடும் காலம் மலைக்கும் கருங்கூற்றைக் காய்ந்து என்னைக் காத்தருள்.

கால் அம் அலைக்கும்-காற்றும் நீரும் மோதுகின்ற, புவனங்களை-உலகங்களை, கரந்தாய்-உட்கொண்டு மறைத்து அருளியவனே, கால-கக்கும்படி, ம(ல்)லை-சாணூரன் முஷ்டிகன் என்னும் மல்லர்களை, குமைத் தாய்-அழித்தவனே, பஞ்சு ஆர்-செம்பஞ்சுக் குழம்பு பொருந்திய, அமலைக்கும்-குற்றமற்றவளான இலக்கு மிக்கும், புவிக்கும்-நிலமகளுக்கும், அன்பா- காதலனே, காயம்-உடலை, மலைக்கும்-வருத்தும், கருங்கூற்றை-கொடிய எமனை, காய்ந்து-கோபித்து நீக்கி.

ஊழிக் காற்றின் உதவியால் கடல் நீர் அலை வீசிப் பொங்கி மேல் வரப்பட்ட உலகங்களைத் திருவயிற்றில் ஒளித்துவைத்துப் பாதுகாத்து அருளியவனே! இரத்தத் தைக் கக்கும்படி மல்லர்களை நசுக்கி அழித்தவனே ! அழகா ! செந்தாமரை மலரில் வீற்றிருக்கிற செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற திருவடிகளை உடைய குற்றமற்றவ னான திருமகளுக்கும், பூமி தேவிக்கும் அன்புள்ள கணவனே ! உயிர் எனது உடம்பை விட்டு நீங்கும் காலத்தில் எதிர்த்துப் பொருது நலிய வரும் கொடிய எமனைச் சினந்து விலக்கி என் உயிரைப் பாதுகாத்து அருள்வாய்.

அருளக் கொடியிடைப் பூமாது நீயும்வந் தாளினுமாம்
இருளக் கொடிய நமன்வருங் காலத் திகழினுமாம்
கருளக் கொடியழ காவலங் காரவன் கஞ்சனெஞ்சத்
துருளக் கொடிய வுதைத்தா யெனதுயி ருன்னுயிரே. (92)

கருளக்கொடி அழகா, அலங்காரா, வன் கஞ்சன் நெஞ்சத்து உருள் அக்கு ஒடிய உதைத்தாய், எனது உயிர் உன் உயிரே, இருள் அக்கொடிய நமன் வரும் காலத்துக் கொடி இடைப் பூமாதும் நீயும் அருள வந்து ஆளினும் ஆம்: இகழினும் ஆம்.

கருளக்கொடி-கருடக் கொடியை உடைய, அலங் கார-அலங்காரனே, வன் கஞ்சன்-கொடிய கம்சனது, நெஞ்சத்து-மார்பிலுள்ள, உருள் அக்கு-திரண்ட எலும்பு கள், இருள் அக்கொடிய நமன்-கரிய நிறத்தையுடைய அந்தக் கொடிய எமன், கொடி இடைப் பூமாதும் நீயும்-பூங்கொடி போன்ற இடையை உடைய இலக்குமியும் நீயும், அருள வந்து-கிருபை செய்ய எழுந்தருளி, ஆளினும் ஆம்- ஆட்கொண்டாலும் தகும். இகழினும் ஆம்- இகழ்ந் தாலும் தகும்.

கருடனது வடிவமெழுதிய கொடியை உடைய அழகனே! அலங்காரனே! கொடிய கம்சனது நெஞ்சி லுள்ள திரண்ட எலும்பு முறியும்படி உதைத்தவனே, என்னுடைய உயிர் உனக்கு அடிமைப்பட்ட உயிரே ஆகும். இருள் நிறமுள்ள அந்தக் கொடுமையையுடைய எமன் வரும் அந்திமக் காலத்திலே, பூங்கொடி போலும் மெல்லிய இடையை உடைய தாமரை மலரில் வாழும் பெரிய பிராட்டியும் நீயுமாக நற்கதி அருள எழுந்தருளி அவ்வுயிரை ஆட்கொண்டாலும் சரி, அன்றி எமன் கொண்டு போகும்படி இகழ்ந்தாலும் சரி.

அடியார்கள் செய்த குற்றங்களைக் குற்றமென்று கொள்ளாது தான் பொறுத்தலே அன்றி, அவற்றிற்காக எம்பெருமான் சீற்றம் கொள்ளும் இடத்தும் பொறுத்தருளு மாறு தகவுரை சொல்லப் பெரிய பிராட்டியார்

உடன் உறைதல் இன்றியமையாததென்று கொண்டு பூமாதும் நீயும் அருள வந்து ஆளின் என்றார்.

உயிர்க்கும் படிக்குமுன் னாயிரம் பேரென் றொறுத்தன்னைமார்
செயிர்க்கும் படிக்குநின் றேனென்செய் கேன்செழுந் தேவர்களும்
அயிர்க்கும் படிக்குற ளாமழ காவலங் காரநெய்க்கும்
தயிர்க்கும் படிக்குஞ்செவ் வாய்மலர்ந் தாய்நின்னைத்
தாள்பணிந்தே. (93)

செழுந்தேவர்களும் அயிர்க்கும்படி குறள் ஆம் அழகா, அலங்கார, நெய்க்கும் தயிர்க்கும் படிக்கும் செவ்வாய் மலர்ந்தாய், நின்னைத் தாள் பணிந்து உயிர்க்கும், உன் ஆயிரம் பேர் படிக்கும் என்று அன்னைமார் ஒறுத்துச் செயிர்க்கும்படி நின்றேன், என் செய்தேன்?

அயிர்க்கும்படி -சந்தேகிக்குமாறு, குறள்ஆம்- வாமனாவதாரம் செய்த, படிக்கும்-உலகத்திற்கும், மலர்ந் தாய்-திறந்தவனே, உயிர்க்கும்-இவள் பெருமூச்சு விடுகின்றாள், படிக்கும்-சொல்லித் துதிக்கின்றாள், ஒறுத்து-என்னைத் தண்டித்து, செயிர்க்கும்படி- கோபிக்கு மாறு, என் செய்கேன்-யான் யாது செய்வேன்.

ஞான வளமுடைய தேவர்களும் சங்கிக் கும்படி, குறுகிய வடிவமாகிய வாமனாவதாரம் செய்த அழகனே! அலங்காரனே! வெண்ணெயையும் தயிரையும் அமுது செய்வதற்காகவும், பிரளய காலத்தில் உலகை உட்கொள் வதற்காகவும், சிவந்த திருவாய் மலரைத் திறந்து அருளியவனே! உன்னைத் திருவடி வணங்கி என்னைக் குறித்து இவள் பெருமூச்செறிகின்றாள், நினது ஆயிரம் பெயர்களையும் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக் கின்றாள் என்ற காரணத்தால், என் தாய்மார் வெறுப்புக் கொண்டு கோபிக்கும் நிலையிலேயே நின்றிட்டேன், யாது செய்யக்கடவேன்.

பிரிவாற்றாத தலைவியை நோக்கிச் செவிலியர் வெகுண்டு பல கூறினர். அது கேட்டுத் துன்பமுற்ற தலைவி, தன் நினைவு மிகுதியால் தலைவன் எதிரில் நிற்பது போல் கருதி, உருவெளித் தோற்றத்திலே வெளிப்பட்ட அத்தலைவனை முன்னிலைப் படுத்திக் கூறியது இது.

தியான நிலையில் இவ்வாசிரியரின் அகக் கண்ணுக்குப் பெருமான் புலனாகி மறைய, ஆற்றாமையுடன் அவனது திருநாமங்களை வாய் மாறாமல் எடுத்துக்கூறி வருந்த, அதுகண்ட அன்பர், இங்ஙனம் ஓர் ஆற்றாமை உண்டோ எனக் குறை கூற, இவர் அப்பெருமானைக் குறித்து விண்ணப்பித்தல் இதற்கு உள்ளுறையாம்.

பணிபதி வாடநின் றாடின நூற்றுவர் பாற்சென்றன
பணிபதி னாலு புவனமுந் தாயின பாப்பதின்மர்
பணிபதி யெங்கு முவந்தன பங்கயப் பாவையுடன்
பணிபதி மார்ப னலங்காரன் பொற்றிருப் பாதங்களே. (94)

பங்கயப்பாவையுடன் பணிபதி மார்பன் அலங்காரன் பொன் திருப்பாதங்கள், பணி பதி வாட நின்று ஆடின, நூற்றுவர் பால் சென்றன. பணி பதினாலு புவனமும் தாயின, பதின்மர் பாப்பணி பதி எங்கும் உவந்தன.

பங்கயப் பாவை-இலக்குமி, பணிபதி-ஆபரணம் பொருந்தியுள்ள, பொன் திருப்பாதங்கள்-அழகிய திருவடிகள், பணிபதி-பாம்பரசான காளியன், நூற்றுவர் பால்-துரியோதனன் முதலிய நூறு பேரிடத்தில், பணி பதினாலு புவனமும்-தம்மை வணங்கும் பதினான்கு உலகங்களையும், தாயின-தாவி அளந்தன, பதின்மர்-பத்து ஆழ்வார்களும், பாப்பணி-பாசுரங்களால் துதித்து வணங்குகின்ற, பதி எங்கும்-திருப்பதிகளில் எல்லாம், உவந்தன-விரும்பின.

செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற சித்திரப்பாவை போல் அழகியவளான திருமகளுடனே, ஆபரணமும் நீங்காது பொருந்தப் பெற்ற திருமார்பை உடையவனான அழகப் பிரானுடைய பொன் மயமான ஆபரணங்களை அணிந்த திருவடிகள், நாகராஜனான காளியன் வலிமை தளரும்படி அவன் முடிகளின்மேல் நின்று நடனம் செய்தன, துரியோதனாதியரிடத்துத் தூது சென்றன, இயல்பிலே தமக்குக் கீழ்படிந்தனவான பதினான்கு உலகங்களையும் தாவியளந்தன. பத்து ஆழ்வார்களாலும் பாசுரம் பாடித் துதிக்கப்பெற்ற திருத் தலங்களில் எல்லாம் விரும்பி எழுந்தருளி இருந்தன.

பதினாலு புவனம் பூலோகம், புவர் லோகம், சுவர் லோகம், மகர்லோகம், ஜநலோகம், தபோ லோகம், சத்ய லோகம் என்ற ஏழு மேல் உலகங்களும், அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம் என்ற ஏழு கீழ் உலகங்களுமாம்.

பாதக ரத்தனை பேருங் கனகனும் பன்னகத்தால்
ஏதக ரத்தனை யற்கரு ளாளியை யெட்டெழுத்துள்
ஓதக ரத்தனைச் சுந்தரத் தோளுடை யானைநவ
நீதக ரத்தனைச் சேர்ந்தார்க்குத் தேவரு நேரல்லரே. (95)

பாதகர் அத்தனை பேரும் கனகனும் பல் நகத்தாலே தகரத் தனையற்கு அருள் ஆளியை-எட்டு எழுத்துள் ஓது அகரத்தனை-சுந்தரத்தோள் உடையானை-நவநீத கரத் தனைச் சேர்ந்தார்க்குத் தேவரும் நேர் அல்லர்.

பாதகர்-பாவிகளாகிய அரக்கர், கனகன்- இரணியன், பல் நகத்தாலே தகர-பல நகங்களால் கிழிப்புண்டு இறக்க, தனையற்கு-இரணியன் மைந்தனான பிரகலாதனுக்கு, ஆளியை-நரசிங்கப் பெருமானை, எட்டு எழுத்துள் ஓது அகரத்தனை-அஷ்டாஷரத்திற் சொல்லும் அகரத்தின் பொருளானவனை, நவநீத கரத்தனை-வெண்ணெய் ஏந்திய கையனை, சேர்ந்தார்க்கு-அடைந்தவருக்கு, நேர்-சமானம்.

தீவினை உடையவரான அசுரர் அனைவரும், இரணியனும், கைந் நகங்கள் பலவற்றால் பிளந்தழிய, அந்த இரணியனது குமாரனான பிரகதாழ் வனுக்குக் கருணை செய்த நரசிங்க மூர்த்தியும், திரு எட்டு எழுத்து மந்திரத்தில் முதலிலே சொல்லப்படுகிற அகரம் என்னும் உயிரெழுத்தின் பொருளாய் உள்ளவனும், அழகிய திருத்தோள்களை உடையவனும், வெண்ணையை ஏந்திய கையை உடையவனுமாகிய அழகப்பிரானைச் சரண மடைந்தவர்க்குத் தேவர்களும் சமானர் ஆகார்.

அல்லலங் காரையுஞ் சேர்விக்கு மைம்புல வாசையென்றும்
பல்லலங் காநைந்து கோலூன்றி யும்பற் றறாதுகண்டாய்
மல்லலங் காரிகை யார்மரு டீர்ந்து வணங்குநெஞ்சே
தொல்லலங் காரனைத் தென்றிரு மாலிருஞ் சோலையிலே. (96)

நெஞ்சே, ஆரையும் அல்லல் சேர்விக்கும் ஐம்புல ஆசை, என்றும் பல் அலங்கா நைந்து கோல் ஊன்றியும் பற்று அறாது, மல்லல் அம் காரிகையில் மருள் தீர்ந்து, தொல் அலங்காரனைத் தென் திருமாலிருஞ் சோலை யிலே வணங்கு.

அலங்கா நின்று-அசைவுற்று, அறாது-நீங்காது, மல்லல்-வளப்பம் பொருந்திய, அம்-அழகிய, மருள்-மோக மயக்கம், வணங்கு-தொழுவாயாக.

கண்டாய், அங்கு என்பன அசைகள்.

மனமே எவரையும் துன்பம் அடைவிக் கின்ற ஐந்து புலன்களில் செல்லுகின்ற ஆசையானது, எந்நாளும் பற்கள் அசையப்பெற்று உடல் தளர்ந்து கோலை ஊன்றும்படி ஆனாலும், தொடர்ச்சி நீங்காது, ஆதலால் அழகு வளமுள்ள பெண்கள் பக்கம் உண்டாகிற மோகம் நீங்கி, பழமையான அழகனை, அழகிய சோலை மலையிலே வணங்குவாய்.

சோலையி லாமையில் சேர்திரு மாலிருஞ் சோலைநின்றான்
வேலையி லாமையில் வேடங்கொண் டான்புய மேவப்பெறாச்
சேலையி லாமையி லங்குகண் ணாளவன் றெய்வத்துழாய்
மாலையி லாமையில் மாலையுற் றாளந்தி மாலையிலே. (97)

சோலை இல் ஆ(க)மயில் சேர் திருமாலிருஞ் சோலை நின்றான்-வேலையில் ஆமையில் வேடங் கொண்டான் புயம் மேவப்பெறாச் சேல் அயில் ஆம் மை இலங்கு கண்ணாள், அவன் தெய்வத் துழாய் மாலை இலாமையில் அந்தி மாலையிலே மாலை உற்றாள்.

சோலை இல் ஆ(க)-சோலையே இடபமாக, மயில்-மயில்கள், வேலையில்-திருப்பாற்கடலில், ஆமையில்-ஆமையைப் போல, புயம்-தோள்களை, மேவப் பெறா-பொருந்தப் பெறாத, சேல் அயில் ஆம்-கெண்டை மீனும் வேலும் போன்ற, மை இலங்கு-மை தீட்டப்பெற்று விளங்கும், கண்ணாள்-கண்களை உடையவளான என் தலைவி,இலாமையில்-பெற்றிலாமையால், அந்தி மாலை யிலே-அந்தி மாலைக் காலத்தில், மாலை உற்றாள்-மயக்கத்தை அடைந்தாள்.

மயில், அயில் என்பன மையில் ஐயில் என எதுகை நயம் பற்றிப் போலியாய் நின்றன.

சோலைகளைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டு மயில்கள் தங்கி வசிக்கப்பெற்ற சோலை மலையில், நின்ற திருக்கோலமாக எழுந்தருளி இருக்கின்றவனும், திருப்பாற் கடலிலே ஆமைபோல வடிவம் கொண்டு அவதரித்தவனுமான அழகப் பிரானுடைய தோள்களைத் தழுவப்பெறாத சேல் மீனும் வேலாயுதமும் போன்ற மையிடப்பெற்று விளங்கும் கண்களை உடையவளான இம்மங்கை, அத் தலைமகனது தெய்வத் தன்மை பொருந்திய திருத்துழாய் மாலை கிடைக்கப் பெறாமை யால், அந்திமாலைப் பொழுதிலே மயக்கத்தை அடைந்தாள்.

ஞானக் கண்ணுக்கு இலக்காகி மறைந்த பெருமானது பிரிவினால் வருந்துகிற இவ்வாசிரியரது விபாமோகம் கண்ட அன்பர்கள் இரங்கிக் கூறும் சொல் இதற்கு உள்ளுறையாம்.

அழகாக விரிந்து காட்டும் தோகைக் கண்கள் பல வற்றை உடையனவாய்க் கார் வரவு கண்டு களித்துக் கூத்தாடும் மயில்கள் போல, பொலிவுறப் பலபடியாக விசாலிக்கிற ஞானக் கண்களை உடையராய்க் கார்மேக வண்ணனது தரிசனத்தால் களித்துக் கூத்தாடும் பாகவதர்கள் தங்களுக்குரிய வாழிடமாகக் கொண்டு வசிக்கப் பெற்ற திவ்விய தேசம் எனலாம்.

மாலைக் கரும்பு சிறுகால் துகைக்க வருந்துமெங்கள்
ஆலைக் கரும்புதன் னாசையெல் லாஞ்சொல்லி லாயிரந்தோட்
டோலைக் கரும்புண் டொடமுட மாமதி யூர்குடுமிச்
சோலைக் கரும்புய லேயரு ளாயுன் றுளவினையே. (98)

தொட முடம் ஆ (க) மதி ஊர் குடுமிச் சோலைக் கரும்புயலே, மாலைக்கு அரும்பு சிறுகால் துகைக்க, வருந்தும் எங்கள் ஆலைக் கரும்புதன் ஆசை எல்லாம் சொல்லில், ஆயிரம் தோட்டு ஓலைக்கு அரும்புண், உன் துளவினை அருளாய்.

தொட முடம் ஆ (க)-தொடுவதால் முடமாகும்படி, மதி ஊர்-சந்திரன் தவழும், குடுமி-உச்சியை அடைய, புயலே-மேகம் போன்றவனே, மாலைக்கு-மாலைக் காலத்தில், அரும்பு சிறுகால் துகைக்க-உண்டாகின்ற மந்த மாருதம் வருத்த, ஆலைக் கரும்புதன்-ஆலையிற் சிக்கிய கரும்பு போன்றவளான தலைவியின், ஆயிரம் தோட்டு ஓலைக்கு-ஆயிரக்கணக்கான இதழாகிய ஓலைகளுக்கு, அரும் புண்-அரிய புண்ணாகும், அருளாய்-கொடுத்து அருள் வாயாக.

உராய்தலினாலே அடி தேய்ந்திடுமாறு சந்திர மண்டலம் தவழ்ந்து செல்லப்பட்ட சிகரத்தை உடைய

சோலைமலையில் எழுந்தருளி இருக்கின்ற, காளமேகம் போன்றவனே, மாலைப் பொழுதில் மந்தமாக வீசுகின்ற இளந்தென்றல் காற்று வருத்துதலால் வருந்துகிற ஆலையில் அகப்பட்ட கரும்பு போன்றவளான எங்கள் தலைவியினது ஆசை முழுவதையும் சொல்லி விடுவதானால் அதனை எழுதுமிடத்து ஆயிரம் பனை ஓலைக்கு அரிய புண்ணாகும். இங்ஙனம் இருத்தலால் நினது திருத்துழாய் மாலையைத் தந்தருள்வாயாக.

ஒருவழித் தணிந்த தலைவன் வந்து சிறைப்புறமாக, அதனை உணர்ந்த தோழி சென்று அவனைச் சந்தித்து, தலைவியின் வேட்கை நோய் மிகுதியைக் கூறியது இது. இதன் பயன் விரைவில் இவளை மணந்து கொள்க என்று வற்புறுத்துதல், இவளது ஆசை நிலைகளை எல்லாம் சொல்வதானால், அவற்றை ஒருவர் எழுதி வருமிடத்து ஆயிரம் ஓலைக்கு எழுதக் காணும் என்பது ஆசை எல்லாம் சொல்லில் ஆயிரம் தோட்டு ஓலைக்கு அரும்புண் என்றதன் கருத்தாகும்.

கூரிய எழுத்தாணி கொண்டு ஓலையில் பதியும்படி எழுதலால், அதற்குப் பொறுத்தற்கு அரிய புண்ணாகும் என்று கற்பித்து ஓலைக்கு அரும்புண் எனப்பட்டது.

பெருமானைப் பிரிந்து வருந்தும் ஐயங்காரது நிலைமையை அன்பர்கள் அப்பெருமான் சந்நிதியில் விண்ணப்பித்தல் இதற்கு உள்ளுறையாம்.

துளவிலை யார்பொன் னடிமுடி சூட்டித்தொண் டாச்சியென்னை
வளவிலை யாக்கொண்ட நீகை விடேன்மங் கலகுணங்கள்
அளவிலை யாவலங் கார சமயிக ளாய்ந்தவண்ணம்
உளவிலை யாயுரு வாயரு வாய வொருமுதலே. (99)

மங்கல குணங்கள் அளவு இல் ஐயா, அலங்கார, சமயிகள் ஆய்ந்த வண்ணம் உள இலை ஆய், உருவாய், அருவாய ஒரு முதலே, துளவு இலை ஆர் பொன் அடி முடி

சூட்டி, என்னைத் தொண்டு ஆக்கிவள விலையாக் கொண்ட நீ கை விடேல்.

சமயிகள்-பல மதத்தவர்கள், உள இலை ஆய்- உள்ளனவும், இல்லனவும் ஆகி, அருவாய- ரூபமற்ற தாய, ஒரு முதலே-ஒப்பற்ற முதல்வனே, தொண்டு-அடிமை, வள விலையாக் கொண்ட-சிறந்த விலைப் பொருளாகக் கொண்ட.

திருக்கலியாண குணங்கள் அளவின்றி மிகப் பெற்ற சுவாமி! அழகனே ! தத்தமது நூல்களைக் கொண்டு ஆராய்ந்தவாறு உள்ளனவென்று கூறப்படும் பொருள் களும், இல்லை எனப்படும் பொருள்களும் உருவப் பொருள்களும், அருவப் பொருள்களும் ஆகின்ற ஒப்பற்ற முதற்பொருளே, துளசி இதழ்கள் பொருந்திய நினது திருவடிகளை என் சிரமேல் வைத்து என்னை அடிமையாக்கி, நல்ல விக்கிரயப் பொருளாகக் கொண்ட நீ கைவிடாதே.

என் முடியில் அடிவைத்து என்னை அடிமையாக்கிக் கொண்டு விலைக்கு வாங்கிய பொருளைப் போல அங்கீகரித்தருளிய நீ, அங்ஙனம் அடிமையான என்னைக் கைவிடாது காத்தருளக் கடவாய் என்பதாம்.

ஒருபா லமர ரொருபான் முனிவ ருடனிருந்தென்
இருபார் வையுங்கொண் டுவப்பதென் றோவிட பக்கிரிக்கும்
பொருபாற் கடற்கும யோத்திக்கும் பொற்றுவ ராபதிக்கும்
நிருபாவை குந்தமு நீவிற் றிருக்கின்ற நீர்மையுமே. (100)

இடபகிரிக்கும், பொருள்பால் கடற்கும், அயோத் திக்கும், பொன் துவராபதிக்கும் நிருபா, வைகுந்தமும், நீ வீற்றிருக்கின்ற நீர்மையும், ஒருபால் அமரர் ஒரு பால் முனிவருடன் இருந்து என் இரு பார்வையும் கொண்டு உவப்பது என்றோ.

பொரு - அலை மோதுகின்ற, பொன் - அழகிய, துவராபதி-துவாரகை, நிருபா-அரசனே, நீர்மை-தன்மை, ஒருபால்-ஒரு பக்கத்தில், பார்வை-கண், உவப்பது-மகிழ்வது.

திருமாலிருஞ்சோலை மலைக்கும், அலைகள் மோதப்பட்ட திருப்பாற் கடலுக்கும், திருவயோத் திக்கும், அழகிய திருத்துவாரகைக்கும் தலைவனே, ஸ்ரீ வைகுண்டத்தையும், அதில் நீ எழுந்தருளி இருக் கின்ற அழகையும், ஒரு பக்கத்தில் நித்திய சூரிகளுடனும், மற்றொரு பக்கத்தில் முக்தர்களுடனும் கூடியிருந்து எனது இரண்டு கண்களையும் கொண்டு வணங்கி பரம ஆனந்தம் அடைவது எந்நாளோ?

இங்ஙனம் தமது ஆதரத்தைக் கூறியதால், விரைவில் எனக்குப் பரமபதம் அளித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தவாறாம். இருவினைப் பாசத்தினுள் உட்பட்டு இப்பொழுது பக்தாத்மாவாயிருக்கிற யான், அந்தப்பக்கம் ஒழிந்து வீடுபெற்று, முக்தனாகி அங்கு நித்திய முக்தர்களின் குழு நடுவே இருந்து, ஸ்ரீவைகுண்டநாதனைத் தரிசித்து உயர்ந்தவன் ஆவது எப்பொழுதோ? என்கிறார். இது இப்பிரபந்தத்தின் ஈற்றுச் செய்யுள் ஆதலால், இதில் தமது முக்கியமான பிரார்த்தனையை வெளியிட்டு அவ்வளவோடு இப் பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

அமரர்-நித்திய சூரிகள், அவராவார்-பிறப்பு இறப்பு இல்லாமல் எம்பெருமானைப் போலவே என்றும் ஒரு நிலையாகப் பரமபதத்தில் வாழ்கிற அனந்த கருட விஷ்வக்சேனர் முதலியோர், இவர்கள் முக்காலத்தும் நிரந்தரமான பகவத் அனுபவத்தை உடையவர்கள். மநநசீலர்-அதாவது கடவுளை எப்பொழுதும் தொழுவோர்

என்று பொருள்படும். முனிவர் என்ற சொல் இங்கு முக்தர்களைக் குறித்தது. அவராவார்-இவ்வுலகங்களில் காமவசத்தராய் இருந்து பின்பு கடவுளருளால் பிறப்பை ஒழித்து முத்தி பெற்றவர். இவ்விரு திறத்து அடியவர்களே பரமபதத்தில் உள்ளனர்.

தற்சிறப்புப் பாயிரம்

அலங்கார ருக்குப் பரமச் சுவாமிக் கழகருக்குக்
கலங்காப் பெருநக ரங்காட்டு வார்க்குக் கருத்தன்பினால்
நலங்காத சொற்றொடை யந்தாதி யைப்பற்ப நாபப்பட்டன்
விலங்காத கீர்த்தி மணவான தாசன் விளம்பினனே. (101)

பற்பநாபப் பட்டன் விலங்காத கீர்த்தி மணவாள தாசன், அலங்காரருக்கு-பரமசுவாமிக்கு-அழகருக்கு-கலங்காப் பெருநகரம் காட்டுவார்க்குக் கருத்து அன்பினால் நலங்காத சொல் தொடை அந்தாதியை விளம்பினன்.

பற்பநாபப்பட்டன்-திருமாலின் அவதாரமான பெரிய பட்டரை, விளங்காத-விட்டு நீங்காத, கீர்த்தி-புகழ், கலங்காப் பெருநகரம்-திருவைகுந்தம், நலங்காத சொல் தொடை-வாடாத சொல் மாலையாகிய, அந்தாதியை-அந்தாதியாகிய இந்நூலை.

இச்செய்யுள், ஆசிரியர் தம்மைப் பிறர் போலக் கூறிய தற்சிறப்புப் பாயிரம்.

அலங்காரர் என்றும் மேலான சுவாமி என்றும் அழகரென்றும் திருநாமங்களை உடையவரும், அழி வில்லாத பெருமையுடைய பரமபதத்தைத் தமது அடியவர்க்கு வாழும் இடமாகக் காண்பித்து அருள்பவரு

மாகிய எம்பெருமானைப் பற்றி மனத்தில் கொண்ட மெய் அன்பினால் வாடுதல் இல்லாத சொல் மாலையாகிய இந்த அந்தாதிப் பிரபந்தத்தை ஸ்ரீமத் நாராயணனது அவதாரமான பெரிய பட்டரை அடைந்து அவரை விட்டு நீங்காதிருத்தலாகிய புகழையுடைய அழகிய மணவாளதாசன் விண்ணப்பம் செய்தான்.

இச்செய்யுளானது நூலாசிரியர் தாமே தம்மைப் பிறரைப் போல பாயிரம் கூறியது. இது தற்சிறப்பாயிரம் எனப்படும்.

இந்நூலகச் சுவடியில் செய்யுள் நிறைவுற்றதும் தொடர்ச்சியாகச் சுவாமி திருமாலிருஞ்சோலை அழகர் பாடி சுவாமிக்குச் சிறு வெண்மணி யகரத்துப் பிள்ளைப் பெருமாளய்யங்காரருளிச்செய்த கலித்துறை அழக ரந்தாதி முற்றும். ஆயனார் திருவடிகளே சரணம். என்றுளது.

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

(எண்: செய்யுளெண்)

அடைக்கலந்	79	கொண்ட மருந்தும்	78
அண்ணலை	86	கொண்டலை யா	23
அரியவ ரந்தந்	73	கொற்ற இராவணன்	89
அருடரு மங்கை	30	கோவலன்	25
அருளக் கொடி	92	சரணிய னாக	47
அல்லலங் காரை	96	சாற்றுக் கரும்பனை	17
அலங்காரன்	65	சிந்திக்கல் ஆரம்	76
அழுக்கன் றிய	16	சீர் அரிதாழ்	81
அளப்பது	71	சூட்டு ஓதிமம்	63
ஆதிய ராவிற்	37	செப்போ தனம்	20
ஆமவரைப் பணிந்து	67	செய்தவர் ஆக	10
இருக்கு	21	செல்லுக்குவளை	62
உடலம் புயங்கத்து	53	சேராத காத	15
உண்டு இறக்கும்	80	சோலை இல்லா	97
உய்வந் தொழும்பு	57	தஞ்சந் தனமென்று	39
உயிர்க்கும்	93	தனத்துக் கராவிய	28
உரை மாற்றம்	2	திங்களப் பாநின்ற	36
உலகு உதிக்கும்படி	74	திருவிளை யாடு	58
என்று தரங்கலந்	24	துளவு இலை ஆர்	99
எனக்கா வியங்கு	50	தெய்வம் பல	22
ஏத்துமின்	9	தேரா யிரவு	33
ஒருபால் அமரர்	100	தேவரை யாதன்	43
கண்டா கனன்	55	தேற்றுவித்தால்	85
கவித்தானை	38	தொண்டுப டார்	56
கழலப் புகுந்த	27	தொலைந்து ஆனை	83
காதலைப்பத்தினி	29	நகரமு னாடும்	46
காப்ப வனந்த	54	நண்ணின னாக	26
காமத்தனை	59	நம்பி நின்றேன்	88
கால் அம் அலைக்கும்	91	நன்னுதலைப்பணி	82
கூடுகைக்கும்	7	நாமங்க ளாவி	14

நிலையாமை யான 12
நின்றபி ராணன் 6
நினைப்பரி யா 52
நீராழி வண்ணனை 1
நெஞ்சமு ருக்கு 13
நெஞ்சிலம் 84
நேராய வேதனை 40
படராகு வால் 35
பணிபதி வாட 94
பரந்தா மரை 32
பருப்பதந் தாம 75
பாதக ரத்தனை 95
பாவிக் கமல 61
பித்தரும் பா 4
பின்னிறப் பும்பிறப் 69
பிழைத்தலை 41
புரந்தர னாமெ 5
புலமையி லே 87
பேணிக் கவித்த 34
போதகத் தானும் 60
போற்றியி ராம 70
மணவாள ராவி 51
மருந்துவந் தார் 18
மாணிக் கனகம் 3
மாதவ ராலும்ப 72
மாலைக் கரும்பு 98
முத்தரன் றே 31
முதுவிருந் தா 48
மெல்லிய லைப்பரி 68
மொழித்தத்தை 90
மோதாக வந்தனை 42
வாசம் பரந்த 64
வானவ தாரணி 66
வாழு மின் 44
வித்தக ரும்பர் 8
வினைக்கு மருந்தரி 11
வினையாட்டி யேன் 49
வீழும ராமர 45
வெறுத்தவ 19
வைதா ரையுமுன் 77

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலக அச்சகம்